விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை (19.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## அரசியலில் தீர்க்கமான 'இந்த வாரம்'

# கதிரை சின்னத்தில் மகிந்த?

(கொழும்பு)

இலங்கை அரசியலில் இந்த வாரம் தீர்க்கமான சில தீர்மானங்களை எடுக்கும் வாரமாக அமையப் போகின்றது. 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுமா? அல்லது நாடாளு மன்றம் கலைக்கப்படுமா? என்ற கேள்விகள் இலங்கை அரசியலை ஆக்கிரமித்துள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகி பொது ஜன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிடுவாரென்றும் அரசியல் வட்டா ரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அரசியல்! எண்ணமே இல்லை



(கொழும்பு)

தனக்கு மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ 15 ஆம் பக்கம் பார்க்க....

## நிச்சயமற்ற நிலையில் 19ஆவது திருத்தம்

(கொழும்பு)

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் குறித்த குழுநிலை விவாதங்களில் மேலும் புதிய விடயங்கள் சேர்க்கப்படலாம் என எதிர் கட்சிகள் தெரிவித்து வருவதுடன் 19ஆவது திருத்தத்துடன் ஒன்றாக தேர்தல் சீர்திருத்தங்களையும் (20ஆம் திருத்தம்) நிறைவேற்ற வேண்டுமெனவும் தொடர்ந்து வலியுறுத்தி வரு 15 ஆம் பக்கம் பார்க்க....

## இந்நாள் - முன்னாள் முதல்வர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் மீண்டும் யாழ். திரும்பியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை சுமார் ஒரு மணி நேரம் சந்தித்து உரையாடியிருந்தார்.

இச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண முதலமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றிருந்தது.

இலங்கை வந்துள்ள வரதராஜப்பெருமாள் தாம் கட்சி சாராத அரசியல் 15 ஆம் பக்கம் பார்க்க....

## குடிநீரில் கழிவு ஒயிலா?


## ராடரை பயன்படுத்தி ஆய்வு ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளமையினைக் கண்டறியும் வடக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் மேற்பார்வையில் ராடர் கருவியைப் பயன்படுத்தி ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்ட குறித்த ராடர் 15 ஆம் பக்கம் பார்க்க....

## குருவாயூரப்பா காப்பாற்று...!



(கேரளா)

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்.

நேற்றுக் காலை இந்தியாவின் கொச்சின் விமான நிலையத்தை தனது மனைவியுடன் சென்றடைந்த அவர், அங்கிருந்து நேரடியாக குருவாயூர் ஆலயத்திற்கு சென்றார்.

அங்கு அவர் பூஜையில் கலந்து கொண்டு தனது எடைக்கு ஏற்ப 77 கிலோ சந்தனக் கட்டைகளை தட்சணையாக (துலாபாரமாக) கொடுத்து வழிபட்டார். 15 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவதா? 'யார்' சொன்னாலும் கேட்கமாட்டோம்

### மாவை சேனாதிராஜா உறுதி



(யாழ்ப்பாணம்)

யார் வந்து சொன்னாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யமாட்டோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உறுதிபடக் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தமிழரசுக் கட்சியின் ஏக போகம் அதிகரித்த நிலையில், ஏனைய கட்சிகள் புறக்கணிக்கப்பட தொடங்கியதும், கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றது.

எனினும், பல வருடங்களாக இந்த கோரிக்கையை தமிழரசுக்கட்சி கண்டுகொள்ளாமல் இருந்தது. இந்த நிலையில் சுவிஸிலுள்ள தமிழர் அமைப்பொன்றின் ஊடாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள கட்சிகளிற்கு கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தின் ஆரம்பத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பதிவின் அவசியத்தை மிக மென்மையாக, முன்னர் தீவிர அரசியல் செயற்பாட்டாளராக இருந்த ஒருவர் புரிய வைத்தார். எனினும், அதற்கு மாவை மறுப்பு தெரிவித்து விட்டார். இதனால் இரண்டு தரப்பிற்குமிடையில் விவாதம் ஆரம்பமானது.

கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென அவர்கள் உறுதியான நிலைப்பாட்டில் இருந்ததால், தமது இறுக்கத்தை படிப்படியாக அதிகரித்து, மாவையை வற்புறுத்தியுள்ளனர். ஒரு கட்டத்தில், கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென கடும்தொனியில் கூறியுள்ளனர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்டது. அதனால், கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென்பது எங்களின் விருப்பம் என உறுதியாக 15 ஆம் பக்கம் பார்க்க....

அனைவருக்கும் SISIL WORLD நிறுவனத்தாரின் SONY SAMSUNG
10
SISIL மின்சார சேமிப்பு up to 50%
விலை கழிவு 3000/-
ரூ.41,999/=
SISIL WORLD
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335
இல.17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
DELL hp ASUS SINGER lenovo SISIL HITACHI
32" SONY விலை கழிவு 6,000/- ரூ.59,999/=
32" SAMSUNG விலை கழிவு 6,000/- ரூ.59,999/=
(C-737)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வாரங்களுக்குள் இரட்டை பிரஜாவுரிமை

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கான இரட்டை பிரஜாவுரிமை இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் வழங்கப்படும் என்று இலங்கையின் குடிவரவு மற்றும் குடிப்பெயர்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் இரட்டைப் பிரஜாவுரிமை கோரி கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களில், 300க்கும் அதிகமான விண்ணப்பதாரிகளுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படவுள்ளது.

அவர்களின் விண்ணப்பங்களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய விண்ணப்பங்களும் ஆய்வு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பிரஜாவுரிமை, குடிவரவுத்துறை அமைச்சின் காரியாலயத்தில் விசேட நிகழ்வொன்று ஒழுங்கு செய்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# விசேட கல்வி வலயங்களாகின கிளி., முல்லை மாவட்டங்கள்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை விசேட கல்வி வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளினது உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

சிவில் பாதுகாப்பு பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி கற்பித்து வரும் ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் நடத்தப்பட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுதொடர்பில் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் இல்லை-ராஜித

நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் இல்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். தேசிய கீதத்ததை தமிழில் இசைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் எவரும் கிடையாது என்பது புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம் கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் சிறுபான்மை மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்பட்டனர் எனவும் தற்போது அந்த நிலைமை மாறி அனைவரும் சகோதரர்களாக வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார். (11)

# பலாலி மக்களுடன் சிறிதரன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்ட பலாலி கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்களை நேற்று கூட்டமைப்பின் பா.உறுப்பினர் சி.சிறிதரன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது தங்களின் தேவைகள், அடுத்த கட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக மக்கள் பா.உறுப்பினருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இராணுவத்ததால் ஆக்கிரமிக்கப்பட்டு விடுக்கப்பட்ட பிரதேசத்தில் வீடுகள் இடித்து தரை மட்டமாக்கப்பட்டுள்ளதுடன், கழிவுகள் அதிகம் கொட்டப்பட்டும் கிணறுகள் இடித்து அவை கட்டப்பட்ட கற்கள் தோண்டி எடுத்து செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)


## ALL OUT
## Pest Control Service

**கறையான் தொல்லையா?**

உங்கள் கட்டங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.



தொடர்புகளுக்கு : ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

(121)

## முன்பள்ளி நிலையத்துக்கான அதிபர் பதவி (பெண்)

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமை உடையோர் விண்ணப்பிக்கவும்

1. யாழ்., நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.
2. முன்பள்ளி அதிபருக்கான கல்வித் தகைமை, அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.
3. சமூகத்தில் உயர் மதிப்புடையவராய் இருத்தல் வேண்டும்.
4. உடல், உள, ஆரோக்கியம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

மு.கு: விண்ணப்ப முடிவுத் திகதி
**30.04.2015**

முகவரி: இயக்குநர்
83/2, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(C-739)

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு. படிக்கும் மற்றும் வேலை பார்க்கும் பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்பு:-0702202206

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண கந்தர்மடத்தில் உள்ள வீட்டிற்கு நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (117)

தொடர்புகளுக்கு :- 0773611282

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகர்புறத்தில் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (113)

தொடர்புகளுக்கு :- 0724966082

## விற்பனைக்கு

ஒரு நாள் நல்ல இன ஊர்க் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. (085)

தொ.பே :- 0768079351

## Vacancies

**Branch Manager(Female) - B.B.A / B.Com**
2 years experience in a similar position

**Office Administrators (Female)- G.C.E A/L**
1 year experience in a similar position

**Teachers for Primary level (Female)**
Ability to handle English, Mathematics, Science, Computing, Geography & History
*1 year Teaching Experience at primary level (English medium)*

Apply With in 7 Days

**Teachers (Female) for**
Abacus, Sinhala, French, Key board, Art, Craft work, Chess & Carom

**IT - Tutors (Female)** - *HND IT, BSc. IT*

Visalam
127/1 Temple Road Jaffna
admin@visalamholdings.com

(ச-734)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION
MONEY TRANSFER

(ச-730)

## தேவை


புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்/பெண் வேலை ஆட்கள் தேவை. (யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதி விரும்பத்தக்கது) (123)

T.P :- 077 202 6295

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்

### பண்டிதர் விநாசித்தம்பி வேலுப்பிள்ளை (வேலாயுதம்)



(உரிமையாளர் சுதன் வெதுப்பகம், சுன்னாகம்.
முன்னாள் கூட்டுறவுச் சங்க கிளை, முகாமையாளர், நீர்வேலி)

இணுவில் மேற்கு, செட்டிவளவு ஒழுங்கை, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி வேலுப்பிள்ளை 16.04.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-சின்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா- அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மலர்விழி (லண்டன்), பாண்டியன் (சுதன் வெதுப்பகம்), செந்தாமரை (கோண்டாவில் ஸ்ரீ கணேசா அறநெறி பாடசாலை ஆசிரியை), சண்டிகா, காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் தயாளன் (லண்டன்), யோகசுதன் (லங்கா உருக்குக் கூட்டுத்தாபனம்-விற்பனைப் பிரதிநிதி, யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமார் (லண்டன்), காலஞ்சென்ற மோகனசிறி மற்றும் கைலையங்கிரிவாசர் (எழுதுவினைஞர்-யாழ்.பல்கலைக்கழகம்), செல்வராசா (ஆசிரியர் யாழ்/வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனும், குருசாமி(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), சிவராசா (விற்பனை முகாமையாளர் அண்ணா தொழிலகம்), திருமதி குணசிங்கம் தவமணி ஆகியோரின் மைத்துனரும், சோபிதன், சொரூபன், கௌரிசங்கர், தர்சிகா, பிருந்தா, டயானா, கிருபாகிரி, மதுரகீதன், ஓவியரூபி, இசைப்பிரியா, தசலோஜிதன், வியாபகி, தசானி, பவானுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.04.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

வே.பாண்டியன் சுதன் வெதுப்பகம், சுன்னாகம்
தொ.பே.இல:-0779264049

(120)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:-16.09.1981
மண்ணின் மடியில்:-19.04.2013

### மகாதேவன் சதீஸ்குமார் (லண்டன்)

ஆண்டு இரண்டு சென்றாலும்-எமக்கு ஆறாத காயமதை நீ தந்தாய்
ஆயிரம் ஜென்மங்கள் எடுத்தாலும் அழியாது உன் நினைவுகள்

பாசமான உன் உறவுகளை பரிதவிக்க விட்டுச் சென்றதென்னவோ..
பாவி உனக்கு பகைவர்கள் செய்த சூழ்ச்சியோ...
பாசமான அன்னையை நித்தம் தவிக்க விட்டு சென்றாயோ

அன்னை மடியில் உனை சாய்த்து முத்தமிட வருவாயா? அன்புயிரே உனை அரவணைக்கும்-தந்தை உனை நேசிக்கும் சகோதரர்கள் உனை தேடும் கணங்கள் வெறும் நினைவுகள் மட்டும் தானோ?...

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

சி.மகாதேவன் (மகான்)
குடும்பத்தினர்

(119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குமாகாணத்தில் வாழ்வாதாரமில்லை!

## தமிழகத்தில் கைதான ஈழ அகதிகள் வாக்குமூலம்

**(கொழும்பு)**

**வடக்கு மாகாணத்தில் தங்களுக்கான வாழ்வாதார வசதிகள் இல்லையெனவும் தமது பிள்ளைகள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தனுஷ்கோடிப்பகுதியில் வைத்து தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தமிழகத்தின் தனுஷ்கோடி அருகேயுள்ள அரிச்சல்முனை பகுதியில் கரைசேர்ந்த இலங்கை தம்பதியினர் மற்றும் அவர்களது மூன்று பெண் பிள்ளைகள் உட்பட ஐவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பேசாலை பகுதியிலிருந்து 25 ஆயிரம் இலங்கை ரூபாயை வழங்கி படகு மூலம் இவர்கள் தமிழகத்தை வந்தடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை அரிச்சல்முனையருகே இறக்கி விட்ட படகோட்டிகள் மீண்டும் மன்னாரை சென்றடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தரையிறங்கிய அத்தம்பதியினர், இலங்கையின் வடக்கு மாகாணத்தில் தங்களுக்கான வாழ்வாதார வசதிகள் இல்லையெனவும் தங்கள் மகள்மாரை கல்வி கற்பிக்க முடியவில்லை என்றும் வாதாடியுள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு அகதியாக சென்ற இவர்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு இலங்கைக்கு சென்றிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## மஹிந்த-சோமவன்ச சந்திப்பு

புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளருமான சோமவன்ச அமரசிங்கவுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கட்சிக்கான சின்னம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். (இ-5)


## காணி விற்பனை

மருதனார்மடப்பகுதியில் 4 பரப்புக்காணிவிற்பனைக்குள்ளது.

(088) தொடர்புகளுக்கு:077 328 8795

## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதனை அண்டிய பகுதியில் தனிவழியுடைய ஒரு அறை களஞ்சியமாக பாவிப்பதற்கு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:-
077 284 9686
(075)


# பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட யுவதி அடுத்தவாரம் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட மட்டக்களப்பை சேர்ந்த உதயசிறி என்ற யுவதி அடுத்த வாரம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவார் என ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஷிரால் லக்திலக தெரிவித்தார்.

நீண்ட நாள் விடுமுறை காரணமாக ஜனாதிபதியின் விடுதலைக்கான கடிதம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு அனுப்ப தாமதமாகியதனாலேயே விடுதலை தாமதமானதென்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் சிகிரியாவிற்கு சுற்றுலா பயணத்தை மேற்கொண்ட மட்டக்களப்பு சித்தாண்டியை சேர்ந்த யுவதி உதய சிறி சிகிரியா சிற்பங்களில் கிறுக்கியதால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

மிகவும் வறுமையான குடும்பத்தை சேர்ந்த இந்த யுவதி அறியாமல் செய்த தவறை மன்னித்து விடுதலை செய்யப்பட வேண்டுமென அவரது பெற்றோர் மற்றும் தன்னார்வ நிறுவனத்தினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். பாராளுமன்றத்திலும் இவ்விடயம் பேசப்பட்டது. இதற்கமைய இந்த யுவதிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கினார். அதற்கான கடிதத்திலும் கையெழுத்திட்டார்.

ஆனால் அக்கடிதம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கிடைக்காததால் உதய சிறியின் விடுதலை தாமதமானது.

ஜனாதிபதியின் கடிதம் விடுமுறைகள் காரணமாக தாமதமாகியதாலேயே இந்நிலை ஏற்பட்டதென்றும் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியின் கடிதம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் பின்னர் உதயசிறி விடுதலை செய்யப்படுவாரென்றும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரான ஷிரால் லக்திலக தெரிவித்தார். (இ-5)


## மரண அறிவித்தல்

Dr. **முத்துத்தம்பி வன்னித்தம்பி**
(M.D, M.B.B.S., F.R.C.P., D.T.D., M.Sc (Cardiology), Dip-in-Ultrasound & TB)



புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.முத்துத்தம்பி வன்னித்தம்பி அவர்கள் 17/04/2015 அன்று சிட்னி (அவுஸ்திரேலியா)யில் சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கதிர்காமதம்பி முத்துத்தம்பி- சின்னாச்சிபிள்ளை முத்துத்தம்பி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கைலாயர் வேலும்மயிலும் - விசாலாச்சிபிள்ளை வேலும்மயிலும் தம்பதியினரின் அருமை மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் Dr. கதிர்காமதம்பி (சிறி),Dr. இராமேஸ்வரன், மீனாம்பிகை (சட்டத்தரணி) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் தானியா, றோஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் மார்க்கஸ், லியோன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற நாகபூசனியம்மாள் சர்வானந்தா, மாசிலாமணி அமிர்தானந்தா, புவனேஸ்வரி முத்துத்தம்பி ஆகியோரின் சகோதரனும் சரஸ்வதி, கைலாயநாதர்(U.K), காலஞ்சென்றவர்களான அமிர்தானந்தர், சர்வானந்தர், கமலாம்பிகை, குமாரசாமி, ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற விஸ்வநாதர் தர்மலிங்கம் (பா.உ) அவர்களின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 23/04/2015 வியாழனன்று அவுஸ்திரேலியாவில் (Liberty Funerals, 101, South Street,Grandwill மலர்ச்சாலையில்) நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

(115) **தகவல்:தர்மலிங்கம் சித்தார்த்தன்,கந்தரோடை**


## இராசி பலன்

19.04.2015
(சித்திரை 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.13 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 4.21 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

வளவன்

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்,சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்,பணவரவு திருப்தி தரும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை

**மேடம்:** கனவு பலிதமுணடு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர் பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண் டிய நாள்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்,பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்,குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கடகம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்ல தகவலைத் தரும் தொலைபேசி அழைப்புகள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மகரம்:** பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்,வாகன சுகமுண்டு, பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும்,முன்கோபமும் அலைச்சலும் அகலும், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்,பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்து முடிக்கும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**துலாம்:** பயணங்களால் பலனுண்டு, களஸ்திர நன்மையுண்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்,சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை,எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட தயாராகும் சோமவன்ச

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதாக ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நம்பிக்கையுள்ள, அனைத்து இனமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே எனது இலக்கு என்றும் அவர் தெரிவித்தார்.

சோமவன்ச அமரசிங்க மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து விலகியதை அடுத்து அவரின் இத்தீர்மானம் குறித்து அரசியல் மேடைகளில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அவர் புதிய கட்சி ஒன்றை உருவாக்கபோவதாகவும், தம்மால் ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய கட்சியின் பெயர் மற்றும் தலைமைத்துவம் குறித்து எதிர்வரும் சம்மேளன கூட்டத்திற்கு பின் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எனினும் தான் ஸ்தாபிக்கவுள்ள புதிய கட்சி நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகளுக்கும் ஆதரவு வழங்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியுடன் மோதலில் ஈடுபடும் எண்ணம் எதுவும் தனக்கில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## அதிபர்களுக்கான மீளாய்வுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டமானது நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து அதிபர்களையும் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ)




## மரண அறிவித்தல்

### அமரர் இராசரத்தினம் யோகேஸ்வரன்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் யோகேஸ்வரன் 10.04.2015 வெள்ளிக்கிழமை அன்று நீர்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (காமாட்சி அம்பாள் கைத்தொழில் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர்) மற்றும் பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் சிவலிங்கம்- ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சாலினி மற்றும் சுமதி ஆகியோரின் பாசமிகு கணவரும், நிவேதாவின் அன்புத் தந்தையும், சத்தியதேவி (பிரான்ஸ்), தனேஸ்வரன் (ஜேர்மன்), லீலாவதி, பத்மாவதி (பிரான்ஸ்),உமாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் சிவராசா, கைடி, மகேந்திரன், சந்திரகுமார், கலைச்செல்வன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மிதிலா, மீரா, பிரசன்னா, சரண்யன், சோபிதா, நர்மதா, ஆதவன், தனுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண்யா, யூலியா, தகீர், சங்கீர்த்தனா, சஞ்ஜெய், ஜெனி ஆகியோரின் சித்தப்பாவும் பத்மநாதன், பாக்கியம் ஆகியோரின் பெறாமகனும் பவானி, பிரபாகரன், காலஞ்சென்ற பிருந்தா, ரதீபன், ஜெயவதனி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பிரண்டாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.04.2015 திங்கட்கிழமை நீர்வேலி வடக்கில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை நடராசா (பாலசுந்தரம்)

(முன்னாள் பல. நோ.கூட்டுறவுச்சங்க முகாமையாளர், மண்டைதீவு.
முன்னாள் கிராம சபை அங்கத்தவர்)

அன்னையின் மடியில் 12.04.1927
ஆண்டவன் அடியில் 22.04.2012

திதி: 19.04.2015

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் (மொந்திரோ) நாட்டை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் வேலுப்பிள்ளை நடராசா அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி.

ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஐயா அழியாது உங்கள் நினைவு
காலங்கள் பல ஆனாலும் ஐயா நெஞ்சதனை விட்டு ஆறாது– எம் துயர்
உம் நினைவுடன் வாழ்ந்த நாட்களை எண்ணியே வாழ்கின்றோம்– எந்நாளும்
பெற்றெடுத்த எம்மை பெருமையுடன் வளர்த்தீரே
பாரினிலே நாம் பரவசமாய் வாழ்ந்திடவே
பாதைதனை அமைத்து விட்டு பரமசிவன் பாதம் சென்றீரோ– ஐயா
கண்ணை இமை காப்பதுபோல் எங்களைப் பேணிக் காத்தவரே
கண் கலங்காமல் காலமெல்லாம் வாழ்ந்திடவே
வழி அமைத்து விட்டு கடவுளிடம் சரணம் அடைந்தீரோ– ஐயா
குழந்தைகள் நாம் குறைவின்றி வாழ்ந்திட வேண்டுமென்று
நிறைவாக எமை வளர்த்த நினைவாற்றல் எமக்குண்டு
நேர்மையாய் நாம் இன்று நேர்த்தியுடன் வாழ்வதனை
நெற்றிக் கண் உடையானுடன்– சேர்ந்தே
நீங்கள் பார்ப்பது நிறைவாக உள்ளதய்யா

மூன்றாண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சம் விட்டு அகலாதய்யா. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

தகவல்: மகன்
பாலேந்திரா- சுவிஸ் (ராசன்)
தொடர்புகளுக்கு:
0041[illegible]9641637

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு தமிழருக்கு முன்னுரிமையான விடயமல்ல

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இந்நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தேவை பட்டியலில் முன்னுரிமை கொண்ட விடயம் அல்ல என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

உண்மையில் இது அதிகமாக தேவைப்பட்டது சில பெரும்பான்மை கட்சிகளுக்கும், சில பெரும்பான்மை சமூக அமைப்புகளுக்குமே. இதை நாம் புரிந்துகொண்டு, தேசநலன் கருதியும், ஐக்கியம் கருதியும் விட்டுக் கொடுப்புகளுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க நாம் உடன்பட்டோம்.

இவ்விதம் புதிய ஜனாதிபதியையும், புதிய பிரதமரையும், புதிய அரசாங்கத்தையும் உருவாக்க பெரிதும் துணை வந்த எமக்கு இன்று துரோகம் இழைக்க பெரும்பான்மை கட்சிகளில் இருக்கின்ற சில சக்திகள் திட்டமிடுகின்றன என அவர் தெரிவித்தார்.

தேர்தல் முறை மாற்றத்தை சட்டமூலமாக அவசர, அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதியளிக்க முடியாது. இந்த அவசரம் இன்று அரசில் இணைந்து கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரிவிற்கே இருக்கின்றது.

இது தொடர்பில் ஒரு அமைச்சரவை ஆவணத்தை இவர்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்க முயல்கிறார்கள். இதை அமைச்சரவை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

இதை அமைச்சரவையில் உள்ள சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளின் தலைவர்களும், தமிழ், முஸ்லிம் அமைச்சர்களும் வலியுறுத்த வேண்டும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பம்பலப்பிட்டி மரீன் டிரைவ் "தி ஓசன் கொழும்பு" விருந்தகத்தில் கூடவுள்ள சிறு கட்சிகளின் கலந்துரையாடலில் இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து எமது ஒருமித்த முடிவையும், அடுத்த கட்ட நடவடிக்கையும் தீர்மானிக்க திட்டமிட்டுள்ளோம்.

எமது ஒருமித்த தீர்மானத்தை நாம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அறிவிப்போம். இந்த விடயத்தில் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயத்தை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இருக்கின்றது.

இது தொடர்பில் தேவை ஏற்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டோம். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எதேச்சதிகாரமான தேர்தல் முறை மாற்றத்துக்கு நாம் உடன் பட முடியாது. நீண்டகாலத்துக்கு ஒருமுறை நடைபெறும் இந்த தேர்தல்முறை மாற்றத்துக்கு நாம் உடன்பட்டால், அது இந்நாட்டு தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தையே அழித்து, ஒழித்து விடும்.

எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். எனவே இந்த கலந்துரையாடலில் கலந்து கொளும்படி அனைத்து சிறு கட்சிகளையும், பெரும்பான்மை கட்சிகளில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் பிரமுகர்களையும் நாம் அழைக்கின்றோம்.

இது தொடர்பில் தற்போது சிங்கள மொழி ஊடகங்கள் கூடிய அக்கறை காட்டுகின்றன. அதேபோல் தமிழ் ஊடகங்களும் அதிகூடிய அக்கறையை காட்டிட வேண்டும் எனவும் கோருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மீண்டும் அரசியலுக்குவரும் எண்ணம் எனக்கு இல்லை

## பசில் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் சகோதரரும் முன்னாள் பொருளாதார அமைச்சருமான பசில் ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் தனக்கு இல்லை என ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பாரியளவு ஊழல் மோசடிகள் அவர் மீது சுமத்தப்பட்டது.

திவிநெகும திட்டத்தில் 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவினை தேர்தல் செலவுக்காக பயன்படுத்தியதாக இவருக்கு எதிராக நீதிமன்றில் குற்றஞ்சுமத்தப்பட்டது. இதனால் இவருக்கு எதிராக கடுவெல நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இவர் அமெரிக்காவிற்கு தப்பி ஓடினார்.

இந்நிலையில் நாளை மறுதினம் 21 ஆம் திகதி மீண்டும் நாட்டுக்கு திரும்பவுள்ளார்.

நாட்டுக்கு திரும்பும் பசில் ராஜபக்ஷ தனக்கு மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என ஆங்கில ஊடகத்திடம் தெரிவித்தார். (இ-5)

# செலவதிகரிப்பு குற்றச்சாட்டை சீன வர்த்தக சபை நிராகரிப்பு

(கொழும்பு)

வடக்கு புகையிரத பாதை அமைப்பதற்கான செலவை காட்டிலும் தெற்கு புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கு அதிக செலவினத்தை காண்பித்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை, இலங்கை - சீன வர்த்தக சபை நிராகரித்துள்ளது.

சின்ஹுவா இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

வடக்கில் ஏற்கனவே காணப்பட்ட பாதை புனரமைக்கப்பட்டது.

ஆனால் தெற்கில் பல பாலங்கள், சுரங்கங்கள் என்பவை அமைக்கப்பட்டே புகையிரத பாதை நிர்மாணிக்கப்பட்டது.

இதனால் தெற்கு புகையிரத பாதை நிர்மாணப் பணிகளுக்கு அதிக செலவு ஏற்பட்டதாக அந்த சபை சுட்டிக் காட்டியுள்ளது. (இ-5)

# ஆப்கானில் பயங்கர குண்டுவெடிப்பு 33 பேர் மரணம்; 100 பேர் படுகாயம்

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் நகரில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பயங்கர இரட்டை குண்டுவெடிப்பில் சிக்கி 33 பேர் உயிரிழந்ததாகவும் சுமார் 100 பேர் காயமடைந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் நங்கஹர் மாகாணத்தில் நடத்தப்பட்ட இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலில் சுமார் 33 பேர் பலியாகி உள்ளனர்.

மேலும் 100 பேர் படுகாயம் அடைந்தனர். பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அச்சம் நிலவுகிறது.

குண்டுவெடிப்பு தனியார் வங்கிக்கு அருகே நடந்ததாக மாகாண காவல் ஆணையர் ஃபசல் அகமது தெரிவித்தார்.

தாக்குதலில் சிக்கிய அனைவரும் வங்கிக்கு வந்தவர்கள் அல்லது சாலையில் சென்று கொண்டிருந்தவர்கள் என்று கூறப்படுகிறது. (இ-5)

# விசர்நாய்க்கடி 59ஆயிரம்பேர் உயிரிழப்பு

விசர்நாய்க்கடி காரணமாக வருடம் ஒன்றிற்கு சர்வதேச ரீதியாக 59 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக புதிய ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய நாளாந்தம் 160 பேர் வீதம் பலியாகின்றனர். இந்த மரணங்களில் நூற்றுக்கு அறுபது சத வீதமானவை ஆசிய நாடுகளில் இடம்பெறுகின்றன.

இதேபோல, ஆபிரிக்காவில் 36 சத வீதமான மரணங்கள் விசர்நாய்க்கடி காரணமாக இடம்பெறுவதாகவும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# சாரதிகளுக்கான பற்றாக்குறை வடக்கு சாலையில் தொடர்கிறது

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்தியத்துக்கு தற்போது தேவைக்கு அதிகமான நடத்துநர்கள் கிடைத்துள்ளதாகவும் சாரதிகள் குறைவான அளவிலே தரப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய செயலாற்றல் முகாமையாளர் கே.கேதீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்து சாலைகள் வட மாகாணத்தில் 7 அமைந்துள்ளன. இதில் யாழ்ப்பாணத்தில் 3 சாலைகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு சாலையும் அமைந்துள்ளது. இங்கு பேருந்துகள் போதிய அளவு காணப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை தொடர்ந்து காணப்பட்டதன் காரணமாக மக்களுக்கு சேவைகளை உரிய முறையில் வழங்க முடியவில்லை.

எமது கோரிக்கையை அடுத்து தற்போது சாரதிகள், நடந்துநர்கள் தலைமைக் காரியத்தால் இங்கு அனுபபப்பட்டுள்ள போதிலும் அவை திருப்திகரமாக அமையவில்லை.

நாள் ஒன்றிற்கு 50 பேருந்துகள் சேவையில் இடம்பெறாமல் இருக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு சாரதிகள் தேவைப்பாடு அதிகமாகவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 3 சாலைகள் அமைந்துள்ள படியால் ஆளணிப்பற்றாக் குறை இங்கு அதிகம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (இ)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 55 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: B/553 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 12 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/977 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 26 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/555 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 53 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/978 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 06 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில்<br>தொ.இ: B/556 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 22 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/980 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14 செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: நோர்வே PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/557 | பிறப்பு: 1977 RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/989 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம்பைக் குறிச்சியில் 16 குரங்குகள் பிடிப்பு

வரணி கரம்பைக் குறிச்சி கிழக்கு பொதுமக்கள் ஒரே நாளில் 16 குரங்குகளைப் பிடித்துள்ளனர். குரங்குகளைப் பிடிப்பதற்கென வடிவமைக்கப்பட்ட விசேட கூண்டினுள் குரங்குகள் வரவழைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை ஒரேநாளில் 16 குரங்குகள் பிடிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பகுதியில் குரங்குகளின் நடமாட்டத்தினால் விவசாயிகளும் பழமரச் செய்கையாளர்களும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வந்தனர்.

இந்நிலையில் விவசாயத் திணைக்களம் வனவிலங்கு கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் தென்மராட்சிப் பகுதி விவசாயிகள் இணைந்து குரங்குகளைப் பிடிப்பதற்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இதன் விளைவாக குரங்குத் தொல்லை கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வருகைதந்த வனஇலாகா அதிகாரிகள் பிடிக்கப்பட்ட 16குரங்குகளையும் கொண்டுசென்றதுடன் அவற்றை பெருங் காட்டில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (இ-3-29)

## புள்ளிவிபரக் கிளை செவ்வாய் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக புள்ளிவிபரக் கிளை திறப்புவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10.45 மணிக்கு யாழ்.அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ஜே.சத்தியசிங்க புள்ளிவிபரக் கிளையைத் திறந்து வைக்கவுள்ளார். (இ-3)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 180ஆவது ஜெயந்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் தலைவர் சுவாமி சர்வரூபானந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் அ.நட்ராஜும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# சமுர்த்தி வங்கி குறித்து விழிப்புணர்வு வேண்டும்

சமுர்த்தி வங்கியின் (வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி) நடவடிக்கைகள், பயன்பாடுகள் குறித்து கிராமமட்டத்தில் கூடிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளர், கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 33 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும் 15 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களும் அமைந்துள்ளன.

இவை கிராம மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்டவையாகும்.

ஆனால் இந்த வங்கிகளின் பயன்பாடுகள் குறித்து போதுமான விழிப்புணர்வு மக்களிடையே இல்லாத காரணத்தால் அவர்கள் வங்கிகளூடாக கிடைக்கும் பயனை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

வாழ்வின் எழுச்சி கள உத்தியோகத்தர்கள் மூலம் போதிய விளக்கங்களைப்பெற்று கடன், நிவாரண உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தினால் கிராமமக்கள் மத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

சுயதொழில் கடன், விவசாயக் கடன், நுகர்வு கடன், சுபசக்தி கடன், மீன்பிடிக் கடன், வீட்டுக்கடன், மிகிஜய கடன், மகுட கடன், வாழ்வாதாரக் கடன், ரட்டவிருல கடன், சஹன அருண கடன் போன்ற பல வகையான கடன் வகைகள் மக்களின் சேமிப்பு பணத்தில் இருந்து கொடுக்கப்படுகின்றது.

எனவே சரியான முறையில் கிராம மக்கள் தமது வாழ்வாதார தேவைகளை எவ்வாறு முன்னேற்ற வேண்டும் என செயற்படும் போது அவர்களுடைய வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக நாம் சமுதாய அடிப்படை வங்கியூடாக பல உவிகளை செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யாழ் .நகரில் திருட்டுப்போன துவிச்சக்கரவண்டிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் பல்வேறு இடங்களில் திருட்டுப் போன துவிச்சக்கரவண்டிகளில் 11 துவிச்சக்கர வண்டிகளை யாழ்.பொலிஸார் மீட்டுள்ளனர்.இத்திருட்டுடன் தொடர்புடைய இருவரினையும் யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

யாழ்.மாநகரசபை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்சியொன்றில் 30 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப் போயிருந்தன.

இத்திருட்டுச்சம்ப வம் தொடர்பில் யாழ்.பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போதேஇத்திருட்டு துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

இத்திருட்டோடு சம்பந்தப்பட்ட அராலி, ஓட்டுமடம் பகுதியினை சேர்ந்த இருவர் யாழ்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் திருடிய துவிச்சக்கர வண்டிகளை பல இடங்களில் ப்துக்கியும் விற்றுமுள்ளனர்.

குறித்த இருவரும் வழங்கிய தகவலையடுத்து அனைத்து துவிச்சக்கரவண்டிகளையும் யாழ். பொலிஸார் நேரடியாக சென்று மீட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் மேலதிக விசாரணையின் பின்னர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் இவ்வாறான துவிச்சக்கரவண்டித் திருட்டுக்கள் யாழில் அதிகரித்து காணப்படுகின்றதனால் இது தொடர்பில் பொதுமக்கள் அவதான மாக இருக்க வேண்டும்.

மேலும் பழுதடைந்த துவிச்சக்கரவண்டிகளை வாங்குவோரும் விற்பனை செய்வோரின் சரியான உறுதிப்படுத்தலை மேற்கொண்ட பின்னரே வாங்க வேண்டும்.

சரியான உறுதிப்படுத்தல் இன்றி விற்பனை மற்றும் வாங்குவோர் குற்றவாளிகளாகவே அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என யாழ் பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி டபிள்யூ. ஜெயந்த தெரிவித்தார். (இ-4)

# நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றமே மரக்கறிகளின் விலையதிகரிக்க காரணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வெப்ப நிலை காரணமாக லீக்ஸின் விலை அதிகரித்துள்ளதாகவும் காலநிலை மாற்றத்தால் குறிப்பிட்ட காலத்திற்கு இவ்வாறான மரக்கறி விலை அதிகரிப்பு ஏற்படுகின்றது என வடக்கு மாகாண விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கீ.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

திடீரென சந்தைகளில் லீக்ஸ் விலை அதிகரிப்புக்கான காரணம் தொடர்பாக கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சீரற்ற காலநிலை மாற்றத்தால் மரக்கறி பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வதற்கு விவசாயிகள் விரும்புவதில்லை. இதனால் குறிப்பிட்ட காலங்களில் மரக்கறி விலை அதிகரித்து காணப்படும். இதனைநிவர்த்தி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை விவசாய திணைக்களத்தின்ஊடாகசெயற்படுத்திவருகின்றோம்.

அந்த வகையில் லீக்ஸ் ஈரலிப்பான காலநிலையில் பயிரிடக் கூடிய பயிர்ச்செய்கை ஆகும். அடுத்த கட்டமாக வைகாசி மாதத்தில் நாற்றுக்களை நட்டு விவசாயிகள் உற்பத்தியை மேற்கொள்வார்கள். அது வரை வெளிமாவட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் போது விலை அதிகரிப்பு ஏற்படும்.

இந்த விலை அதிகரிப்பை குறைப்பதற்காக தூவல் நீர்ப்பாசன முறை மூலம் எந்த காலநிலையிலும் பயிரிடக்கூடிய மாதிரி லீக்ஸ் செய்கை முறை தற்போது யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்றது.

இப்பயிர்ச் செய்கை முறையை ஏனைய விவசாயிகளும் நடைமுறைபடுத்தும் பட்சத்தில் வெப்ப காலங்களில் லீக்ஸ் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

வலிகாமம் தெற்கு,உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கலாசாரப் பேரவை, பிரதேச மலர் ஒன்றினை வெளியிடவிருப்பதால் அவற்றிற்கான தகுதிவாய்ந்த ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது.

இம்மலருக்கான ஆக்கங்களை அனுப்பவிரும்புவோர் ''கலாசார உத்தியோகத்தர்,பிரதேச செயலகம், உடுவில்'' என்ற முகவரிக்கு ஆக்கங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும் என பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.(இ-5)

## பரணி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்காதேவி தேவஸ்தான மன்மத வருட பிரதான உற்சவங்களில் சித்திரைப் பரணி இன்று 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மாவை-கலட்டி, பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் முற்பகல் 10 மணி வரையான சுபவேளையில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வு நாளை மறுதினம் 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இடம் பெறும். (இ

## விளையாட்டு விழா

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் பி.ப. 1.30 மணிக்கு பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண நிதி பிரதிப் பிரதம செயலாளர் இ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)







''வாடாமல்லிகை'' அண்ணா தொழிலக வளர்ச்சியும் எழுச்சியும் நூல் வெளியீடு அண்மையில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூல் வெளியீடு இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலடிச் சந்தியிலிருந்து பொன்னகருக்கு செல்லும் வீதியை செப்பனிடுவது எப்போது?

(முள்ளியவளை)

முள்ளியவளை 6 ஆம் கட்டை ஆலடிச் சந்தியிலிருந்து பொன்னகருக்குச் செல்லும் சுமார் 3 கிலோ மீற்றர் தூரமுடைய கிரவல் வீதி நீண்டகாலமாக செப்பனிடப்படாமை காரணமாக சேதமடைந்து குன்றும குழியுமாக பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் காரணமாக முப்பது வருடங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தின் திரியாய் புல்மோட்டை உட்பட பல கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்தோர் மேற்படி பொன்னகர் கிராமத்திலேயே வசித்துவந்த நிலையில் குடியேறியோரில் பலர் நிரந்தர வீடுகள் அமைத்து தமது காணிகளை அபிவிருத்தி செய்து தற்போது இக்கிராமத்தில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

அத்துடன் மக்களின் மீள் குடியமர்வின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசினால் வழங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டம் இக்கிராமத்தில் அமைந்துள்ளது.

இவ்வாறான அனைத்துக் குடும்பங்களும் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இவ்வீதியினையே பயன்படுத்தி வருகின்றனர. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியினை தாரட்டு செப்பனிடுவதற்கு உரிய வழிவகைகளை செயது உதவுமாறு கிராம மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (2-302)

## ஆற்றில் மூழ்கி இளைஞன் மரணம்

மன்னார் மடுக்கரை மல்வத்து ஓயா ஆற்றில் மூழ்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம பெற்றது. இந்த சம்பவத்தில் முகமட் நசீன் வயது (18) என்ற இளைஞனே பலியானவராவார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த இளைஞர் உறவினர்களுடன் மல்வத்து ஓயா மடுக்கரைப் பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளார். நீச்சல் தெரியாத இளைஞர் ரியூப்பின் உதவியுடன் ஆற்றில் மிதந்து உறவினர்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தார். பந்து கை தவறியதால் அதை எடுக்க ரியூப்பில் இருந்து இறங்கிய சமயம் ஆற்று நீரால் இழுத்துச் செல்லப்பட்டார். அவ ரைக் காப்பாற்ற உறவினர்கள் முயன்ற போதும் பலனிக்கவில்லை.

இதையடுத்து உறவினர்கள் கிராம சேவகருக்கு தகவல் வழங்கினர். இதனையடுத்து கிராமசேவகர், பொலிஸ், கடற்படை ஆகியோரின் தீவிரமான தேடலின் பின்னர் நேற்று முன்தினம் மாலை இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார். (2)

# சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது

(மல்லாவி)

**அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதைப் பொருள் பாவனை கட்டுப்படுத்தல் மற்றும் அதனை விநியோகம் செய்பவர்களைக் கைது செய்தல் எனும் வேலைத் திட்டத்தினூடாக நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் நடவடிக்கைமேற் கொண்டு வருகின்றனர்.**

இதற்கமைய ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியின் பிரதான பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.சனத் அமரசிங்கவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசேட சுற்றிவளைப்புக்கள் மூலம் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபவர்களைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்ற கசிப்பு உற்பத்தி, மரக் கடத்தல், மணல் கொள்ளை ஆகிய சட்டவிரோத குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாங்குளம் பொலிஸ் பரிசோதகரின் நேரடி உத்தரவிற்கு அமைய மாங்குளம் பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவின் உப-பொலிஸ் பரிசோதகர் யேசுராஜா ஜெரோசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் திள் சுற்றுவளைப்புக்களை மேற்கொண்டனர்.

இதன்போது மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியிலுள்ள பெரிய புளியங்குளம் கிராமத்தில் கடந்த 16ஆம் திகதி கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைது செய்தனர். இவர்களிடமிருந்து 60 லீற்றர் கசிப்பு ஸ்பிரிற் எனப்படும் ஒருவகைப் போதைப்பொருள் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அன்றைய தினம் இதே வீதியிலுள்ள ஒலுமடு கிராமத்தில் கசிப்பு உற்பத்தி செய்த நிலையம் ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் 80லீற்றர் கசிப்புக்கோடாவையும் அது தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பெண் உட்பட மூவரைக் கைது செய்துள்ளனர்.

ஏ-9 வீதியிலுள்ள திருமுறிகண்டி வசந்தநகர் கிராமத்தில் நேற்று முன்தினம் 3லீற்றர் கசிப்புடன் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அன்றையதினம் இரவு மாங்குளம் கற்குவாரி கிராமத்தில் சட்டவிரோதமாக காட்டு மரங்களை தரித்து 120 ரீப்பைகளை அரித்து வைத்திருந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 22ஆம் திகதி புதன் கிழமை மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றத்தினால் பிணையில் விடுக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)




### முள்ளியவளை சமுர்த்தி வங்கியூடாக

# கொடுப்பனவு வழங்கப்படும் பயனாளிகளின் தொகையை பட்டியலிட்டுக் காட்சிப்படுத்துக!




(முள்ளியவளை)

முள்ளியவளையில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி (சமுர்த்தி வங்கி) புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டு ஒருமாதம் பூர்த்தியாகாத நிலையில் அண்மையில் பெய்த மழையின்போது கூரையின் வாயிலாக நீர் உட்புகுந்தமையை கட்டுப்படுத்துவதற்காக கூரையின் மேல் தறப்பாள் இடப்பட்டு அதன் மேலே கல்லுகள் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கட்டடத்தில் வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருமாதம் நிறைவுறாத நிலையில் கட்டடத்திற்கு இப்படியான அவல நிலையாயின் நாட்கள் செல்லச் செல்ல கட்டடத்தின் நிலை என்னவாகும் என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டட நிர்மாணத்தின் போது உரிய தொழில்நுட்ப ஆலோசனையோ மேற்பார்வையோ பெற்றுக்கொள்ளாத காரணத்தால் இந்த நிலையென அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டடங்களிற்கு உரிய தொழில்நுட்ப அலுவலர்களின் ஆலோசனைகளும் மேற்பார்வையும் அவசியமென மேலதிகாரிகள் உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் கண்காணிப்பும் அவசியம் என சமூக ஆர்வலர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

மேலும் இந்த வங்கி ஊடாக பயனாளிகளுக்கு மாதாந்தம் உதவிகள் வழங்கப்படும் நாட்களில் அவர்கள் அதிகாலை 5.30 மணியிலிருந்தே கால்கடுக்க நின்று தமது வங்கிக் கணக்குப் புத்தகங்களை அடுக்கி வைத்துவிட்டு காத்திருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த வங்கியில் பயனாளிகள் காத்திருப்பதற்கு இருக்கைகளோ நிழல் தரும் மரங்களோ இன்றி கட்டடத்தின் ஓரத்திலும் பிரதான வீதியின் அருகேயுள்ள ஒரேஒரு மர நிழலின் கீழும் காத்திருக்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே ஒரு நாளைக்கு இந்த வங்கியூடாக எத்தனை பயனாளிகளுக்கு கொடுப்பனவை வழங்க முடியும் என்ற எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் வட்டார ரீதியிலோ அல்லது கிராம ரீதியிலோ பிரித்து பட்டியலிட்டு அதனை பொது இடங்களில் காட்சிப்படுத்தினால் பயனாளிகள் தமது கால நேரத்தை வீணடிக்காது அன்றாட கடமைகளை மேற்கொள்ள முடியும் என பயனா[illegible]ர்கள் தெரிவிக்கின்றனர். (2-302)

# மக்களுக்கு பக்கச்சார்பின்றி உதவிகள் வழங்க வேண்டும்

### வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



அபிவிருத்திகள் கிராம மட்டங்களில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எமது மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் ஆரம்பிக்கப்பட வேண்டும்என வடக்குமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பேசாலையில் மூன்று மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினூடாக உதவி த்திட்டம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை பேசாலை கிராம அபிவிருத்தி சங்கமண்டபத்தில்இடம்பெற்றது.

இதன்போது கணவனை இழந்தவர்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்ப அங்கத்தவர்கள் சுமார் 150 பேருக்கு உடுபுடைவைகள் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், சிறியளவில் இவ்வாறான வேலைத் திட்டங்கள் அனைத்துகிராமங்களுக்கும் கொண்டு செல்லும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பேசாலை முருகன் கோவில் பகுதிக்கு 2 மில்லியன்ரூபாசெலவில்அரைக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மக்களுக்கு என்னாலான சகல உதவித் திட்டங்களையும்வழங்குவேன் என அவர்உறுதிமொழிவழங்கினார்.

தேவை உள்ளவர்களை இனங்கண்டு சரியான முறையில் இவ்வாறான விடயங்களை நகர்த்த கிராம மட்ட அமைப்புக்கள்பக்கச்சார்பின்றி செயற்பட வேண்டும்.

இவ்உதவித் திட்டத்தில் விடுபட்டுள்ள 100 வீட்டுத்திட்டம் மற்றும் 50 வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளிலும் உள்ளவர்கள் மேற்படி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் இப்பொருட்கள் வழங் கப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசாலை மீனவர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பா.டெனீஸ்வரனிற்கும் இடையில் விசேட சந்திப்பு பேசாலை மீனவர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் அங்குள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் தொடர்பிலும் மற்றும் மானியங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் இந்திய இழுவைப்படகுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-28)



தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கற்சிலைமடு பிரிவில் நேற்று முன்தினம் புதுவருடவிழா கொண்டாடப்பட்டது. கற்சிலைமடு அ.த.க.பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் வன்னியூர் [illegible] "[illegible]க்கனவுகள்" எனும் கவிதை இறுவெட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் [illegible]த்தியசீலனினால் வெளியீடு செய்யப்பட்ட போது... (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் 20 ஆம் திகதி விவாதம் வேண்டாம்

## எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

**அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தை ஒத்தி வைக்கு மாறும் அதனை நாளை 20 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பி.யுமான டபிள்யூ ஜே.எம்.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தொன்பதாவது திருத்த விவாதம் நாளை 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்தப்படவுள்ள நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கி ழமை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடை பெற்றது.

இதில் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சிகளின் சார்பில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக டபிள்யூ.ஜே.எம்.செனவிரத்ன எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு திருத்தம் என்பது நாட்டிற்கும் மக்களுக்கும் முக்கியமானதாகும். எனவே அதனை அவசர அவசரமாக கொண்டு வரக் கூடாது. ஆழமாக ஆராய்ந்து விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும். 19 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எமது யோசனைகளை முன்வைத்ததோடு 19 ஆவது திருத் தத்தில எமது யோசனைகளையும் உளளடக்கிய திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை தெளிவாக எடுத்துக்கூறினோம்.

இத்திருத்தத்தோடு 20 ஆவது திருத்தமாக தேர்தல்கள் முறைமை மாறறத்தையும் பாராளுமன் றத்தில முன்வைக்கப்பட வேண்டும் என்றும கூறினோம். அரச தரப்பினர் இதனை ஏற்றுக்கொண்டதோடு இவ்விடயம் தொடர்பாக மீண்டும் சந்திக்கவும் இணக்கப்பாடு காணப்பட்டது.

அத்தோடு இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம்.

19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதை ஒத்தி வைக்கு மாறும் தேவையெனில் 20 ஆம் திகதி விவாதத்தை மட்டும் நடத்தலாம் என்றும் ஆனால் அனைத்தையும் விட இதனை ஒத்தி வைகக வேண்டுமென்பதையே வலியுறுத்தி னோம் என்றும் செனவிரத்ன எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்த ராஜபக்ஷவின் ஹெலிகொப்டர் கட்டணங்களைச் செலுத்த முடியாதாம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஹெலிகொப்டர் கட்டணங்களை செலுத்த முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் பிரசார நடவடிக்கைகளுக்காக ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஹெலிகொப்டர்களுக்கு கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால், ஹெலிகொப்டர்களை பெற்றுக் கொண்டவர்களிடம் அறவீடு செய்யுமாறு சுசில் பிரேமஜயந்த கோரியுள்ளார்.

சொந்த செலவிலேயே மகிந்த ராஜபக்ஷ ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கடிதமொன்றுக்கு விமானப் படையினர் விமானங்களை வழங்கியிருக்கமாட்டார்கள்.

பெற்றுக்கொண்டவர்களேதான் அந்த செலவுகளை ஈடு செய்ய வேண்டுமென சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## நாமல் உயன விவகாரம்; கான்ஸ்டபிள் கைதானார்

நாமல் உயன பகுதியில் வைத்து நேற்று முன்தினம் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

நாமல் உயன பிரதான தேரர் வனவாசி ராஹுல மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் இருவர் மீதே இந்த கான்ஸ்டபிள் மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொள்ளும் போது கான்ஸ்டபிள் மதுபோதையில் இருந்ததாக தெரிய வருகின்றது. (இ-5)

## குவைத்தில் கஷ்டங்களை அனுபவித்த பணிப்பெண்கள் நாடுதிரும்பியுள்ளனர்

குவைத்தில் பணிப்பெண்களாக சென்று பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய பணிப்பெண்கள் பலர் நேற்று நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குவைத்தில் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த நிலையில் இவர்களை இன்று தற்காலிக கடவுச்சீட்டில் நாட்டுக்கு அழைத்து வந்ததாக வேலைவாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

குவைத்திற்கு பணிப்பெண்களாக சென்று அங்கு பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த 80 பணிப்பெண்கள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்து நாடு திரும்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததனாலேயே இவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர.

தொழில் ஒப்பந்தங்கள் தொடர்பில் காணப்பட்ட சட்ட ரீதியான தடைகளை சமாளித்து மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்மேலும குறிப்பிட்டுள்ளது.(இ-5)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2015 19

- 1587 - ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.
- 1810 - வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.
- 1892 - ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ல்ஸ் டூரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.
- 1904 - கனடாவின் டொரோண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தது.
- 1928 - ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் 125 ஆவதும் கடைசியுமான தொகுதி வெளிவந்தது.
- 1936 - பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி தொடங்கப்பட்டது.
- 1954 - உருது மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.
- 1971 - முதலாவது விண்வெளி ஆய்வுகூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட் 1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1975 - இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1988 - அன்னை பூபதி மட்டக்களப்பில் ஆக்கிரமிப்பாளருக்கெதிராக உண்ணா நோன்பிருந்து இறந்தார்.
- 1993 - ஐக்கிய அமெரிக்கா, டெக்சாசில் டாவீடியன் என்ற மதக்குழு ஒன்றின் கட்டடத்தை 51 நாட்களாக சுற்றி வளைத்த அமெரிக்க FBIஇன் முற்றுகை கட்டடம் தீப்பற்றியதில் முடிவுக்கு வந்தது. 81 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - சந்திரிகா - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதனை அடுத்து திருகோண மலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.
- 1999 - ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகரு க்கு மாற்றப்பட்டது.
- 2006 - நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**பிறப்புகள்**

- 1832 - ஜொசே ஐசாகிர், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1916)
- 1912 - கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ. 1999)
- 1957 - முகேஷ் அம்பானி, இந்தியாவின் தொழிலதிபர்

**இறப்புகள்**

- 1882 - சார்ள்ஸ் டார்வின், பரிணாமக் கோட்பாட்டைக கண்டுபிடித்தவர் (பி. 1809)
- 1906 - பியரி கியூரி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1859)
- 1988 - அன்னை பூபதி, ஈழத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (பி. 1932)
- 1998 - ஒக்டாவியோ பாஸ், நோபல் பரிசு பெற்ற மெக்சிக்கோ எழுத்தாளர் (பி. 1914)
- 2013 - செ. குப்புசாமி தொழிற்சங்கத் தலைவர் (பி. 1926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைகேடு தொடர்பில் 50 விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து பொது திணைக்களங்கள் உள்ளூராட்சி அலுவலகங்களில் இடம்பெற்ற முறைகேடான நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, என்ப வற்றால் பாதிக்கப்பட்டோருடைய 50 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக முறைகேடுகளை விசாரணை செய்யும் குழுவின் தலைவரும் வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவருமான ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதலாம் மாதம் முதலாம் திகதியில் இருந்து 2015 ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் 15 ஆம் திகதி வரை திணை க்களங்கள் உள்ளூராட்சி அலுவல கங்களில் ஏற்பட்ட முறைகேடான நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பாக பாதிக்கப்பட்ட வர்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தோம்.

அந்த வகையில் எமக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றை பரிசீலனை செய்ய 20 ஆம் திகதி வடக்கு மாகாண பேரவை செயலகத்தில் விசாரணைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப விசாரணை கூட்டம் இடம்பெற்ற மூன்று மாதங்களுக்குள் இந்த விசாரணை தொடர்பான அறிக்கையை முதலமைச்சரிடம் கையளிக்கவுள்ளோம்.

இந்த அறிக்கை பாதிக்கப்பட்டவர்களை உரிய முறையில் விசாரணை செய்து பெறப்பட்ட நேர்மையான அறிக்கையில் அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் குழுவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், அ.பரம்சோதி, அ.அஸ்மின், த.சர்வேஸ்வரன், தா.லிங்கநாதன், க.விந்தன் கனகரட்ணம் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# சோமவன்ச விலகியமை ஜே.வி.பிக்கு நன்மையே

## ஐ.தே.க. மகிழ்ச்சி

(கொழும்பு)



**சோமவன்ச அமரசிங்க ஜே.வி.பி கட்சியை விட்டு விலகியமை அந்தக் கட்சிக்கு நன்மையையே ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.**

சோமவன்ச அமரசிங்க சட்சியை விட்டு விலகியமை கட்சியின் அபிவிருத்திக்கு வழியமைக்கும்.

பாரியளவில் பிரச்சினைகள், வன்முறைகள் நிலவிய காலப்பகுதியில் சோமவன்ச அமரசிங்க என்ன செய்தார்? என்ன நடந்தது? என்பதனை சற்றே சிந்தித்து பார்க்க வேண்டும்.

அன்று ஜே.வி.பியின் தலைவர் ரோஹன விஜேவீரவின் தலைமையில் எவ்வாறு செயற்பட்டது என்பதனை சிந்தித்து பார்க்க வேண்டும்.

அன்று அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பொலிஸார், படையினர் மற்றும் அப்பாவி பொது மக்கள் பாரியளவில் கொலை செய்யப்பட்டனர்.

அந்த நினைவுகள் மக்களை விட்டு இன்னமும் நீங்கவில்லை.

சோமவன்ச அமரசிங்க இன்றைய ஜே.வி.பியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்.

தற்போதைய ஜே.வி.பி ஜனநாயக நெறிமுறையில் பயணம் செய்கின்றது.

இந்த நெறிமுறை சோமவன்ச அமரசிங்கவிற்கு பிடிக்கவில்லையா?.

சோமவன்ச அமரசிங்க கட்சியை விட்டு விலகியமை தற்போதைய ஜே.வி.பி கட்சிக்கு நன்மையானதே என அமைச்சர் ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# 19 குறித்து மீண்டும் உச்சநீதிமன்றின் சட்ட விளக்கம் பெறப்பட வேண்டுமாம்

19 ஆம் திருத்தச் சட்டம் குறித்து மீண்டும் உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் சில புதிய பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் மீளவும் உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென சிறு கட்சிகள் சில சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கட்சித் தலைவர்கள் கூடி 19 ஆம் திருத்தச் சட்டம் குறித்து ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது மீளவும் 19 ஆம் திருத்தச் சட்டத்தை உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாளை 20 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது 19 ஆம் திருத்தச் சட்டம் குறித்து மீளவும் உச்ச நீதிமன்றில் சட்ட விளக்கம் கோரி, சபாநாயகரின் அனுமதியை பெற்றுக்கொள்ள சிறு கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (இ-5)

# இலங். பத்து பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக நிர்வாக உறுப்பினர்கள் நியமிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள 10 பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர ,ரஜரட்ட, கொழும்பு ,களனி, மொரட்டுவ, சப்ரகமுவ ,ஊவா வெல்லஸ்ஸ, தென்கிழக்கு கலை பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கே இவ்வாறு புதிய நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடமேல் மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கனவே நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

# ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள்

## தோல்வி பயமா?

ஐக்கிய தேசியக் கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

காமினி ஜயவிக்ரம பெரேரா, ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் ஜோன் அமரதுங்க போன்றவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு பதிலாக அவர்களது மகன்மார் மற்றும் உறவினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 120 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி திட்டங்களை வகுத்து வருகின்றது.

எவ்வாறெனினும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினால் கூடுதல் ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது என சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சிக்குள் நிலவி வரும் முரண்பாட்டு நிலைமைகள் அதிகரிக்கக் கூடுமென அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# சிங்கள இனவாத சக்திகள் எதிராகச் செயற்படுகின்றன

சிங்கள இனவாத சக்திகள் 19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாக பேராசிரியர் குமுது குசும் குமார தெரிவித்துள்ளார்.

கொழும்பு இடதுசாரி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள இனவாத சக்திகள் 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதனை தடுக்க முயற்சிக்கின்றன.

19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் உச்ச நீதிமன்றின் தீர்ப்பினையும் பிழையாக அர்த்தப்படுத்தி மக்களை பிழையாக வழி நடத்தி வருகின்றனர்.

இந்த சிங்கள இனவாத சக்திகளின் பிழையான பிரசாரத்தினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வருமான இடைவெளியைக் குறைக்க சகலநடவடிக்கைகளும் எடுக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களிடையே வருமான இடைவெளியை குறைப்பதற்கு சகல வழிகளிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொலநறுவை ஹிங்குராங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற வீடமைப்பு அமைச்சின் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்தார்.

செல்வந்தர்களுக்கும், வறியவர்களுக்கும் இடையிலான வருமான இடைவெளியை வரையறுக்க சகல முயற்சிகளும் எடுக்கப்படும். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் வரி அறவீடு செய்கின்றது.

நாட்டின் ஒருசில தரப்பினர் பாரியளவில் வருமானத்தை ஈட்டி வருகின்றனர். பெரும்பான்மையான மக்கள் மிகவும் குறைந்த வருமானத்தையே ஈட்டி வருகின்றனர்.

எனது ஆட்சிக் காலத்தில் இந்த வருமான இடைவெளியை குறைப்பதற்கு சகல வழிகளிலும் முயற்சிப்பேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## பாடும் பறவைகள்

"கையிலே என்ன வைத்திருக்கிறீர்கள்?"

"பஞ்சவர்ணக்கிளி சேர்... வாங்கிக் கொண்டு போகிறேன்... வளர்ப்பதற்காக....!"

"கிளி வளர்ப்பதிலே ஒரு ஆர்வமா உங்களுக்கு?"

"பொதுவாக பறவைகள்... என்றாலே எனக்கு அதிக விருப்பம்!"

"அப்படியா?"

"ஆமாம்....உங்களுக்குத் தெரியுமா....பறவைகள் பாடும்! அது இசைத்தட்டாகக் கூட வெளிவந்துள்ளது.....!"

"எங்கே...?"

"ஹங்கேரியிலே ஒரு பறவையியல் நிபுணர்.... அவர் முப்பது வருடங்களாக சேகரித்த பல்வேறு பறவைகளின் குரல்களை- பாடல்களை பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டிருக்கின்றார். 1987 ஆம் ஆண்டிலே இந்த இசைத்தட்டு வெளிவந்துள்ளது"

"ஆச்சரியமாகவுள்ளதே...!"

"பறவைகளின் குரல்களையும் பாடல்களையும் அவர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றார்... மனிதர்களைப் போலவே பறவைகளும் தங்கள் இயல்பான குரலிலேயிருந்து பல மடங்கு உச்சஸ்தாயிக் குரலிலேயும் ஏற்ற இறக்கத்துடனும் பாடுகின்றன...! 2 ஆயிரத்து 500 விதவிதமான பறவைகளின் குரலையும் பாடலையும் அவர் பதிவு செய்து பாதுகாத்து வைத்துள்ளார்.!"

"இவைகளையெல்லாம் கேள்விப்படுகின்ற பொழுது எனக்கும் கூட பாடத்தான் தோன்றுகிறது!"

"கவலைப்படாதீர்கள்...கற்றுத் தருகின்றேன்...!"

"அப்படியென்றால்...உங்களுக்கும்...?"

"ஆமாம்...ஏற்கனவே எனக்கும் ஓரளவிற்கு சங்கீத ஞானம் உண்டு. வீணை வாசிப்பேன்...அது தெரியுமா உங்களுக்கு?"

"ஆமாம். இந்த நிமிடமே கூட உங்களுக்கு முன்னால் என்னால் வீணை வாசித்துக் காட்ட முடியும்!"

"எப்படி முடியும்?"

ஒருகாகிதத்திலே வீணை என்று எழுதிக் கொடுங்கள்... அதனை வாசித்துக் காட்டுகின்றேன்!"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்

## குடும்பச் சனியின் ஆதிக்கத்தால் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்



**குடும்பச் சனியின் ஆதிக்கத்தால் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்!**

**அறிமுகமில்லாதவர்களிடம் கூட அழகாகப் பேசி அனைவர் மனதிலும் இடம் பிடிக்கும் துலாம் இராசி நேயர்களே!**

பதவி மாற்றத்தையும், இட மாற்றத்தையும் கொடுக்கும் பத்தாமிடத்துக் குருவின் வக்ர இயக்கத்தோடும், ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கத்தோடும் புத்தாண்டு பிறந்திருக்கிறது.

ஆண்டின் தொடக்கத்தில் மாபெரும் கிரகம் என்று வர்ணிக்கப்படும் சனி கிரகம் வக்ரம் பெறுகிறார். அதுமட்டுமல்லாமல் 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவானும் வருடத் தொடக்கத்தில் முதல் இரண்டு நாட்கள் வக்ரமாக இருந்து பிறகு வக்ர நிவர்த்தியடைகின்றார்.

ஆண்டின் பிற்பாதியில் அதிசாரம் பெற்றும், வக்ரம் பெற்றும் குருவின் சஞ்சாரம் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட அமைப்பில் இந்தப் புத்தாண்டு பிறந்திருப்பதால் வளர்ச்சியும், தளர்ச்சியும் இணைந்தே உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும்.

வருமானம் ஒரு நாள் அதிகரிக்கும், பற்றாக்குறை மற்றொரு நாள் வந்து சேரும். பகை ஒரு நாள் திடீரென உருவாகும், மறுநாளே அவர்கள் உறவாகி உங்கள மனதில் இடம்பிடிப்பர். ஆரோக்கியப் பாதிப்புகளால் அன்றாட மருத்துவச் செலவுகள் கூடும்.

புத்தாண்டு பிறக்கும் பொழுது குருச்சந்திர யோகம் உருவாகிறது. இதன் விளைவாக தொழில் வளர்ச்சி வருடத் தொடக்கத்தில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும்.

ஆண்டின் தொடக்கத்தில் 2 இல் சனி வக்ரம் பெற்றிருக்கிறது. எனவே, குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் சிக்கலகள் உருவாகி மறையும். திடீர் செலவுகள் உருவாகலாம்.

சப்தம ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கிறார்கள். அவரோடு விரய ஸ்தானாதிபதி புதன் இருப்பதால் மாமன், மைத்துனர் வழியில் விரயங்கள் ஏற்படலாம்.

அரசியல்வாதிகளாலும் சில அல்லல்கள் ஏற்படும்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

வருடத்தொடக்கத்தில் 10 இல் சஞ்சரிக்கும் குரு, வக்ர இயக்கத்தில் இருப்பது யோகம்தான். சென்ற ஆண்டில் சிக்கலாக இருந்த காரியங்கள்கூட சிரமமின்றி முடிவடையும். மேலும் 3,6 இற்கு அதிபதியான குரு வக்ரம் பெற்றிருப்பது நீங்கள் செய்த பாக்கியமாகும். கடகத்தில் உச்சம் பெற்றுள்ள குரு பகவான் தனது பார்வையை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிக்கிறார்.

இதன் விளைவாக குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களில் திருமணமாகாதவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களுக்கு திருமணத் தடை அகலும்.

சுக ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து, புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒரு சிலருக்கு நீண்ட தூரப் பயணங்கள் வந்து சேரும். தாய் வழி ஆதரவு பெருகும். ஆறாமிடத்தை குரு பார்ப்பதால் எதிரிகள் உதிரிகளாவர். இலாகா மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். குருவை வழிபட்டால் குதூகலம் அதிகரிக்கும்.

**பண வரவைக் கூட்டுமா பதினோராமிடத்து குரு!**

இதுவரை உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் பதினோராமிடமான சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு அதன் அருட் பார்வையை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிக்கப் போகிறார். குரு பார்க்கும் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடையும். அதற்குரிய ஆதிபத்யங்கள் துரிதமாக நடைபெறும்.

**மூன்றினை குருதான் பார்த்தால்**

**முன்னேற்றம் அதிகரிக்கும்!**

**ஐந்தினை குருதான் பார்த்தால்**

**அகிலத்தில் வெற்றி கிட்டும்!**

**ஏழினை குருதான் பார்த்தால**

**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது மூன்றாமிடத்தை பார்க்கும் குருவால் முக்கிய வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும். முன்னேற்றப் பாதையிலிருந்த தடைகள் அகலும். தக்க விதத்தில் ச[illegible] ஒத்துழைப்பு செய்வர். தலைமைப் பொறுப்புகள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

5 ஆம் இடத்தை பார்க்கும் குருவால் திருமணம், குழந்தைப் பேறு ஆகியவற்றில் இருந்த தடைகள் அகலும். செல்லக் குழந்தைகளுக்கு சிறப்பான கல்யாணத்தை நடத்திப் பார்க்கும் நிலை உருவாகும்.

குழந்தைகள் கடல் தாண்டிச் சென்று படிக்க விருப்பப்பட்டால் அதற்காகச் செய்யும் ஏற்பாடுகள் வெற்றிதரும். தேவைப்படும் தொகை கேட்ட இடத்திலிருந்து வந்து சேரும். பிரிவினையாகாத சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகல முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

வாங்கல்- கொடுக்கலில் இதுவரை இருந்த ஏமாற்றங்கள் அகலும். வலிமையான குரு சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும் பொழுது தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். பழைய பங்குதாரர்கள் விலகி புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து உங்கள் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொடுப்பர். அயல்நாட்டுப் பயணம்கூட கைகூடலாம்.




அதே நேரத்தில் உத்தியோகத்தில் உள்ளவர்கள் கம்பெனி சார்பாக வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கட்சிப் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் தேதி அன்று 8.1.2016 அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிப்பார். இதன் விளைவாக உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பது யோகம்தான். கேதுவும் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இக்காலத்தில் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறை[illegible]புகளை ஈடுகட்டுவீர்கள்.

அதிகார வர்க்கத்தினரின் அல்லலுக்கு ஆளானவர்கள் இப்பொழுது மகிழ்ச்சிக்குரிய விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வர். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும்.

ஊதிய உயர்வு, வரவேண்டிய தொகை போன்றவைகள் வந்து சந்தோஷத்தில் ஆழ்த்தும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பூர்வீகச் சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்குவதோடு அதில் ஒரு பகுதியை தொழிலுக்கும் முதலீடு செய்வீர்கள். இதுபோன்ற நேரத்தில் 11 ஆம் இடத்து ராகுவாலும் பாக்கியஸ்தான கேதுவாலும் சகல பாக்கியங்களும் வந்து சேர ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலம் அறிந்து சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். 12.06.2015 முதல் துலாம் ராசியில் வக்ரமடைகிறார். 30.07. 2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார்.

பிறகு 05.09.2015 இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியடைகிறார். பிறகு 26.03.2016 இல் விருச்சிக ராசியில் மீண்டும் சனி வக்ரமடைகிறார்.

உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகமானவர். அதிலும் சுக ஸ்தானத்திற்கும், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால் அவர் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் எல்லா யோகங்கள் அடுக்கடுக்காக வந்து கொண்டேயிருக்கும். அவர் பலமிழந்திருக்கும் நேரத்தில் பாதகங்கள் ஏற்படாமல் இருக்கப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. ஒருவரை சாதனையாளர் ஆக்குவதும் சனிதான். சோதனைகளுக்கு ஆட்படுத்துவதும் சனிதான்.

உங்களுக்கு நடைபெறும் சனி முதல் சுற்றா?, இரண்டாவது சுற்றா?, மூன்றாவது சுற்றா?, நான்காவது சுற்றா? என்பதை கணக்கிட்டுப் பாருங்கள். "மங்கு சனி" என்றால் மனக்கவலை ஏற்படும். "பொங்கு சனி" என்றால் பொருளாதார நிலை உயரும். "தங்கு சனி" என்றால் தடைகள் விலகும். சுற்றுகளில் உலா வரும் சனியைத் தொடர்ந்து நீங்கள் வழிபட்டு வந்தால் வெற்றிச் செய்திகளை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**குரு வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறும் பொழுதும், 07.02. 2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறும் பொழுதும் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். குறிப்பாக லாபம் எதிர் பார்த்தபடி வந்து சேரும்.

இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வீடு வாங்கும் அல்லது கட்டும் முயற்சியில் ஆர்வம் கூடும். பயணங்களால் பலன் கிட்டும். பால்ய நண்பர்களின் சந்திப்பால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.



**வருடம் முழுவதும் வசந்தம் பெற வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சுக்ரனைப் பலப்படுத்த வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து சாந்த ரூப அம்பிகையை வழிபாடு செய்யுங்கள்.

சனிக்கிழமை அன்று ஆதியந்தப் பிரபுவையும், ஆஞ்சநேயரையுமவழிபாடு செய்யுங்கள். மேலும தெசாபுத்திக் கேற்ற தெய்வவழிபாடுகளைச் செய்வதன் மூலம் தேக்க நிலை மாறி ஆக்கநிலை உருவாகும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துலாம் ராசியில் பிறந்த பெண்களே, ஆண்டின் தொடக்கத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தாய்வழி ஆதரவு பெருகும். சகோதரர்கள் வேண்டிய உதவிகளைச் செய்துகொடுப்பர். குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். கடல் தாண்டி செல்லும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. சென்ற ஆண்டு வரை உபயோகித்த பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய நகைகளை வாங்கி அணிந்து கொள்ளப் பிரியப்படுவீர்கள். குழந்தைகளின் முன்னேற்றம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும். ஏழரைச் சனியால் ஏற்பட்ட இழப்புகளை சனி விலகும் நேரத்தில் ஈடுசெய்யப போகிறது. விற்ற சொத்துக்களை மீண்டும் வாங்கி மகிழ்வீர்கள்.

மார்கழிக்கு மேல் மகிழ்ச்சி அதிகரிக்கும். தையில் புது மனை புகுவிழாக்கள்கூட நடத்திப் பார்ப்பர். சனி மற்றும் ராகு-கேது வழிபாடு நன்மையை வழங்கும்.

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

நாளை விருச்சிகம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 - ம் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் பிழையான கருத்துக்கள் முன்வைப்பு

(கொழும்பு)

**19ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் சில தரப்பினர் பிழையான கருத்துக்களை வெளிப்படுத்தி வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.உச்ச நீதிமன்றினால 19ஆம் திருத்தச் சட்டம் குறித்து வழங்கப்பட்ட தீர்ப்பினை சிலர் பிழையாக அர்த்தப்படுத்தியுள்ளனர். அதனை அவர்கள் ஈட்டிய வெற்றியாக காண்பிக்க முயற்சிக்கின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள் ளார்.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் அடிப்படை காரணிகளுக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்றது. உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தில் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

19ஆம் திருத்தச் சட்டத்தில் ஒரு சில சரத்துக்களுக்காக மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு அவசியமாகின்றது.

### ஜயம்பதி குற்றச்சாட்டு

19ஆம் திருத்தச் சட்டத்தின்பிரகாரம் பிரதமரின் ஆலோசனைக்கு அமைய அமைச்சரவையை ஜனாதிபதியினால் நியமிக்க முடியும். இதற்காக சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை.

மேலும் ஜனாதிபதி வேறு நபர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும். சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்கள் வெகுவாக குறைக்கப்படவுள்ளது.

இந்த 19ஆம் திருத்தச் சட்டத்தை இப்போது நிறைவேற்ற முடியாவிட்டால் வேறு எப்போதும் நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைக்காது.

19ஆம் திருத்தச் சட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சுயநலத்திற்காக உருவாக்கப்பட்டது என்பது பிழையான நிலைப்பாடாகும்.

19ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## நிதி நெருக்கடியில் மைத்திரி அரசாங்கம்

(கொழும்பு)

அரச செலவுகளை ஈடுசெய்வதற்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் சிக்கல் நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக திறைசேரி மற்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உள்நாட்டுசந்தையைப்போலவே, வெளிநாட்டு சந்தையிலும் கடன் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியான ஒரு நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளதாகவும்,

அரச ஊழியர்களின் செலவுகளை ஈடுசெய்வதற்கும் பணம் இல்லாத ஒரு நிலைமை உருவாகியுள்ளதாகவும் திறைசேரி மற்றும் மத்திய வங்கியை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## ஜே.வி.பியில் மீண்டும் இணையப்போவதில்லை

### சோமவன்ச உறுதி

(கொழும்பு)

ஜே.வி.பியில் மீளவும் இணைந்து கொள்ளப் போவதில்லை என கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியில் மீளவும் இணைந்து கொள்ளும் எவ்வித உத்தேசமும் கிடையாது.தீர்மானம் எடுப்பதற்கு சில காலம் காத்திருந்தேன், எடுத்த தீர்மானம் சரியானது மீளவும் அதில் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

எனது தீர்மானத்தின் பின்னணியில் எவ்வித சூழ்ச்சியும் கிடையாது. ஜே.வி.பி. அரசியல் ரீதியாக பலவீனமான நிலைமையை அடைந்துள்ளது. கட்சியின் இயலாமை நிலைமைக்கு அனைத்து தலைவர்களும் பொறுப்பு சொல்ல வேண்டும்.

தற்போதைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கட்சிக்கு கிடைத்த சிறந்த தலைவர்களில் ஒருவராவார்.பிரதான அரசியல் கட்சிகள் இரண்டினையும் மக்கள் நிராகரித்து வருகின்றனர்.மக்களுக்காக புதிய அரசியல் கட்சியொன்றின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது.

எனது தீர்மானமானது கட்சிக்கு எதிரானதல்ல, புதிய கட்சியொன்றை அமைக்கும் நோக்கில் எடுக்கப்பட்டதுமல்ல.ஜே.வி.பியை சரியான பாதைக்கு இட்டுச் செல்வதே எனது நோக்கம் என சோமவன்ச அமரசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-5)

## தேசிய துக்கதினத்தில் மதுபானம் விற்பனை!

### 13இலட்சம் அபராதம் விதித்த கலால் திணைக்களம்

தேசிய துக்க தினமன்று மதுபானம் விற்பனை செய்த நபருக்கு 13 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையமொன்றின் உரிமையாளருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அஸ்கிரிய பீடாதிபதியின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற தினமான கடந்த 12ஆம் திகதி, இலங்கையில் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த தினத்தில் குறித்த மதுபான சாலையின் உரிமையாளர் சட்டத்துக்கு விரோதமான முறையில் மதுபானங்களை விற்பனை செய்துள்ளார்.

இக்குற்றத்திற்காக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எல்.கே.எஸ். குணவர்தன வினால் குறித்த நபருக்கு 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இலங்கையர் உள்ளிட்ட வெளிநாட்டவர்களை வெளியேற்ற தென்னாபிரிக்கா கடும் முயற்சி

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் வெளிநாட்டில் இருந்து சென்று அங்கு முதலீடு செய்து வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை பலவந்தமாக நாடுகடத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து வந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை வெளியேற்றக்கோரி அந்நாட்டு மக்கள் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டில் இருந்து வந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது அந்நாட்டு மக்கள் தாக்குதல் நடத்தியும் வருகின்றனர். தென்னாபிரிக்காவில் பல இலங்கையர்கள் வர்த்தக முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இலங்கையர்கள் மீது எதுவிதமான தாக்குதல் நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானவர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கு அந்நாட்டு பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் சமபோச இலங்கைக்கு விஜயம் செய்து பல வர்த்தக நடவடிக்கைகளில் [illegible] சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### பண்டிதர் விநாசித்தம்பி வேலுப்பிள்ளை



இணுவில் மேற்கு செட்டிவளவு ஒழுங்கை இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி வேலுப்பிள்ளை கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### தளையசிங்கம் அகத்தியர்

(ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்ICSC சார்ஜன் மேஜர்)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கற்குளி வடக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் அகத்தியர் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


### வேலு சின்னராசா



யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கைதடி, அகத்தியர் வீதி தோணிக்கல் வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலு சின்னராசா கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தோணிக்கல்லில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### பழனி சண்முகராஜா



காரைநகர்பிட்டியெல்லையைபிறப்பிடமாகவும் டென்மார்க் குளோஸ்ரொப் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட பழனி சண்முகராஜா கடந்த31ஆம்திகதி அன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலையில் உள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் காரைநகர் கிழக்கு தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சிவசுப்பிரமணியம் பவானந்தன்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பவானந்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 10 மணிக்கு அவரது தயாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஏழாலை மேற்கு உசத்தியாவேடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### இராசரத்தினம் யோகேஸ்வரன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும்கவிணை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் யோகேஸ்வரன் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று நீர்வேலியில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை நீர்வேலி வடக்கில்உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப.11 மணியளவில் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### செல்லத்துரை இந்திரன்



கொக்குவில்பிடாரிஅம்மன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இந்திரன் கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை Oshwal Ekta Centre, 366A Stag Lane, Kingsbury, London, NW9 9AA, Unite Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சிவகணேசன் ராஜ்கிரன்



புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Lochem ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவகணேசன் ராஜ்கிரன் கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்பூதவுடல்நாளைமுற்பகல்10மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை Veluwezaal Van Crematorium,Imboslaan 6, 6952 JP Die ren, Netherlands என்னும் முகவரியில் தகனம்செய்யப்படும்.

### சதாசிவம் குணரெத்தினம்

(ஓய்வுபெற்ற வாழைச்சேனை காகித ஆலை நிர்வாக உத்தியோகத்தர்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில், வாழைச்சேனை, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் குணரெத்தினம் கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் நிறை அறிய விசேட திட்டம்

(கொழும்பு)

பொருட்களின் நிறைகளை நுகர்வோர் சரியாக தெரிந்து கொள்ளும் வகையில் விசேட திட்டமொன்றை அமுல்படுத்த நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இந்நடைமுறை எதிர்வரும் மே மாதம் முதல் அமுலுக்கு கொண்டு வரப்படும் என அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

இதன்படி நாடளாவிய ரீதியிலுள்ள விற்பனை நிலையம், மற்றும் வெதுப்பகங்களிலும் பிரத்தியேகமாக தராசு ஒன்றை கட்டாயம் வைக்குமாறு அவர் தெரிவித்தார்.

நுகர்வோர் கொள்வனவு செய்யும் பொருட்கள் அவர்கள் வழங்கும் பணத்திற்கு ஏற்றவாறு இல்லை எனவும், அவற்றின் எடை மிகக் குறைவாக காணப்படுவதாகவும் நுகர்வோரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இந்நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளதுடன், இரண்டாம் கட்டமாக பிரத்தியேக தராசு ஒன்று வைப்பதைக் கட்டாயப்படுத்தும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



# மக்கள் ஆதரவு என்றும் மகிந்தவுக்கே உள்ளது!

## கெஹலிய கூறுகிறார்

(கொழும்பு)

**தேர்தல் ஒன்றில் தோல்வியடைந்தவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது என்று உலகில எங்கும் சட்டம் இல்லை. எனவே மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவை அனைவரும கருத்திற்கொள்ளவேண்டும் என்று முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியல் செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த தடையும் இல்லை என்று ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அது சிறந்த விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவை அம்பாந்தோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் 37 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷவுடன் பாரிய அரசியல் சக்தி ஒன்று திரண்டுள்ளது என்ற விடயத்தை அனைத்து தரப்புக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் கண்டியில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் பகலுணவு ஒன்றுகூடல் ஒன்றுக்கு சென்றிருந்தேன். அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியல் செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த தடையும் இல்லை என்று கட்சியின் உயர்மட்டம் தீர்மானித்துள்ளதாக கட்சியின் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்திருந்தாலும் அவருக்கான மக்கள் ஆதரவு அவ்வாறே உள்ளது. தேர்தல் ஒன்றில் தோல்வியடைந்தவர் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது என்று உலகில் எங்கும் சட்டம் இல்லை.

அப்படியானால், 29 தடவைகள் தோல்வியடைந்த ஒருவர் தற்போது உயர்பதவியில் இருக்கின்றாரே? அத்ற்கு என்ன சொல்லப் போகின்றார்கள்?


இதேவேளை தற்போதைக்கு நாட்டில் தேசிய அரசாங்கம் அவசியமில்லை.

தேசிய அரசாங்கம் யுத்த காலத்தில் தேவையாக இருந்தது. சுனாமி போன்ற பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டபோது தேசிய அரசாங்கம் தேவையாக இருந்தது. ஆனால் தற்போது தேசிய அரசாங்கத்துக்கான அவசியம் இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் தொடர்ந்து அமர்த்துவதற்கே தற்போதைய தேசிய அரசாங்கம் உதவியாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## வடக்கில் முழுமையான நிர்வாகக் கட்டமைப்பு

அஜீத் பீ.பெரேரா தெரிவிப்பு



வடமாகாணத்தில் முழுமையாக பொது நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கட்டம்கட்டமாக மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நெதர்லாந்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து மீளாய்வு செய்யப்படுகிறது.

முழுமையான மீள்குடியேற்றம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பலரின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளமையையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# மீண்டும் பிளவுபடும் நிலையில் ஜே.வி.பி.

ரில்வின் சில்வா, கே.டி.லால்காந்த, விமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலக தீர்மானித்துள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே அக்கட்சியிலிருந்து விலகிய முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சோமவன்ச அமரசிங்க அக்கட்சியின் செயற்பாடுகளின் காரணமாக அதிருப்தியடைந்துள்ள ஆதரவாளர்களுக்கு தலைமைத்துவம் வழங்கும் வகையில் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த தலைவர்கள் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிச் செல்ல தீர்மானித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக அக்கட்சியின் அனைத்து முக்கிய உறுப்பினர்களும் சோமவன்சவுடன் இணைவதினால் கட்சி பாரிய பிளவுகளை சந்திக்க நேரிடும்.

இதேவேளை விமல் வீரவன்ச 1989ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு மே மாத நடுப்பகுதி வரை மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவராக இருந்தார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காரணமாக விமல் வீரவன்ச கட்சியின் தலைமை பொறுப்பிலிருந்தும், அதன் உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டதை தொடர்ந்து, மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தேசிய சுதந்திர முன்னணியை ஸ்தாபித்திருந்தார்.

இந்நிலையில் சோமவன்சவுடன் இணைந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டணியில் புதிய கட்சியை ஆரம்பித்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் இவர்கள் போட்டியிட வாய்ப்புள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 60 | 30-40 | 40 |
| தக்காளி | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 450 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 30 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 120 | 140 | 100 | 120 | 100 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 70 | 100 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 80 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 40 | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 100 | — | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 200 | 180 | 150 | 240 | 240 | 140 |
| பீற்றூட் | 60 | 40 | 80 | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 140 | 80 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 600 | — | 400 | 400-800 | 500 |
| போஞ்சி | 200 | 130 | 100 | — | 100-120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 | 30-40 | 20 |
| தேசிக்காய் | 160 | 160 | 120 | 120 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 50-60 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 120-200 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 30 | 30 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தவன் பெண்டிலை நேற்று வந்தவன் கொண்டு போனானாம்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எதிர்வரும் பொதுத் தேர்தல் கடும் போட்டி நிறைந்ததாக இருக்கும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்நோக்கு கின்ற சவால்கள், பிரச்சினைகள் அவருக்கு தாளாத தலையிடிகளைக் கொடுத்து வருகிறது.

அதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் பிரவேசிக்க இருக்கும் செய்தி ஜனாதிபதி மைத்திரிக்கு அதீத உபாதையைக் கொடுக்கிறது எனலாம்.

இதைவிட பாராளுமன்றத்தில் அமைச்சர்க ளுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருகின்ற நடவடிக்கைகளும் மகிந்த தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், மைத்திரி செய்யக்கூடிய ஒரே வேலை பாராளுமன் றத்தைக் கலைத்து விடுவதாகும்.

பாராளுமன்றத்தைக் கலைப்பது மைத்திரிக்கு ஆறுதலைக் கொடுத்தாலும் பொதுத்தேர்தல் நடந்து அதில் மகிந்த தரப்பு வெற்றியை சம்பாதித்துக் கொண் டால் நிலைமை மேன்மேலும் மோசமடையும்.

ஆக, பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணி வெற்றி சூடவேண்டிய தேவையும் உள்ளது.

இது நடக்காதவிடத்து, ஜனாதிபதி மைத்திரியின் எதிர்காலம் இடைஞ்சல்கள் நிறைந்ததாகவே இருக் கும். இந்நிலைமை தென்பகுதியைப் பொறுத்ததாக இருக்க,

பொதுத் தேர்தல் நடக்கும் போது வடக்கு மாகா ணத்தில் புதிய அரசியல் கட்சிகளும் களம் இறங் கும் வாய்ப்பு நிறையவே உண்டு.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியின் கீழ் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும்.

இங்குதான் ஆசனப்பகிர்வில் கருத்து முரண் பாடுகள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகும். தமி ழரசுக் கட்சியைப் பொறுத்தவரை கூட்டமைப்பின் வெற்றி என்பது தமிழரசுக் கட்சிக்கானது.

வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டால் வெற்றி உறுதி என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவதற்கு தமிழரசுக் கட்சி யின் முக்கிய தூண்கள் சம்மதிக்க மாட்டா. இந் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய கட்சிகள் முரண்பட்டுக் கொள்ளத் தலைப்படும்.

எனினும் தமிழ் மக்களின் வாக்குப்பலம் தமக்கே என்ற கர்வத்தில் தமிழரசுக் கட்சி தொடகிலும் விட்டுக்கொடுக்காத நிலையில் புதிய அரசியல் கட்சி கள் வடக்கு மாகாணத்தில் எழுகை பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

இங்கு புதிய கட்சிகள் என்பது ஏற்கெனவே இருந்த கட்சிகளின் கூட்டமைப்பாகக் கூட இருக்க முடியும். இங்கு வடக்கு மாகாணத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் என்பதில் தென்பகுதியில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற் றின் பிரசன்னமும் கனகாத்திரமாக இருக்கும் என் பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர் தலில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கடு மையான பிரசாரங்கள் வாக்குப் பலத்தை அடித்து சிதறிவிடக் கூடியதாக அமையும் எனலாம்.

## சுமார் 10 வருடங்களின் பின் சுதுமலை ஊடாக '771' பேருந்து சேவை

கடந்த 10 ஆண்டுகளாக தடைப் பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் இருந்து தாவடி -சுதுமலை - மானிப்பாய் -மரு தனார்மடம் ஊடாக சுன்னாகம் செல் லும் 771 இலக்க இ.போ.ச பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ள்ளது.

முன்னர் சுதுமலை மற்றும் அத னைச் சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள்,நோயாளர்கள் யாழ்ப் பாணம் செல்வதற்காக பேருந்தைப் பெறுவதற்கு சில கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

மக்களின் கஷ்டநிலை குறித்து இப் பகுதியிலுள்ள பல பொது அமைப்புகள் கள் பல தடவைகள் உரிய அதிகாரிக ளுடன் தொடர்பு கொண்டபோதும் பேரு ந்து இன்மையைக் காரணம் காட்டி பேருந்து சேவை நடத்தப்படவில்லை.

இருப்பினும் சுதுவை வாழவைக் கும் வாலிபர் சங்கத்தினர் உட்பட்ட பொது அமைப்புகள் எடுத்த முயற்சியின் பயனாகவும் யாழ்ப்பாணம் சாலைக்கு பேருந்துகள் கிடைத்திருப்பதாலும் சுதுமலை ஊடாக இடம்பெற்று வந்த பேருந்து சேவை புதுவருடப் பிறப்புடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவை ஒரு நாளைக்கு 5 தடவைகள் இடம்பெறும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் அரச உத்தி யோகத்தர்கள் நலன்கருதி சுன்னாகத் திலிருந்து ஆரம்பிக்கப்படும் 771 இல க்க பேருந்து சேவை மருதனார்மடம் மானிப்பாய் சுதுமலை தாவடி ஊடாக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து கச்சேரி வரை இடம்பெற்று வருகிறது.

பலத்த முயற்சியின் பயனாக ஆரம் பிக்கப்பட்டுள்ள குறித்த சேவையை பொது மக்கள் பயன்படுத்துமாறு பொது அமைப்புகள் கேட்டுக்கொண்டுள் ளன. (11)

### நேர அட்டவணை

சுன்னாகம் - யாழ்ப்பாணம்

| சுன்னாகம் | மருதனார் மடம் | மானிப்பாய் (மருதடிப்பிள்ளையார்) | சுதுமலை (அம்மன் கோயில்) | தாவடிச் சந்தி | யாழ்ப்பாணம் | கச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| காலை 6.40 | காலை 6.45 | காலை 6.50 | காலை 6.55 | காலை 7.05 | காலை 7.40 | காலை 8.05 |
| காலை 9.35 | காலை 9.40 | காலை 9.45 | காலை 9.55 | காலை 10.00 | காலை 10.30 | - |
| காலை 11.40 | காலை 11.45 | காலை 11.50 | காலை 11.55 | காலை 12.00 | காலை 12.40 | - |
| மாலை 3.30 | மாலை 3.35 | மாலை 3.45 | மாலை 3.55 | மாலை 4.00 | மாலை 4.25 | - |

யாழ்ப்பாணம் - சுன்னாகம்

| கச்சேரி | யாழ்ப்பாணம் | தாவடிச் சந்தி | சுதுமலை (அம்மன் கோயில்) | மானிப்பாய் (மருதடிப்பிள்ளையார்) | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 8.00 | காலை 8.25 | காலை 8.45 | காலை 8.50 | காலை 9.00 | காலை 9.15 | காலை 9.30 |
| - | காலை 10.40 | காலை 10.55 | காலை 11.00 | காலை 11.10 | காலை 11.20 | காலை 11.35 |
| மாலை 1.55 | மாலை 2.25 | மாலை 2.40 | மாலை 2.45 | மாலை 2.55 | மாலை 3.00 | மாலை 3.25 |
| | மாலை 5.30 | மாலை 5.55 | மாலை 6.00 | மாலை 6.10 | மாலை 6.15 | - |

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

19.04.2015 இன்று (ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.00 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் கடற்றொழி லாளரின் தொழில் சம்பந்தமான பிரச் சினைகளையும், பெண்களைக் குடும் பத் தலைவராகக் கொண்ட குடும்பங் களின் பொருளாதார பிரச்சினைகளை யும் கேட்டறிந்தும் பிரச்சினைகளுக் கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கான கலந்துரையாடல் திருமதி விஜயகலா மகேஸ்வரன்( பெண்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சரும், யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினரும்) அவர்கள் நட த்தவுள்ளார்.

இக் கலந்துரையாடலில் பொது மக் களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டா ளார்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (11)

## இயேசுவின் உயிர்ப்பு நம்பிக்கையின்மையை மாற்றி நம்பிக்கையை வளர்க்கட்டும்

உயிர்த்த இயேசு தமது ஏனைய சீடர்களுக்கு காட்சி கொடுத்த நிக ழ்வை பைபிளின் இந்தப் பகுதி எமக்கு இன்று தருகிறது.இயேசுவின் சீடர்கள் உயிர்ப்பின் சாட்சியத்தை முதலில் அனுபவித்தவர்கள்மூலம் கேட்ட றிந்தாலும் அந்தஉயிர்ப்பின் செய்தியை அவர்கள் முழுமையாக நம்பவில்லை. எனவேதான் உயிர்த்த இயேசு அவ ர்கள் நடுவில் நின்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று அவர் களை வாழ்த்தினார்.

அவர்களை வாழ்த்திய போதிலும் 'அவர்கள் திகிலுற்று, அச்சம் நிறை ந்தவர்களாய், ஓர் ஆவியைக் காண்ப தாய் நினைத்தார்கள்". இயேசுவும் அவர்களிடம் 'நீங்கள் ஏன் கலங்கு கிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்கிறீர்கள்?" என்று கேட்கிறார். இருப்பினும், அவர்களின் நம்பிக்கையின்மை யைப் போக்குவதற்காக இயேசு மூன்று செயல்களைச்செய்கிறார். தமது கைக ளையும், கால்களையும் அவர்களுக் குக் காண்பிக்கிறார். அவர்களிடமிரு ந்து மீன்துண்டு ஒன்றை வாங்கி அவர்களோடு அமர்ந்து உண்கிறார். மறைநூலை அவர்களுக்கு விளக்கி, அவர்களது மனக்கண்களைத் திறக் கிறார். இவ்வாறு அவர்களது உள்ளத்தி லிருந்த நம்பிக்கையின்மையை அக ற்றி, இறை நம்பிக்கையை ஊட்டுகிறார்.

சீடர்கள் மீன்பிடிக்கும் தொழில், தங்கள் பெற்றோர் எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவை நம்பி மூன் றாண்டுகள் வாழ்ந்தவர்கள். இந்த மூன்று ஆண்டுகளில் இயேசுதான் அவர்களது உலகம். அந்த உலகம் ஆணிவேரோடு வெட்டப்பட்டு, சிலு வையில் தொங்கவிடப்பட்டது. இயே சுவை அடித்தனமாய் வைத்து அவர் கள் கட்டியிருந்த பல மனக்கோட் டைகள் தரைமட்டமாக்கப்பட்டன. கல்வாரியில் அவர்கள் கண்ட காட்சி கள் அவர்களை முற்றிலும் நிலை குலையச்செய்து முடக்கிவிட்டன.

இயேசு அவர்கள் வாழ்வில் விட்டுச் சென்ற வெற்றிடத்தை, சந்தேகமும் பயமும் நிரப்பி விட்டன. எவரையும், எதையும் சந்தேகித்தனர். தங்களில் ஒருவனே இந்தக் கொடுமைகள் நடக் கக் காரணமாகியது அவர்களது சந் தேகத்தை இன்னும் அதிகமாக்கியது. அதுவரை அவர்கள் ஒருவர் மீது ஒரு வர் வைத்திருந்த நம்பிக்கை தொலை ந்து போனது. சிலுவையில் கந்தல் துணிபோல் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவை உடலோடு புதைப்பதற்கு முன்பே, மனதளவில் அவரைப் புதை த்து விட்டனர். அந்த கல்வாரி சிலுவைச் சம்பவத்திற்குப்பின் ஒன்றுமே இல்லை என்று முடிவு செய்துவிட்டனர். இன் னும் ஏதாவது மீதம் இருக்கிறதென் றால்,அது தங்கள் அழிவுமட்டுமே என்று அறிவு பூர்வமான ஒருமுடிவுக்கு வந்து விட்டனர்.

பயத்தில், சந்தேகத்தில், இருளில் இனி ஒளிந்துவாழ்ந்தால் போதும் என்று தீர்மானித்த அந்த சீடர்களை இயேசு அப்படியே விடுவதாய்இல்லை. அவர் கள் வாழ்வில் மீண்டும் நுழைந்தார். இயேசு வந்து நின்றதை அவர்களால் நம்பமுடியவில்லை. உடலோடு ஒரு வரால் வரமுடியுமா? முடியாது. இய ற்கை நியதிக்கு, அறிவியல் கூற்றுக ளுக்கு முரணான ஒரு செயல். இய ற்கைநியதிகள், அறிவியல் இவை மீறப்படும் போது, சந்தேகம் எழும். அறிவு அந்தச் செயலை ஏற்க மறுக்கும். ஆனால், அறிவு சொல்வதை மட்டும் வைத்து வாழ்க்கை நடத்திவிட முடி யாதே. நமது அறிவு ஒருவழியில் சிந் திக்கும்போது, "மனம்"- "ஆழ் மனம்" வெவ்வேறு வழியில், அறிவுக்கு முற்றி லும் மாறுபட்ட வழியில் சிந்தித்திருக் கிறதல்லவா? பலசமயங்களில் அறிவை விட மனம் சொல்வது மிக அழகா னதாய், அற்புதமானதாய், உண்மையாய் இருந்திருக்கிறது. உண்மைதானே? அறிவைமட்டும் நம்பி தங்கள் நம்பிக் கையை முழுவதும் இழந்திருந்த சீடர்க ளுக்கு அந்த அறிவுப் பசிக்குத் தன்னை தொட்டுப் பார்க்க விடு வதன் மூலம் உணவு போடு கிறார் இயேசு. அறிவு சொல் வதை மட்டும் நம்பி வாழ்வது போதாது, மனம், ஆன்மா இவைகளின் குரலுக்கும் நாம் செவிசாய்க்க வேண்டும்.



உயிர்த்த இயேசு அவர்களுக்கு சொல்லும் செய்தி: "உங்களுக்கு அமைதி உண்டாகுக!." கலங்கிப்போயி ருந்த சீடர்களின் கலக்கத்தை இயேசு அறியாதவரல்ல. அவர்களின் வேத னையை இயேசு உணராதவரும் அல்ல. அவருக்கு சாவின் பயம் நன்றாகத்தெரியும். ஏனென்றால், சாவை எதிர்நோக்கியிருந்த அவரே, கெத்சமெனி தோட்டத்தில், திகிலும் மனக்கலக்கமும் அடைந்திருந்தார். 'எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" என்று அவரே சொல்லியிருக்கிறார். எனவே, சீடர்களின் உணர்வுகளைப்புரிந்து கொண்ட இயேசு, அவர்களுக்கு அந்த நேரத்தில் எது தேவையோ, அதை அறிந்து வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறார். கலங்கிப் போயி ருக்கிற சீடர்களுக்கு அப்போதைய தேவை அமைதி. இயேசுவின் வார்த் தைகளைக் கேட்ட சீடர்களின் பய உணர்வுகள் அகன்று போனது. அவர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். உயிர்த்த இயேசு கலங்கிப்போயிருந்த சீடர்களுக்கு கலக்கத்தைப்போக்கி மகிழ்ச்சியைத் தருகிறார். எனவே நமது மனக்கலக்கங்களையும் ஐயங் களையும், அச்சங்களையும் தீர்க்க, உயிர்த்த இயேசு நம்மை அழைக்கி றார். தன்னைத் தொட்டுப்பார்த்து, நாம் நம்பிக்கையில் உறுதிபெற வேண்டும் என்பதை அவர் விரும்புகி றார். உயிர்த்த ஆண்டவரில் நாம் நம் நம்பிக்கையை வைப்போமா?

### பரமபிதா காட்டிய பாதை

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோல்டர் கன்னிச்சதம்

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்டை சமநிலை செய்தது மேற்கிந்தியதீவுகள்



இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஜேசன் ஹோல்டரின் சதம் மற்றும் கப்டன் ராம்தினின் பொறுப்பான ஆட்டத்தால் போட்டியை சமநிலை செய்தது மேற்கிந்திய தீவுகள்.

கடந்த 13 ஆம் திகதி தொடங்கிய இப் போட்டியில் நாணய சுழற்சியில் மேற்கிந்திய தீவுகள் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. துடுப்பாட களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 399 ஓட்டங்கள் குவித்தது. துவக்க வீரர்கள் தடுமாறிய போதிலும் நடுநிலை ஆட்டக்காரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 4 ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய பெல் 143 ஓட்டங்களும், 5 ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ரூட் 83 ஓட்டங்களும், 6 ஆவது விக்கெட்டுக்கு 79 ஓட்டங்களும் சேர்த்து அவுட்டானார்கள். மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில் ரோச் 4 விக்கெட்டுகளையும், டெய்லர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை துவக்கிய மேற்கிந்திய தீவுகள் தொடக்கத்தில் இருந்தே சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து வந்தது. எனினும் சந்தர்பாலும், பிளாக்வுட்டும் தாக்குபிடித்து விளையாடியதால் அந்த அணி 295 ஓட்டங்கள் குவித்து கௌரவமான ஸ்கோரை எட்டியது. சிறப்பாக விளையாடிய பிளாக்வுட் 112 ஓட்டங்கள் குவித்து அவுட்டாகாமல் களத்தில் இருந்தார். இங்கிலாந்து அணி தரப்பில் ட்ரெட்வெல் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

104 ஓட்டங்கள் முன்னிலை என்ற நிலையில் தனது 2 ஆவது இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து 3 ஆவது நாளான ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களை எடுத்திருந்தது. அப்போது பேலன்ஸ் 44 ஓட்டங்களுடனும், ரூட் 32 ஓட்டங்களுடனும் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர்.

4 ஆவது நாள் ஆட்டத்தில் ரூட் அரை சதம் அடித்து 59 ஓட்டங்களுக்கு அவுட்டானார். பேலன்ஸ் அதிரடியாக விளையாடி 122 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார். பின்னர் வந்த ஸ்டோக்ஸ் 35 ஓட்டங்களுக்கு அவுட்டாக, அதிரடியாக விளையாடிய பட்லர் 56 பந்தில் 59 ஓட்டங்கள் குவித்து அவுட்டாகாமல் களத்தில் இருந்தார். 7 விக்கெட்டுகள் இழந்து 333 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் தனது 2 ஆவது இன்னிங்சை டிக்ளேர் செய்தது இங்கிலாந்து.

438 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில், 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடக்க ஆட்டக்காரர் பிராத்வெய்ட் 5 ரன்களில் அவுட்டானார். அடுத்து பிராவோ, ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறிது நேரம் நிலைத்து நின்று ஆடிய போதும் 32 ரன்கள் எடுத்திருந்தபோது ரூட் பந்தில் ஆட்டமிழந்தார் பிராவோ. அதன் பின் சாமுவேல்ஸ், ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார்.

4 ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் சாமுவேல்ஸ் 2 ஓட்டங்களுடனும், சுமித் 59 ஓட்டங்களுடனும் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர். மேற்கிந்திய தீவுகள் அணி 2 விக்கெட் இழப்புக்கு 98 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று 5 ஆம் நாள் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்ற போது சுமித் 65 ஓட்டங்களில் அவுட்டானார். சிறிது நேரத்தில் சாமுவேல்சும் 23 ஓட்டங்களுக்கு நடையை கட்டினார். 5 ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய சந்தர்பாலும் நிலைத்து நின்று ஆடாமல் 13 ஓட்டங்களில் ரூட் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

முதல் இன்னிங்சில் சதமடித்த பிளாக்வுட்டும் 31 ஓட்டங்களில் அவுட்டாக, இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுவிடவேண்டும் என்ற எண்ணத்தில் போராடினர். இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் கப்டன் ராமதினும், ஆல்-ரவுண்டர் ஹோல்டரும் சேர்ந்து இங்கிலாந்து அணியின் எண்ணத்தை தவிடு பொடியாக்கினர.

இருவரின் பொறுப்பான ஆட்டத்தால் 7ஆவது விக்கெட்டுக்கு 105 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டது. அரை சதம் அடித்த ராம்தின் 57 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார். மறுமுனையில் தனது அரை சதத்தை பூர்த்தி செய்த ஹோல்டர் சதத்தை நோக்கி முன்னேறினார். 9 ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ரோச் கைகொடுக்க சர்வதேச அரங்கில் முதல் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார் ஹோல்டர். கடைசி ஓவரின் 4 ஆவது பந்து வீசப்பட்டவுடன் வெற்றி பெற வாய்ப்பில்லை என்று தெரிந்தவுடன் சமநிலை செய்ய முன்வந்தார் இங்கிலாந்து கப்டன் குக். இதையடுத்து போட்டி சமனானதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணி 2 ஆவது இன்னிங்சில் 7 விக்கெட் இழப்புக்கு 350 ஓட்டங்கள் குவித்தது. ஹோல்டர் 103 ஓட்டங்களுடனும், ரோச் 15ஓட்டங்களுடனும் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர். ஆட்டநாயகனாக ஹோல்டர் தேர்வு செய்யப்பட்டார். (க)



## 16 ஆண்டுகளுக்கு பின்னர் வங்கப் புலியிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்



பங்களாதேஷ் அணி 16 ஆண்டுகளுக்கு பின்னர் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானை தோற்கடித்துள்ளது.

டாக்காவில் பங்களாதேஷ்-பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி நடந்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி[...] இக்பால், முஷ்பிகுர் ரஹிம் ஆகி யோர் அபார சதமடித்து அசத்த 50 ஓவரில் 329 ஓட்டங்கள் எடுத்தது.

இதுவே இந்த அணியின் ஒரு நாள் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

330 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி சுமாரான தொடக்கம் கண்டது.

சர்பராஸ் அகமட் (24), மொகமது ஹபீஸ் (4) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 13 ஆவது ஓவரில் 59/2 என்று ஆனது.

அதன் பின்னர் அசார் அலியும், ஹாரிஸ் சோஹைலும் இணைந்து 89 ஓட்டங்களை 93 பந்துகளில் 3 ஆவது விக்கெட்டுக்காகச் சேர்த்தனர். அப்போது அசார் அலி, டஸ்கின் அகமதுவிடம் அவுட் ஆனார்.

32 ஆவது ஓவரில் 175/4 என்ற நிலையில் ஃபவாத் ஆலம், மொகமது ரிஸ்வான் இணைந்தனர். இருவரும் இணைந்து 40 ஆவது ஓவர் நடு வரையில் தாக்குப் பிடித்து ஸ்கோரை 217 ஓட்டங்களுக்கு உயர்த்தினர். தொடர்ந்து விக்கெட்டுகள் சரிய 45.2 ஓவரில் 250 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

முடிவில் பங்களாதேஷ் அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)

## அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி ஜேம்ஸ் அன்டர்சன் சாதனை



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை ஜேம்ஸ் அன்டர்சன் படைத்துள்ளார்.

வேகப்பந்து வீச்சாளரான அன்டர்சன், நேற்று முன்தினம் ராம்தி னின விக்கெட்டை வீழ்த்தி, இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவரும், வேகப்பந்து வீச்சாளருமான இயன் போத்தமின் சாதனையை முறியடித்தார்.

டெஸ்ட் அரங்கில் 100 போட்டி களில் பங்கேற்று 187 இன்னிங்சில் விளையாடியுள்ள அன்டர்சன் 384 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மாறாக இயன் போத்தம் 102 போட்டிகளில் பங்கேற்று 161 இன்னிங்சில் மட்டுமே விளையாடி 383 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

ராம்தினின் விக்கெட்டை அவர் வீழ்த்தி சாதனை படைத்ததும், இப் போட்டியை காண வந்திருந்த அன்டர்சனின் குடும்பத்தினர் கை தட்டி ஆரவாரம் செய்து வாழ்த்து தெரிவித்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுமினி சகலதுறையிலும் ஜொலிப்பு

# சன்ரைசர்ஸை வென்றது டில்லி



ஐதராபாத் அணிக்கெதிரான ஐ.பி.எல் தொடரின் நேற்றைய போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினம் ராஜசேகர ரெட்டி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத், டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் துடுப்பெடுத்தாட தொடங்கியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஸ்ரீரையாஸ் அரைசதம் கடந்து 60 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் டுமினி 54 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அஞ்சலோ மத்யூஸ் 15 ஓட்டங்களும், கேதார் ஜாதவ் 19 ஓட்டங்களும் எடுத்தனர்.

டில்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 167 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 168 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி.

20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 163 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

அணித் தலைவர் வோர்னர் 28 ஓட்டங்களும், ஷிகர் தவான் 18 ஓட்டங்களும், போபரா 41 ஓட்டங்களும், லோகேஷ் ராகுல் 24 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

டெல்லி அணி சார்பில் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்திய அணித் தலைவர் டுமினி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

## 17 இராணுவத்தினர் இராணுவ டிரக் விபத்தில் காயம்

(மட்டக்களப்பு)

இராணுவ டிரக் வண்டியும் டிரக்டரும் மோதி விபத்துக்குள்ளானதில் 17 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து ஹிரிதலேயை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இராணுவ டிரக் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (11)

## ரசலின் அதிரடியில்

# கொல்கத்தா வெற்றி



அன்ரூ ரசலின் அதிரடியான துடுப்பாட்டத்தால் பஞ்சாப்புக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் 8ஆவது சீஸனின் 13ஆவது லீக் போட்டி பஞ்சாப் - கொல்கத்தா அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெனற கொல்கத்தா அணித் தலைவர் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்படி களமிறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 156 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 17 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணியின் ரசல் தெரிவானார். (க)

## PEPSI IPL இன்றைய போட்டிகள்

ராஜஸ்தான் VS சென்னை
சார்டர் பட்டேல் அரங்கு, ஹைதராபாத்.
மாலை 4 மணி

பெங்களூரு VS மும்பை
எம்.சின்னச்சாமி அரங்கு, பெங்களூரு.
இரவு 8 மணி

## குதிரை...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட வாய்ப்பளிக்கலாம்.

ஆனால், பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள நிலையில், பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கும் மகிந்தவின் விருப்பமும் அவரை ஆதரிக்கும் முன்னாள் அமைச்சர்களான வாசுதேவ, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச மற்றும் புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில அணியினரும் சற்று தளர்ந்துள்ள நிலையில் சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தங்காலையில் மகிந்தவின் வீட்டுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பிக்கள் 37 பேர் உட்பட 60 இற்கு மேற்பட்ட முக்கியஸ்தர்கள் சென்று விருந்துபசாரத்தில் கலந்து கொண்டுள்ளனர். இதன்போது மகிந்தவின் எதிர்கால அரசியல் வியூகங்கள் தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

பிரதமராகவும், இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாகவும் பதவி வகித்த மகிந்த பொதுத் தேர்தலில் சாதாரண வேட்பாளராகக் களமிறங்குவதை விரும்பவில்லை என்றும்,

அதேவேளை சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காமல் போனால், இவ்வாறானதொரு நிலையிலேயே மக்களுக்கு நன்கு பரிச்சயமான பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரை சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இம்முன்னணியின் பொதுச் செயலாளரான முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன பதவி வகிக்கின்ற நிலையில் அதற்கான ஒப்புதலை வழங்க அவர் தயாராகவே இருப்பதாகவும் தெரிய வருகின்றது. இவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலை உருவாகுமானால் மகிந்த பிரதமர் வேட்பாளராகவும் அவரை ஆதரிப்பவர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக களமிறங்குவதற்கு மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலை உருவாகுமானால் மகிந்த பிரதமர் வேட்பாளராகவும் அவரை ஆதரிப்பவர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக களமிறங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டால் 113 இடங்களை பெற்றுக்கொண்டு மகிந்த பிரதமராக வாய்ப்பிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இலங்கை அரசியலில் இன்று கடும் சூறாவளி ஏற்பட்டுள்ளது. நாளை 20 ஆம் திகதி 19ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சி தேர்தல் முறை மாற்றத்திற்கான 20ஆவது திருத்தத்தையும் இணைத்து விவாதம் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் 19ஆவது திருத்தம் நிறை வேற்றப்படுமா? இல்லையா என்பதும் அரசியலில் ஊசலாடிக் கொண்டிருக்கும் பிரச்சினையாக தலையெடுத்துள்ளது.

எனவே இந்த வாரம் இலங்கை அரசியலில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் வாரமாக அமையலாம். 19 நிறைவேற்றப்படுமா ? அல்லது பாராளுமன்றம் கலைக்கப்படுமா? பொதுத் தேர்தலில் மகிந்தவின் வகிபாகம் என்னவென்பது வெளிவரலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது. (11)

## இந்நாள்...

செயற்பாடுகளில் ஈடுபட உத்தேசித்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் வைமன் வீதியில் உள்ள ஆறுதல் அலுவலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் 'முதலமைச்சராக எனது அனுபவம்' என்ற தலைப்பில் அவர் கருத்துரை வழங்குகிறார்.

அதன்பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியையும் அவர் சந்திக்கின்றார். (11)

## குருவாயூரப்பா...

இதன் பெறுமதி ரூபாய் 18 இலட்சம் ஆகும். மேலும் நெய்விளக்கு, பணக்கிழி, வாழை மரங்களையும் அவர் தானமாக வழங்கினார்.

பிரதமர் ரணிலுடன் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனும் சென்றிருந்தார்.

அவர்களுக்கு அங்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

மீனவர்கள் குறித்து ரணில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்களால், அவருக்கு எதிராகப் போராட்டங்கள் வெடிக்கலாம் என்று இந்திய மத்திய, மாநிலப் புலனாய்வுப் பிரிவுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

இதனிடையே, குருவாயூரில் வழிபாடுகளை முடித்தபின்னர், செய்தியாளர்களிடம் பேசிய ரணில், தான் இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ சார்பானவன் அல்ல என்றும், இலங்கையின் நலன்களை உறுதிப்படுத்த வேண்டிய ஒரு பிரதமராகவே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (11)

## ராடரை...

கருவி மூலம் சுன்னாகம் மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் கழிவு ஒயில் இருக்கும் பகுதி மற்றும் எங்கிருந்து கசிகின்றது, அதன் மையம் எது என்பது குறித்து நுணுக்கமாக ஆராயப்படவுள்ளது.

நேற்று ஆரம்பமாகியுள்ள பணிகள் தொடர்ந்தும் நடைபெறும் என தொழில் சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் குறித்த நிபுணர குழு ஏற்கெனவே நீர் மாதிரிகளுடைய பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆய்வினை கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் மேற்கொண்டு வருவதோடு ஆய்வின் முடிவில் வடக்கு மாகாண சபையிடம் அறிக்கை கையளிக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நிபுணர் குழு இது தொடர்பில் ஏற்கெனவே அறிக்கை சமர்ப்பித்துள்ள போதிலும் சிலர் அதனை ஏற்க மறுத்தமையினால் மீண்டும் ராடர் மூலமான ஆய்வுகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிபபிடத்தக்கது .(4)

## நிச்சயமற்ற...

வதால் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவது குறித்து நிச்சயமற்ற நிலை தோன்றியுள்ளதாக அரசியல்கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இரண்டு அரசமைப்பு மாற்றங்களையும் ஒன்றாக நிறைவேற்ற வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தொடர்ச்சியாக இந்த நிலைப்பாட்டை முன்வைத்து வருவதாக தெரிவித்துள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று முன்தினம் இடம் பெற்ற கட்சி தலைவர்கள் சந்திப்பிலும் இதனையே தங்கள் கட்சி வலியுறுத்தி யதாக குறிப்பிட்டுள்ளார்.

குழுநிலை விவாதத்தின் போது புதிய ஏற்பாடுகளை சேர்க்கலாம், இதன்மூலமாக சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும் ஏற்பாடுகளை கூட அவர்கள் கொண்டு வரலாம், நீதிமன்ற தீர்ப்பு இதில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

நாங்கள் எவரையும் அர சியலமைப்பை தங்கள் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் பயன் படுத்த அனுமதிக்க மாட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

## மீண்டும் அரசியல்...

தோல்வியடைந்ததை தொடர்ந்து பசில் அமெரிக்காவிற்கு தப்பி ஓடினார்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் பாரியளவு ஊழல் மோசடிகள் தொடர்பில் பசில் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய திவிநெகும திட்டத்தில் 6500 மில்லியன் ரூபாயினை தேர்தல் செலவுக்காக பயன்படுத்தியதாக இவருக்கு எதிராக நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டது. இதனால் இவருக்கு எதிராக கடுவெல நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்தநிலையில் நாளை மறுதினம் மீண்டும் பசில் நாட்டுக்கு திரும்பவுள்ளார். இவ்வாறு நாட்டுககு திரும்பும் பசில் ராஜபக்ஷ தனக்கு மீண்டும் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை என மேலும் தெரிவித்தார். (11)

## தமிழ்த்...

கூறியுள்ளனர்.

இந்த தர்க்கங்களின் இறுதியில், தமிழ் தேசிய கூட்டமைப்பை இப்போதைக்கு பதிவு செய்யும் எண்ணமில்லை. கூட்டமைப்பை பதிவு செய்யுமாறு உருவாக்கிய போதே சொல்லவில்லை. அதனால யார் வந்து சொன்னாலும் பதிவு செய்யும் திட்டமில்லை என மாவை அடித்து கூறிவிட்டார். இது பற்றி இறுதி முடிவெடுப்பதானால் கட்சியுடன் கலந்தாலோசித்துதான் முடிவெடுக்க வேண்டுமென்றார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் இறுதி முயற்சியை, அவர்கள் முன்னெடுத்தபோதும், அதுவும் தமிழரசுக் கட்சியின் விட்டுக் கொடுக்காத போக்கால் நிறைவேறாமல் சென்றுள்ளது.

சுவிட்சர்லாந்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் முயற்சியில் ஏடுபட்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிவாரி பட்டப்படிப்பை கற்க காத்திருக்கும் மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி**

- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ஒலுவில்) கலைமாணி (பொது) வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன (18.04.2015) முதல் மேற்கொள்ளப்படுகின்றது.
- பதிவுகளுக்கு மேலதிகமான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

**தொடர்புகளுக்கு : 077 662 4387**

**N J T பட்டப் படிப் புகள்**

இல. 55, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி, (122)

**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*சிறுவர்களிற்கான கற்கைநெறி

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்: KRC

(C-736)

**மருந்தாளர் தேவை**

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு மருந்தாளரும் உதவியாளரும் தேவை

**தொடர்புகளுக்கு : 0771728141**

(C-735)

**நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???**

இப்பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய 'றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்'

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து, தலைச் சருமத்திற்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து, முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

இன்றே நாடுங்கள்!
சிவா நறுமணப் பூங்கா
இல. 288,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பே. 021 222 2567

Quality Royal Akasthiya Hair Oil Guaranteed

அனைத்துப் பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:- Royal Industries Colombo-13

(C-731)

**O/L ENGLISH PAPER CLASS**

தரம் - 11 மற்றும் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர் களுக்கான கடந்த கால வினாத்தாள் மீட்டல்

**0767032047**

(உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா மற்றும் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்)

(112)




உங்கள் பணத்தை வீண் விரயம் செய்ய முன்னர் மீண்டும் சிந்தியுங்கள், ஆட்கடத்தல்காரர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa

# 31-ம் நாள் நன்றி நவிலல்



## திருமதி அன்னலெட்சுமி பாலசுப்பிரமணியம்

பிறப்பு : 16.02.1944
இறப்பு : 17.03.2015

எனது அம்மாவாகிய திருமதி அன்னலெட்சுமி பாலசுப்பிரமணியம் அவர்கள் 17.03.2015 அன்று அமரராகிவிட்டதை அறிந்து நேரில் வந்து எமது துயரத்தில் பங்கு பற்றியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும், தொலைபேசியூடாக எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் நோயுற்ற இருந்த நேரத்தில் உதவி புரிந்த யாழ்.போதனா வைத்தியசாலை 16-ம் பிரிவு, 18-ம் பிரிவு மருத்துவர்களுக்கும் தாதியர் களுக்கும், யாழ் நலன்புரி சங்கத்தினருக்கும் ஊழியர்களுக்கும் தொடர்ந்து யாழ். தெல்லிப்பளை பாதை புற்றுநோய் வைத்திய சாலையைச் சேர்ந்த 16-ம் பிரிவு மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும், நலன்புரிச்சங்கத்தினருக்கும் , மருதனார்மட காப்பகத்தில் இருந்து சேவையாற்றிய மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராசையா வீதி, 5 ஆம் வட்டாரம்
வேலணை வடக்கு. (114)

தகவல் : மகள் - பா.ரமணி

# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-732)

தொ.பே - 0776217926, 021 2217180

www.speedlanka.net



யாழ்.மாநகரில் தங்க நகைகளின் கரட் பரிசோதனை இயந்திரத்தை முதலில் அறிமுகப்படுத்திய சிறிராம் ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தினர் குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசயத் திருநாளாம்

# 'அட்சய திருதியை'

எதிர்வரும் ஏப்ரல் 21-ம் திகதி வருகின்றது. அன்றையதினத்தில் உங்களது சிரமத்தை தவிர்த்துக்கொள்ள முன்கூட்டியே



**சிறிராம் & சிறி அமலா ஜுவல்லர்ஸ்**

இல.158,193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 8334

(C-738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 19.04.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 11



# சந்திரிகாவா : மகிந்தவா அடுத்த பிரதமர் யார்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் துறவுக்கு மகிந்தவால் வரமுடியாது

போது பிரதமர் பதவியைக் கைப்பற்றவேண்டும் என்ற முடிவுக்கு மகிந்த முன் வருவார்.

எனினும் அவரின் விருப் பத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நிறை வேற்ற முடியாதென்பது திண்ணம். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் மகிந்த தலை மையில் புதிய அரசியல் கட்சி உதயமாகும் வாய்ப் புண்டு. இதற்குக் கட்டியம்


குருஷேத்திரம்

ஸ்ரீமான் ஜே.ஆர்.ஜயவர்த் தன கொண்டு வந்த நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நீண்ட காலத்தில் எத்தகைய விளைவை ஏற்படுத்தியுள் ளது என்பதை இப்போது அறியமுடிகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கைக்குப் பொருத் தமானதல்ல என்ற கருத்துக் கள் ஆரம்ப காலத்தில் இருந்தே கூறப்பட்டதாயி னும் ஆணைப் பெண்ணாக வும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் அதிகாரத்தைத் தவிர, மற்றெல்லா அதிகார மும் ஜனாதிபதியென்ற ஒருதனிமனிதனுக்கு வழங் கப்பட்டிருந்தமையால் ஜனா திபதி ஆட்சி முறையை இல்லாதொழிக்க அந்தப் பதவியில் இருந்த எவரும் முன்வந்திலர்.

இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக இருக்கமுடியும் என்ற எல்லை வரையறைகளின் போது இருதடவைகள் ஜனாதிப தியாக இருந்தவர்கள் தங் கள் பதவி முடிவில் ஜனா திபதி ஆட்சி முறையை ஒழிக்க முற்பட்டனராயினும் அந்த முயற்சி அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடிய வர்களால் முறியடிக்கப் பட்டது.

எதுவாயினும் ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாது செய்யும் தகைமைப்பாடு முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவிடமே இருந்தது.

பாராளுமன்றத்தில் அவ ருக்கு இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் ஜனாதிபதி முறை மைக்கு முடிவு கட்டுவதற்கு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருந்தபோதிலும் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகுதல் என்ற பேராசையில் வீழ்ந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் எண் ணத்தை இம்மியும் கொண் டிருக்கவில்லை.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து விட்டு அந்த ஆட்சிமு றையை இல்லாதொழித்து பாராளுமன்றுக்கு அதிகா ரத்தை வழங்கும் அரசாட்சி முறைமையை மகிந்த கொண்டு வந்திருந்ததால், இப்போது பிரதமர் மகிந்த என்பதாக நிலைமை இருந்திருக்கும்.

என்னசெய்வது மைத் திரிபால சிறிசேன ஜனா திபதியாக வருவது விதி என்றாகிய பின்னர் அதைத் தடுப்பது முடியாத காரியம் என்ற அடிப்படையில், அரசியல் சாணக்கியம்; இராஜதந்திரம் என்பவற்றை யெல்லாம் ஒரு புறமாகஓரங் கட்டிவிட்டு இலங்கை அர சியலில் விதி விளையாடு கிறது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

**வெறுப்புக்குரியவராக பிரதமர் ரணில்**

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பெற் றமை ஒரு விபத்து என்றே கூறவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் படுதோல்வி என்பதே முடி வாக இருந்தது. இதன்கார ணமாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலுக்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. கட்சியின் தலைமைப் பத வியை ரணில் விட்டுத்தர வேண்டும் என்ற கருத்துக்க ளும் கட்சிக்குள் பலமாக அடிபட,

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாசவே ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பொருத் தமான தலைவர் என்ற கருத்துக்களும் வேகமாகப் பரவின.


இருந்தும் ரணில் விக்கிர மசிங்க ஒரு மாதிரியாகத் தனது கட்சித் தலைமைப் பதவியைத் தக்கவைத்துக் கொண்டார்.

கட்சித் தலைமையைத் தக்கவைப்பதற்காக அவர் கையாண்ட இராஜதந்திரம் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுவதில்லை என்ற அவரின் தனிப்பட்ட தீர்மா னமாகும்.

இத்தகையதொரு தீர்மா னத்தை எடுக்கும் போது சஜித் பிரேமதாசவை ஐக்கிய தேசி யக் கட்சிக்குத் தலை வராக் குங்கள் என்ற கோஷம் தணி யும் என்பது ரணிலின் முடிவு.

அவரின் முடிவு வெற்றி பெறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஏதோவொரு வகை யில் உதவிபுரிந்தார்.

அரசியலில் தனது முக்கி யமான எதிரிகளில் [illegible]



லும் ஒருவர் என்றிருந்த போதிலும் மகிந்த ராஜ பக்ஷவை வீட்டிற்கு அனுப் புவதற்கு ரணிலின் உதவி சந்திரிகாவுக்குத் தேவைப் ப்பட்டது.

கிரமசிங்க உள்ளார் என்ற பேருண்மையை எவரும் மறந்து விடமுடியாது.

தனது கட்சிக்குள்ளும் கூட்டுச் சேர்ந்த கட்சிக்குள் ளும் வெறுப்புக்குரியவராக

கூறுவதாக தங்காலைக் கூட்டமும் மன்மத வருடத் திற்கான மகிந்தவின் கொண் டாட்டமும் அமைகின்றன.

ஆம், பிறந்த புத்தா ண்டை மகிந்த கொண்டா

## சந்திரிகாவா: மகிந்தவா அடுத்த பிரதமர் யார்?

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி போட் டியிடுவதாக இருந்தால் ஜனா திபதி வேட்பாளர் தானல்ல என்பதை அறிந்திருந்த ரணில் தனது கட்சிக்குள் இன் னொருவர் ஜனாதிபதி வேட் பாளராகப் போட்டியிடுவது தனது எதிர்கால அரசிய லுக்கு ஆபத்தானதென்ப தையும் உணர்ந்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ரணி லோடு தொடர்பு கொண்டு, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு உதவுங்கள். உங்களுக்குப் பிரதமர் பதவியைத் தரமுடியும் என்று கூற, அதுவே ரணிலுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்த சந்தர்ப்பமாயிற்று.

சந்திரிகாவும் சர்வதேச நாடுகள் சிலவும் மைத் திரியைக் கொண்டுவந்து மகிந்தவை வீட்டுக்கு அனுப் புதல் என எடுத்த தீர்மா னத்திற்கு ரணில் ஒத்துழை ப்பு வழங்கியதன் காரண மாக ரணிலுக்குப் பிரதமர் பதவி கிடைத்தது. அவருக் குப் பிரதமர் பதவி கிடைத் திருந்தாலும் ஐக்கிய தேசி யக் கட்சிக்குள்ளும் ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சிக்குள் [illegible]

இருக்கும் ஒருவருக்கு ஆட் சிப்பீடத்தில் பொறுப்பான பதவி கிடைத்தது எனில் அதன் பின்னணி ஒரு தேவை கருதியதாக அல்லது ஒரு சடுதியான விபத்தின் கார ணமாகக் கிடைத்ததென்பதே நிதர்சனமாகும்.

இத்தகையதொரு விபத் தின் விளைவாகக் கிடைத்த பதவி நீண்டகாலம் நீடிக்கும் என எதிர்பார்ப்பது பொருத் தமற்றது. இது ஒருபுறம் இருக்க,

மூன்றாவது தடவை யாகவும் ஜனாதிபதியாக இருக்க நினைத்த மகிந்த ராஜபக்ஷவை வீட்டிற்கு அனுப்பியாயிற்று. இது அரசியலில் கிடைத்த பெரு வெற்றியாயினும் அரசிய லில் இருந்து மகிந்த துறவு பூணாதவரை மகிந்த என்ற பயம் இருக்கவேசெய்யும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட் டிற்கு அனுப்பினாலும் தென்பகுதி மக்களிடமும் அரசியல்வாதிகளிடமும் மகிந்தவுக்கு ஒரு கனதியான செல்வாக்கு உண்டென்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

இந்நிலையில் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் பாரா ளுமன்றில் அரங்கேறி பிரத [illegible]ருக்கு அதிகாரம் வழங்கு கின்ற நிலைமை ஏற்படும்

டும்போது கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கொண்டாட்ட நிகழ் வில் கலந்துகொண்டதான தகவல்கள் மகிந்த ராஜபக்ஷ ஒருபோதும் அரசியலில் துறவறம் பூணப்போவ தில்லை என்பதை உறுதிப்ப டுத்தியுள்ளது.

புதிய கட்சியை அமைத்து அதில் போட்டியிடுவதன் மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கணிசமான பாராளுமன்ற ஆசனத்தை தமக்குத் தரும் என்ற நம்பிக்கை யோடு மகிந்த மீளவும் அரசியலில் பிரவேசம் செய்வார்.

மகிந்தவின் அரசியல் பிர வேசத்தை முறியடிக்கும் பாசு பதமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சந்திரிகா அம்மையார் பிரதமர் வேட்பா ளராகக்களம் இறங்குவார்.

ஆக, மகிந்தவின் விட யத்தில் சட்டங்கள் பேசாதி ருந்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்கொள்ளும் மிகப் பெரிய போட்டியாக இருக்கும்.

அதேசமயம் அரசியல் வித் துவான் ரணில் விக்கி ரம சிங்க ஐக்கிய தேசியக் கட் சியின் தலைமையை இழந்து, மகிந்த பக்கம் தாவினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோவிலில் திருவிழா ஆரம்பமாகி விட்டதால் அப்பகுதியில் ஒரே கலகலப்பு. திருவிழா ஆரம்பித்துவிட்டால் அந்த ஊர் ஒன்றுபட்டு விடும். சுருங்கச் சொன்னால் நயினாதீவைப் போல எல்லோரும் ஒன்று சேருகின்ற காலம் ஆலடிப் பிள்ளையாரின் திருவிழாக் காலம்தான்.

திருவிழாக்காலங்களில் தெய்வீக உரைகள் இடம் பெறுவது வழக்கம். பண்டிதர் பரமலிங்கம், வாத்தியார் வைத்திலிங்கம் இவர்கள்தான் சொற்பொழிவாளர்கள். எனினும் அவர்களுக்கு எந்தப் பட்டமோ விருதோ கிடையாது. அவர்களும் அதனை ஒருபோதும் எதிர்பார்ப்பதில்லை.

கோயிலில் சொற்பொழிவாற்றுவது ஒரு தர்மம் என்பது இவர்களின் நினைப்பு என்பதால் பிரதி உபகாரத்தை இவர்கள் எதிர்பார்ப்பதேயில்லை.

அன்றைய திருவிழாவில் பண்டிதர் பரமலிங்கம் தாயுமானவர் என்ற பொருளில் உரையாற்றினார். சரியாக முப்பது நிமிடங்களுக்குள் சொற்பொழிவாளர்கள் தமது உரையை நிறைவு செய்யவேண்டும் என்ற நிபந்தனை அங்கு மிகவும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும். இதனால் சொற்பொழிவைக் கேட்பதற்கு நிறைந்த கூட்டம்.

தாயுமானவர் என்பது பற்றி பண்டிதர் பரமலிங்கத்தின் சொற்பொழிவு ஒலிபெருக்கி மூலம்அந்த ஊர் முழுமைக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

அன்பர்களே! இறைவன் தாயினும் நல்ல தலைவன். அதனால்தான் அம்மையே அப்பா என்று இறைவனை அன்புருகப் போற்றுகின்றோம்.

தாயுள்ளம் படைத்த சிவன் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தகதை நீங்கள் அறிந்ததே.

தாயை இழந்த பன்றிக் குட்டிகள் பசிதாங்க முடியாது தாயை அழைக்கின்றன. இறந்த தாய்ப்பன்றியால் எங்ஙனம் அவ்விடம் வரமுடியும். சாட்சாத் ஈஸ்வரனே பன்றிஉருவெடுத்துக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தார். பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுப்ப தாயின் தாய் வடிவம் தாங்கவேண்டுமல்லவா. அதனால்தான் தாய்ப்பன்றியாகத் தோன்றி குட்டிகளுக்குப் பால் கொடுத்தார் சிவன்.

இப்படியாக பண்டிதரின் சொற்பொழிவு நீள்கிறது. பண்டிதரின் உரை முடிவுற்றதும் ஆலடி மாநாட்டில் அனைவரும் கூடினர்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா இன்று ஆற்றிய தாயுமானவர் என்ற சொற்பொழிவு மிகவும் அற்புதமாக இருந்தது. பண்டிதர் கூறிய போதுதான் எனக்கும் ஒருவிடயம் ஞாபகத்திற்கு வந்தது.

யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற ஒரு சிறுவர் இல்லத்தில இரண்டு ஆண் பிள்ளைகள் தங்கள் அம்மாமாரின் பெயரை தங்கட கையில பிளேட்டால வெட்டி எழுதினதாக அறிந்தேன்.

தங்கட அம்மாமார் தங்களைப் பார்க்க வாறதில்லை என்ற கவலையில அந்தப் பிள்ளையள் அப்படியொரு ஆபத்தான வேலையைச் செய்திருக்கினம். தாய்மார் பிள்ளையள சிறுவர் இல்லத்தில சேர்த்துவிட்டதோட தங்கட கடமை முடிந்துவிட்டது என்று நினைக்காமல் பிள்ளையளின்ர மனநிலையை அறிந்து செயற்படவேணும்.

**கங்காணி:** அது சரி விதானையார் சிறுவர் இல்லத்தில இருக்கிற பிள்ளையள பெற்றோர் பார்ப்பதென்றாலும் நீதிமன்றத்தின்ர அனுமதி எடுக்கவேணுமாமே.

**விதானையார்:** இந்த விதிமுறையள் எனக்கென்றும் தெரியாது. அப்படியேனும் நடைமுறை இருந்தாலும் கிழமைக்கு ஒரு தடவை அல்லது பத்து நாளுக்கு ஒருமுறையேனும் தாய் தகப்பன் தங்கட பிள்ளையளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கவேணும். இல்லை என்றால் அந்த இரண்டு ஆண்பிள்ளைகளும் தங்கட கையில பிளேட்டால வெட்டி தாயின்ர பெயரை எழுதின மாதிரியான சம்பவங்கள் தான் நடக்கும். சிறுவயதில தாய்ப்பாசத்தை இழந்த பிள்ளையள் பின்னாளில் முரண்பாட்டுக்குரியவர்களாக இருந்துள்ளனர் என்று ஆய்வு முடிவுகள் சொல்வதால் சிறுவர் இல்லங்களில் இருக்கின்ற பிள்ளையள தாய், தந்தை, பாதுகாவலர் ஒழுங்காகச் சென்று பார்ப்பதற்கு ஒரு பொருத்தமான ஏற்பாடு அவசியம் என்பதை இந்த மாநாட்டில ஒருதீர்மானமாகக் கொண்டு வருவம். (இப்படி விதானையார் கூற, அதற்கு மாநாட்டு அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் பூரண சம்மதத்தைத் தெரிவித்தனர்.மாநாட்டில் மேற்படி தீர்மானம் நிறைவேறிய கையோடு மூப்பர் வேர்க்க விறுவிறுக்க ஆலடிக்கு வந்தார்)

**வாத்தியார்:** மூப்பர் களைத்துப் போய் வாறார் என்ன சங்கதி.

**மூப்பர்:** அதையேன் கேட்கிறியள். நெல்லியடிப் பக்கம் போனனான். நெல்லியடியில உள்ள வங்கி ஒன்றில கதிரைகள் தானா ஆடுதாம். இரவு வேளையில அந்த வங்கிக் கட்டடத்தில் சத்தமும் கேட்பதாக ஒரு கதை. ஜன்னல்கள், கதிரைகள் தம்பாட்டில ஆடுது என்ற கதையைக்கேட்டதில இருந்து எனக்கு ஒரே பயம். சில வருடங்களுக்கு முன்பு எங்கட மண்ணில கிறீஸ்பூதங்கள் நடமாடினதில இருந்து பிடிச்ச ஏக்கவாயு இன்னமும் அகலவில்லை. இந்த நேரத்தில நெல்லியடியில உள்ள வங்கி ஒன்றில கதிரை ஆடுது, மேசை ஓடுது என்ற செய்தியக் கேட்டத்தில இருந்து பிறசர் கொஞ்சம் கூடிப்போய்ச்சுது போல.

**பண்டிதர்:** மூப்பர் இதெல்லாம் அந்தக்காலத்துக் கதையள். இது நவீன உலகம், தகவல் தொழில்நுட்பம் மிகவேகமாக வளர்ந்துள்ள இந்த உலகத்தில இந்தக் கதையள நம்புறதுதான் மடமைத்தனம்.

**விதானையார்:** பண்டிதர், மூப்பர் சொல்லுறதைப் பார்க்கும்போது வங்கியில காசை வைப்புச் செய்து போட்டு கொடுக்கல் வாங்கலை ஒருத்தருக்கும் சொல்லாமல் இறந்துபோன ஆவியள் தங்கட காசை எடுக்கிறதுக்காக அந்த வங்கிக்கு வந்திருக்குமோ?

(விதானையார் இப்படிக் கூறியதும் மாநாட்டில சிரிப்பொலி எழுந்தது)

**வாத்தியார்:** அது சரி பண்டிதர் ஆலடி மாநாட்டிற்கு வேற ஏதேனும் கடிதங்கள் வந்தால், அதைப் பற்றி நாங்கள் ஆராயலாம்.

**பண்டிதர்:** வாத்தியார் முக்கியமான கடிதம் ஒன்று வந்திருக்கு. யாழ்ப்பாணக் குடாநாட்டில உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு சில தீய சக்திகள் பான்பறாக் பாக்கை விற்பனை செய்யினமாம். அது தொடர்பில் கட்டுப் பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் இப்பவும் பான்பறாக் பாக்கு விற்பனையாகிக் கொண்டிருப்பதாக அந்தக் கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கங்காணி:** பான்பறாக் பாக்கு விற்பனையை முற்றாகத் தடை செய்யவேணும் என்பதோடு போதைப் பாவனையையும் யாழ்ப்பாணத்தில முற்றாக வேரறுக்க வேணும். அப்பதான் எங்கட பிள்ளையள் நல்ல வழியில செல்லமுடியும்.

**மூப்பர்:** கங்காணியர் சொல்லுறதில உண்மை இருந்தாலும் ஒவ்வொரு பெற்றோரும் தங்கட பிள்ளையள் தொடர்பில விழிப்பாக இருக்கவேணும். ஒரு பிள்ளை பாக்குச் சாப்பிடுகிறான் என்றால் அது தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்தாவிட்டால் பிள்ளையளின் எதிர்காலம் பாழாய்ப் போகுமல்லோ.

எனவே பிள்ளைகளின்ர முதலாவது காவலர்கள் தாய், தந்தையர் தான். ஆக அவர்கள் தங்கட பிள்ளையள் தொடர்பில் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.


பெற்றோர் பிள்ளைகள் மீது அதீத கவனம் செலுத்தினால் அந்தப் பிள்ளையள் ஒருபோதும் பிறழ்வான பழக்க வழக்கங்களை பின்பற்ற மாட்டினம்.

ஆகையால சமூகத்தில நடக்கிற தீங்குகள கட்டுப்படுத்திற அதேநேரம் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் மீது கவனம் செலுத்த வேணும்.

**பண்டிதர்:** மூப்பர் சொல்வது போல பெற்றோர் பிள்ளைகள் மீது கவனம் செலுத்துகிற அதேநேரம் பாடசாலைகளும் தங்கள் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் பற்றி கவனம் கொள்வது அவசியம்.

பண்டிதர் இவ்வாறு கூறும் போது இரவுத் திருவிழாவுக்காக பிள்ளையார் கோவில் மணி ஒலித்தது.

ஆதித்தன்



## தாயின் பெயரை தம் கையில் செதுக்கிய தனயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

# மிருகங்களின் தேர்தல்



மிருக ராஜா சிங்கம் கிழவனாகி விட்டதால் ஓய்வு பெற விரும்பினார். அந்தக் காட்டிலே வேறு சிங்கம் இல்லை. எனவே சிங்க ராஜாவே சொல்லிவிட்டார். 'தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்' என்று. அதிகமான போட்டி இருந்தால் வாக்குகள் சிதறிவிடும் என்பதால் இருவர் மட்டுமே போட்டியிடுவது என்று அவை முடிவு செய்தன. மிருகங்களில் பெரியவர் என்று யானையைப் பெரிய மிருகங்கள் நிறுத்தி வைத்தன.

இளைஞர்களுக்கே வாய்ப்பு வேண்டுமென்று யானையை எதிர்த்துப் போட்டியிட குரங்கை நிறுத்தி வைத்தன சின்ன மிருகங்கள். சிங்கராஜா தேர்தலை மட்டும் நடத்தித் தர சம்மதித்தார்.

'மனிதர்கள் தங்கள் தேர்தலில் மிருகங்களின் சின்னங்களை வைப்பது போல் நாம் மனிதர்களின் சின்னங்களை வைக்கலாமா?' என்று கேட்டது சிங்கம்' 'மனிதர்களிலே உருவமாறுபாடு இல்லையே!' என்றது நரி. கடைசியில் வெள்ளைப் பெட்டி, பச்சைப் பெட்டி என்று வைப்பதாக முடிவாயிற்று. தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்தது.

'யானை விநாயகரின் அம்சம்' என்று ஆதரித்தது கரடி.

'கரடி.. கரடிவிடுகிறார்., முதலை வாயில் மாட்டிக்கொண்ட யானை வாயில் அகப்படாதீர் !' என்றது நரி குரங்கின் சார்பில்." சஞ்சீவி மலையும் கொண்டு வரும் ஆற்றல் குரங்குக்கு உண்டு. அனுமரை மறக்காதீர்" என்றும் பேசியது.

'குரங்கு கைபூமாலையாகி விடும் காடு' யானை பேசியது.

'யானை வாய்க் கரும்பாகி விடும் காடு' குரங்கு பதிலடி கொடுத்தது.

'வெள்ளை மனம் கொண்ட யானைக்கு வெள்ளைப் பெட்டியில் போடுங்கள் ஓட்டு !'.

'யானை கொடுக்கும் கரும்பில் ஏமாறாதீர்' என்றது குரங்கு.

'குரங்கு கொடுக்கும் கனியில் ஏமாறாதீர்' என்றது யானை.

'யாரும் எதுவும் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் தேர்தல் செல்லாது' என்று உத்தரவிட்டது சிங்கம்.

'யானை மதம் பிடித்தால் காட்டையே அழித்துவிடும்' குரங்கின் சார்பில் ஓநாய் பேசியது.

'ஊரை எரித்த குரங்கு காட்டை எரிக்காதா?' என்றது புலி.

'சினிமா சான்ஸ் வந்தாலோ, சர்க்கஸ் வந்தாலோ, ஊர்வலம் வந்தாலோ யானை ஊருக்குள் ஓடிவிடும்' என்றது குரங்கு.

'குரங்காட்டி கிடைத்தாலே போதுமே!' என்று ஏசியது யானை. கூட்டம் கோஷங்களெல்லாம் தேர்தலுக்கு முதல் நாளோடு முடிவடைந்தன.

'யானைக்கும் அடி சறுக்கும்'

'குரங்குப் புத்தி கூடவே கூடாது'

போன்ற வாசகங்கள் எழுதிய அட்டைகள் கூட தேர்தல் சாவடிக்கு அருகிலிருந்து அகற்றப்பட்டன.

யானை பெருமிதத்துடன் அசைந்து அசைந்து மகிழ்ந்தது. பெரும்பான்மையான மிருகங்கள், 'குரங்கை நம்பாது' என்று நரியும் முன்னங்காலைப் பிசைந்தது.

யானைக் கட்சியினர் குரங்கு ஆதரவாளர்களை கட்சி மாறவும் தூண்டினார்கள் என்று சொல்லப்பட்டது. அதே போன்று குரங்கும் முயன்றதாக யானை குற்றம் சாட்டியது.

'கிளைக்குக் கிளை தாவும் குரங்கே யானையின் பக்கம் போய் விட்டது' என்று வதந்தியைக்கூட கிளப்பி விட்டார்கள்.

'குரங்கும், நரியும் கூடி ஆலோசித்தன. குரங்கின் காதில் நரி கிசுகிசுத்தது. அவ்வளவு தான். குரங்கு வெளியே பாய்ந்தோடியது.

விடிந்ததும் தேர்தல். மிருகங்கள் வரிசை வரிசையாக வந்து நின்றன. ஒவ்வொருவரும் கையில் கொடுக்கப்பட்ட பனை ஓலைச்சீட்டை எடுத்துக்கொண்டு பாழ் மண்டபத்தினுள் சென்றன. திரும்பி வரும் போது மட்டும் ஏதோ திகைப்பு. ஓட்டுப் போட்டவர் எதுவும் பேசாமல், போலிஸ் வேங்கை விரட்டிக் கொண்டிருந்தது. சிங்கராஜா உட்பட எவரும் வாக்குப்பதிவு முடியும் வரை ஓட்டுச்சாவடிக்குள் போகக் கூடாது என்று முன்னமே முடிவு செய்யப்பட்டிருந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும் குரங்கு, யானை உட்பட சிங்க ராஜா உள்ளே சென்றார், என்ன ஆச்சர்யம்? அங்கே வெள்ளைப் பெட்டியே இல்லை....

இரண்டுமே பச்சை பெட்டிகள் !... சட்டென்று குரங்கு நாக்கைக் கடிந்துக் கொண்டது. சிங்கராஜாவின் மீது பாய்ந்து அவர் அணிந்திருந்த கூலிங்கிளாசைத் தட்டிவிட்டது. சிங்க ராஜாவுக்கு விடயம் புரிந்தது. வாக்குப் போட வெளியில் நிற்பவர்களுக்கு பச்சைநிற கூலிங்கிளாஸ் போட அனுமதித்தது தவறு.... நரியின் யோசனைப்படி குரங்குதான், தன் படையோடு போய் கூலிங்கிளாஸ் கடையையே காலி செய்து கிளப்பிக் கொண்டு வந்தது...!

கட்சி வேறுபாடின்றி சிங்கத்தை விட்டே அனைவருக்கும் கூலிங்கிளாஸ் தர்மம் செய்தது குரங்கு. இதை யானையும் ஆட்சேபிக்கவில்லை. வெயிலின் கொடுமை கருதி...! சிங்கமும் ஒன்றை எடுத்துக் கொண்டதுதான் தவறாகப் போயிற்று என்று நினைத்தது குரங்கு.

எல்லா மிருகங்களும் இப்போது தைரியமாக வெளியே சொல்ல ஆரம்பித்தன' இரண்டும் பச்சையாகத் தெரிந்தன" என்று !.

'இந்த தேர்தல் செல்லாது. வேறு தேர்தல் தான் நடத்த வேண்டும்' என்றது கரடி.

'குரங்கு மட்டும் மறுபடி தேர்தலில் நிற்கவே கூடாது' என்றது யானை !.

'தேர்தலே வேண்டாம், நானே ராஜா' என்று கர்ஜித்தது சிங்கம்.

☆☆☆☆☆☆☆☆☆



# ஐந்து சிறிய குரங்குகள்

ஐந்து சிறிய குரங்குகள் கட்டிலில் துள்ளின
அதில் ஒன்று கீழே விழுந்து விட்டது
தலையிலோ அடிபட்டுக்கொண்டது
அம்மா அழைத்தார் மருத்துவரை
மருத்துவர் சொன்னார்,
கட்டிலில் ஒருவரும் துள்ளக் கூடாது.

நான்கு சிறிய குரங்குகள் கட்டிலில் துள்ளின
அதில் ஒன்று கீழே விழுந்து விட்டது
தலையிலோ அடிபட்டுக்கொண்டது
அம்மா அழைத்தார் மருத்துவரை
மருத்துவர் சொன்னார்,
ஒருவரும் கட்டிலில் துள்ளக் கூடாது.

மூன்று சிறிய குரங்குகள் கட்டிலில் துள்ளின
அதில் ஒன்று கீழே விழுந்து விட்டது
தலையிலோ அடிபட்டுக்கொண்டது
அம்மா அழைத்தார் மருத்துவரை
மருத்துவர் சொன்னார்,
ஒருவரும் கட்டிலில் துள்ளக் கூடாது.

இரண்டு சிறிய குரங்குகள் கட்டிலில் துள்ளின
அதில் ஒன்று கீழே விழுந்து விட்டது
தலையிலோ அடிபட்டுக்கொண்டது
அம்மா அழைத்தார் மருத்துவரை
மருத்துவர் சொன்னார்,
கட்டிலில் ஒருவரும் துள்ளக் கூடாது.

ஒரு சிறிய குரங்கு கட்டிலில் துள்ளியது
அதுவோ கீழே விழுந்து விட்டது
தலையிலோ அடிபட்டுக்கொண்டது
அம்மா அழைத்தார் மருத்துவரை
மருத்துவர் சொன்னார்,
ஒருவரும் கட்டிலில் துள்ளக் கூடாது.


# மிதக்கும் திரையரங்கம்



தாய்லாந்தில் நடக்கும் 'Film on the Rocks Yao Noi' எனும் விழா மிகவும் பிரபலம். அங்குள்ள Kudu Island என்ற தீவில், மிதக்கும் திரையரங்கம் உருவாக்கப்பட்டு, திரைப்படம் திரையிடப்படும்.

ஓலே ஷெய்ரான் (Ole Scheeran) எனும் ஜேர்மனியைச் சேர்ந்த கட்டடக் கலை வல்லுநர். மீனவர்கள் உபயோகப் படுத்தும் பொருட்களால் இந்தத் திரையரங்கத்தை வடிவமைப்பார்.

தண்ணீரின் மேல் மிதவை அமைத்து, பார்வையாளர்கள் அமர்வதற்கு இருக்கைகள் போடப்படும். சுற்றிலும் தண்ணீர், பிரமாண்டமான பாறைகள் என வித்தியாசமான சூழ்நிலையில் திரைப்படத்தைப் பார்க்கும்போது, பார்வையாளர்களுக்கு புதிய அனுபவமும் மன நிறைவும் உண்டாகும்.




ந.அக்ஷயன், தரம் -1- யாழ்.நல்லூர் காசிப்பிள்ளை மகா வித்தியாலயம்



ரா.உபேந்தினி, தரம் -2- யாழ்.திருக் குடும்பக் கன்னியர்மடம் தேசிய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



பொறுமை இல்லாத மனிதர்களை எப்படி அடையாளம் காண்பது?

சினிமாப் பாணியில் அடாவடி பண்ணித் திரியும் இன்றைய இளைஞர்களை...

உலகக் கிண்ணத்தில் சரியாக விளையாடாமல் ஐ.பி.எல் இல் வெளுத்துக் கட்டுகிறார்களே!

**பிரியா — கோப்பாய்**

**பொறுமை இல்லாத மனிதர்களை எப்படி அடையாளம் காண்பது?**

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி சிக்னலில் போய் நின்று பாருங்கள் அடையாளம் காண்பது மிகச் சுலபமாகிவிடும்.

**தனஞ்சயன் — யாழ்ப்பாணம்**

**இந்த உலகில் கொடுமையானது எது?**

பத்து ரூபாயாவது கிடைக்குமா என்று தட்டுடன் ஏந்தி நிற்பவர்களைத் தாண்டி கோவிலுக்குள் சென்று கடவுளுக்கு ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்துகிறோமே இதைவிட ஒரு கொடுமை தேவையா?

**பிரசாத் — மாதகல்**

**லோனுக்கு லோலோ என்று அலைந்த அனுபவம் உண்டோ?**

மாட்டையும், கோழியையும் நம்பி லோன் கொடுக்கும் வங்கிகள் மனிதனை நம்பி எதையுமே கொடுக்கிறார்கள் இல்லையே.

**சுபா — வரணி**

**எம் தமிழ் அரசியல்வாதிகள் எம் இனத்திற்கு மறுவாழ்வு தருவோம் என்று சபதமிடுகிறார்களே?**

சிறிய குமிழ் பல்பையே மூன்று செக்கன்கள் உற்றுப் பார்க்க முடியாத ஒருவன் சூரியனை அழிக்க சபதமிட்டானாம். முதலில் முடியுமானவற்றை சிந்தியுங்கள். அதன்பின் அடுத்த கட்டத்திற்குப் போகலாம்.

**உடுவிலூர் — கலா**


**பெண்கள் வாழ்வில் ஆண்கள் பெரும் சுமைகள் என்கிறேன். ஏற்றுக் கொள்வீர்களா?**

சுமைதான் அது உண்மைதான். ஆழமாகச் சிந்திப்பவர்களுக்கு அது புரியும்.

**நர்மதன் — வவுனியா**

**உங்களுக்கு நண்பனையா, நண்பியையா பிடிக்கும்?**

நண்பன் என்றால் செலவு அதிகம். நண்பி என்றால் கனவு அதிகம்.



**காவியா — கந்தர்மடம்**

**ஊருக்கு மட்டும் உபதேசம் சொல்பவர்கள் பற்றி?**

திருப்பாடுகளின் காட்சியில் ஒருபகுதி ! விபச்சாரம் செய்தாள் என ஒரு பெண்ணை ஊர்மக்கள் கற்களால் அடிக்கிறார்கள்.

அப்போது அவ்வழி இயேசு கிறிஸ்து வருகிறார். அவளை தாக்குவதை நிறுத்தும் படி கூறுகிறார்.

யாரும் நிறுத்தவே இல்லை. கிறிஸ்து கூறுகிறார் உங்களில் யார் குற்றமற்றவரோ அவர்கள் அவளை தாக்குங்கள் என. உடனே அவர்கள அவ்விடத்தை விட்டு விலகிவிடுகிறார்கள்.

**பல்லக்குத் தூக்கிகள் என்ன பிரச்சினை பண்றார்கள் அமைச்சரே?**

**மகாராணியைத் தூக்கிச் செல்லணும் என்றால் டபுள் சார்ஜ்கொடுக்கணுமாம் மன்னா!**



**ஈ.சா.ஜெபா — திக்கம்**

**வீதிக்கு வீதி நடக்கும் விபத்துக்கள் பற்றி.**

அவசரப் புத்தி எங்களை ஆட்டிப்படைக்கிறது. அண்மையில் நாவலர் வீதி புகையிரதக் கடவையில் எச்சரிக்கை மணி அடித்து விட்டது. அபாய தடுப்பு சட்டம் குறுக்கிட்டு விட்டது.

அதற்குள் குறுக்கால போகிறான்களே என்ன செய்ய. எல்லாம் அவசரமும் அந்தரமும்தான்.

**சோமி — மாதகல்**

**சட்டம் படிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

உஸ்... சத்தம் போடாதீர்கள். என் மனைவி இப்போது சட்டம் படிக்கிறாள். இப்படியொரு கேள்வியைக் கேட்டு என்னைச் சிக்கலில் மாட்டிவிடாதீர்கள். ஏனென்றால் எனக்கிருப்பது ஒரேயொரு மனைவிதான்.

**வேல்நந்தன் — புலோலி**

**சிகிரியா ஓவியம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கண்ட இடத்தில் கைவைக்கும் பழக்கத்தை தமிழன் விட்டுவிடவேண்டும். மீறி எங்கேயும் செல்வதென்றால் கைகளை கட்டிக் கொண்டு செல்வது தமிழ் இனத்திற்கு நன்று.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**காதலில் ஏன் பெண்கள் விட்டுக் கொடுப்பதில்லை?**

விட்டுக் கொடுக்கக்கூடாத சில விடயத்தில் விட்டுக் கொடுத்து விட்டால் எப்படி காதலில் விட்டுக் கொடுக்க முடியும்?

**கோபி — மந்திகை**

**A/L இல் லொஜிக் பாடம் எப்படி?**

எல்லாக் காகங்களும் கறுப்பானவை
காகங்கள் காகா என்று கத்தும்
∴ காகா என்று கத்துபவை காகங்கள்

**அனு — வரணி**

**எனக்கு ஒரு சந்தேகம். நீங்க நல்லவரா கெட்டவரா?**

ஒருநாள் என்னுடன் தங்கியவர்களைக் கேட்டுப் பாருங்களேன்.

**ஆர்.கரன் — கல்லைவேம்படி**

**உலகக் கிண்ணத்தில் சரியாக விளையாடாமல் ஐ.பி.எல் இல் வெளுத்துக் கட்டுகிறார்களே!**

காசு பணம் துட்டு மணி மணி
காசு பணம் துட்டு மணி மணி
நல்வாயன் சம்பாதிக்க
நாற வாயன் திங்கிறான்...

இப்பாடல் ஐ.பி.எல் இற்கு நன்றாகப் பொருந்தும்.

**சு.ஜெயரூபன் — பருத்தித்துறை**

**சினிமாப் பாணியில் அடாவடி பண்ணித் திரியும் இன்றைய இளைஞர்களைத் திருத்த என்ன வழி?**

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## அவள் அப்பாவுக்காக...

அப்பா எங்க
இருக்கிறீங்க...
அம்மா
ஓலை பின்னி
கிடுகு விக்கிற
காசிலதான்
படிக்கவேண்டியிருக்கு
நீங்க வீச்சுவலை
கட்டிவாற
மிதிவண்டி துருப்பிடித்து
பட்டுப்போன
மரத்தடியில்...
அம்மா
எங்களைப் படிக்க வைக்க
பக்கத்து வீடுகளுக்கு
கடன்வாங்கப்போறா...
அண்டைக்கு
தங்கச்சீன்ர பிறந்தநாள்
ரொபிப் பைக்கற்
வாங்க அம்மாட்ட
காசில்லை...
அப்பா...
உங்களை கடைசியா
புதுமாத்தளன்
கடற்கரையில்
பார்த்தது பசுமரத்து ஆணியாய்

ஆ.முல்லைதிவ்யன்

## இரண்டகம்

தன்னினத்தை விற்று
தனிப்பட ஆசைப்பட்டு
தனது பதவி, வசதியென
தன்னலம் மிக்கவனாய்
தரங்கெட்டுத் தலைவணங்கி
தம்மை நம்பியவரை
தவிக்கவிடுகின்ற
தமிழா!
உன்னை நம்பி உனது இனம்
உயரக் கதிரையிலே
உட்கார வைத்திட
உன்னினத்தின்
உயிரைக் குடித்தவனுடன்
உப்பரிகையிலே உலாவரவே
மிக
உவப்புடனே நிற்கின்றாயே!
உண்மையிலே நீதான் ஒரு
உலகக் கோமாளி
ஒன்றுபட்டு தமிழர் குலம்
உனக்காக வாக்களிக்க
கிறுக்குத்தனமாய்
குறுக்கே சென்று
இரண்டும் கெட்ட நிலையில் நின்று
இப்படி
இரண்டகம் செய்கின்றாயே!

வாணியழகன்
முரசுமோட்டை

## புதுவிதி சமைப்போம்

மனிதா
என் மதமும் உன்மதமும்
ஒன்றுதான்...
உனக்கும் எனக்கும்
உதிக்கும் சூரியனும்
ஒன்றுதான்
போதனைகளும்
வேதனைகளும்
விதிவிலக்கல்ல...
ஆண்டவனும் ஒன்றுதான்
அன்பு தேசமும் ஒன்றுதான்
இடைவெளிகள் இதிலில்லை
மனங்களை வெல்வோம்
மதங்களை மதிப்போம்
மடமைகளை தீயிட்டு எரிப்போம்
மார்க்கங்களை சலவை செய்வோம்
பூசல்களை மறந்திடுவோம்
பூமியெங்கும் புனிதங்களை
விதைத்திடுவோம்
பேதங்களை சிலுவையிடுவோம்
பேரின்பம் காண்போம்
மதங்களும் மனிதனும்
ஒன்றேயென்று

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## இமயம் தொட

உன் மௌனங்களை
கலைக்க முற்படுகிறாயா?
அந்தக்கலைப்பு
மற்றவர் மனங்களைக்
காயப்படுத்துமெனின்
மௌனமே சிறந்தது
மௌனம் மற்றவரை
சினக்க வைப்பதல்ல
உன்னைநீயே அளக்கவைப்பது
மௌனம் கோடி வார்த்தை பெறும்

மாவை. நா.கஜேந்திரன்

## என் காதலைச் சொல்லியும்

தினம் தினம் உன்நினைவில்
மூழ்கித் தவிக்கும் என் மனதை
தேற்றுவதற்காய்
உன் விழி பார்ப்பதற்கு
என் விழி ஆவல் கொண்டது
கவிதைகளும் கடிதங்களும் என்
காதலை உன்னிடம் கூறிட
புன்னகையால் பதில்கள் சொன்னாய்
மிதிவண்டியில் உன்னுடன்
நான் சென்ற பாதைகள்
கறைபடிந்ததாய்
சோதிடப் பலனால் என்
காதலில் ஐயம் நீ கொள்ள
என் மனதைவிட்டு நீ பிரிந்து
மணமுடித்து மழலைக்குரலில்
இன்பம் பகிர்ந்திட
என் மனம் உன் நினைவில்
இத்தினத்தில் ஆனந்தம்
கொள்கிறது

நி.கவியழகன், தாவடி

# மௌனத்தின் தேடல்- 245



## பெண்ணே

ஆசைகளுக்கு
விலங்கிட்டுவிட்டு
களங்கமில்லாத
அன்பைச் சுமந்து
செல்லும் உன் பாதையில்
எந்தத் தடையும் வராது
தெய்வம் உன் பக்கம்
நளாயினி போல்
நீ ஒரு சரித்திரம்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## தொடருமா உன் பயணம்

மழயில் தவழும் மழலை –இங்கே
கூடையில் சுமக்கும் தாயின்
நிலையைப் பார்...
நடந்து செல்லும் கரடுமுரடான
பாதையில்– வயிற்றுப் பசிக்கு
உணவின்றித் தவித்தும்
நீரின்றி வேலையின்றி
நிர்க்கதியாகிய நிலையில்
எப்போது? சொந்த இடம்
போய் சேருவாய்

எம்.சற்குணம்
சண்டிலிப்பாய்

## சமிக்ஞை

வறட்சியின் வழிவில்
வீதியின் ஓரத்தில்
பாரும் விசும்பும் வனத்திட
தாயின் இரு கரங்கள்
என் கால்களாய் மாறிட
சிரத்தின் கூடையில் அமர்ந்து
சுமைதருகின்றேனே– இந்தப்
பயணம் முடியாதா!– என
நினைத்துப் பரிதவிக்கும்
உன் முகத்தோடு– உன்
ஐந்து விரல் சமிக்ஞைக்கு
உதவிடுவோர்தான் யாரோ?

ச.அகல்யா
சண்டிலிப்பாய்

## கலங்காத பெண்

கரம் பிடித்தவன்
கைவிட்டான்
கலங்கவில்லை கோதை
தட்டிவிட்டாள்
தரங்கெட்டவனென்று
ஏந்தினாள் கூடையில்
அவனீந்த பரிசை
சுமந்து புறப்பட்டு விட்டாள்
நடையாய் பயணம்
கூலிக்குப் பாத்திரம்
தேய்த்தாவது
தளிரை ஆளாக்கிட

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## நவீன வள்ளுவன்

புராதன காலத்தின்
வள்ளுவனோ
மனைவியின் உதவியுடன்
கூடையில் தாசி வீடு
சென்றான்
இக்கால மாற்றத்துடன்
தனயனோடு தாய்
நவீன சமுதாயத்தை
நோக்கி...

இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவோடையூர்

## வருவாயா?

ஐயிரண்டு மாதங்கள் கருவறையில்
எனைச் சுமந்தாய்– இன்று என்னுயிர்
காக்க உன்தலைமேல் வைத்து
சுமக்கின்றாய்– அன்னையே
மறுபிறப்பிலாவது உன்னை நான்
சுமக்க வேண்டும் என் வயிற்றில்
இன்னொரு தாயாக...

யோ.காண்டீபன், மானிப்பாய்

## தாய்ப்பாசம்

செவிலியின் கையில்
குழந்தையை ஒப்படைத்து
இயந்திரமாய் உழைக்கும்
பெற்றோர் மத்தியில்
பெற்றெடுத்த செல்வமதை
சுமையாக எண்ணாது
சுகமான சுமையாக
கூடைக்குள் இருத்தி
ஒய்யாரமாய் சுமந்து செல்லும்
இவளல்லவோ அன்னை
இதுவல்லவோ தாய்ப்பாசம்

த.தனுஜா
அல்வாய்

## பெத்தமனம் பித்து

அடை மழையால்
நடைபாதை எங்கும்
வெள்ளந்தேங்கி நடைக்குத்
தடைபோட்டு நிற்க
குழந்தையைப் பாதுகாப்பாக
கூடைக்குள்ளிருத்திச்
சுமந்து செல்கிறாள் தாய்
பெத்தமனம் பித்தென்பார்
அவள் செய்கருமமோ முத்து

துரை, தென்மட்டுவில்

## கருவிலும் சுமந்ததாய்

கருவிலும் சுமந்தவள் என்னை
தெருவில் பல இடர் வந்தபோதும்
சுமக்கின்றாள் துணிவோடு
நான் அவளுக்குச் சுமையில்லை
கடவுளும் என்தாய்க்கு நிகரில்லை


வே.புவிராஜ்
கைதடி மேற்கு

## சுமைதாங்கி

தன்னவனை கூடையில் சுமந்து
தாசிவீடு ஏகினாள் அன்றொருத்தி
தனயனை சுமந்து இன்று
தாயே நீயும் செல்வதெங்கே?

உடுவிலூர் கலா

# மௌனத்தின் தேடல் –246



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 22.04.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேசங்கள் உபத்திரவமாயிருக்கின்றதா?



இன்றைய காலகட்டத்தில் உபதேசங்களும் உபத்திரவங் களாகிவிட்டன. முன்னொரு காலம் இளம் இளைஞனான அர்ச்சுணன், தன்னுடைய பால்ய சிநேகிதனும் ஆலோசகனுமாகிய கிருஷ்ண பகவானின் அறிவுரையில் தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழித்தான். ஆனால் இப்போதெல்லாம் அவ்வாறு சொல்லுவது கேலிக்கூத்தாகிவிட்டது. நண்பா! எங்களுடைய வாழ்வில் நாங்கள் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் அநேகமான சந்தர்ப்பங்களில் தட்டிக் கழிக்கின்றோம். வேண்டாத விடயங்களாக தவிர்த்துக் கொள்கின்றோம். ஓடி ஒழிக்கின்றோம்.

அறிவுரைகள் அரிய பொக்கிஷங்களாக புத்தகங்களாக பேணப்பட்டு வந்த காலங்கள் மாறி இப்போது எல்லாமே கலாய்க்கின்ற விடயங்களாகிவிட்டன. அறிவுரைகள் சிலவேளைகளில் கேட்பதற்கும் செய்வதற்கும் கடினமாகவிருந்தாலும், நம்மவர்களில் சிலர் இலவசமாக வழங்கிக் கொண்டிருக்க பலர் அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"சும்மா வந்திட்டாங்கள் சொல்லுறதுக்கு"

"செய்து பார்த்தாத் தான் தெரியும்"

"அந்தக் காலம் மாதிரியே இந்தக் காலம்"

"அட்வைஸ் பண்ணுற மாதிரி சுகமான வேலை எதுவுமில்லை" நாங்கள் அன்றாடம் இந்தமாதிரி விடயங்களைக் கேட்கின்றோம். அவற்றுக்கு அப்பால் உன் காதுகளுக்கும் இவை வந்திருக்கும். ஏன் நீயே அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் நண்பா! அனுபவங்களைப் பாடங்களாகக் கற்றுக் கொண்ட மனிதர்கள் சொல்லும் அறிவுரைகள், நாங்கள் அனுபவிக்கும் வரை கேலிக்குரிய விடயமாகவேயிருக்கும். வேகமாகச் செல்கின்ற நாகரிகப் பாதையில் பாய்ந்து பாய்ந்து, பறந்து பறந்து ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கின்றோம் ஆனால் ஒவ்வொரு பாத அடிக்குள்ளும் இருக்கின்ற கஷ்டங்கள், சந்தோஷங்கள், நன்மைகள், தீமைகள் எல்லாமே படித்துப் படித்துச் சொல்லப்பட்ட அறிவுரைகளுக்குள் இருக்கும். சில வேளைகளில் அவர்கள் சொல்வது அப்படியே நடந்து முடிந்த பின்னர், அவர் கூறியதைக் கேட்டிருக்கலாம் என்று நாம் கவலைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம். ஆயினும் கூட அறிவுரைகளை நாம் அலட்சியம் செய்கின்றோம்.

துள்ளித் திரிகின்ற பருவத்திலே என் துடுக்கடக்கி பள்ளிக்கனுப்பி வைத்திலனே என் பாவியாகிய தந்தையே! என்று தந்தையைப் பார்த்து அக்காலக் கவிஞன் ஒருவன் கேள்வி கேட்டான். ஆனால் தற்காலத்தில் நம் தந்தையர்களால் எங்கள் துடுக்குகளை அடக்கவும் முடியவில்லை. எங்களாலும் அவர்களின் உபதேசங்களை உட்கார்ந்து கேட்க நேரமில்லை. "சும்மா உப்புச் சப்பில்லாமல் கதைத்துக் கொண்டிருக்கின்றீங்கள்"

சுவையுள்ள உபதேசங்கள் பல புத்தகப்பைகளுக்குள் உறங்கி கொண்டிருக்கின்றன. வேறு சில ஒலிபெருக்கிகளில் தாமாகவே தனக்குள் பேசிக் கொண்டிருக்கின்றன. அவற்றை தட்டியெழுப்பவோ, தட்டிக் கொடுக்கவோ வழியிருக்கின்றதென்றால் ஒன்றேயொன்றுதான். அவற்றை நாம் காது கொடுத்துக் கேட்கவேண்டும். நல்லசிந்தனைகளும், கற்றுக் கொண்ட பாடங்களும், எதிர்வு கூறல்களும்தான் உபதேசங்களாகின்றன. அவற்றிலிருக்கின்ற சக்தியும், பெறுமதியும் எங்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை. காலையில் அம்மாவின் அன்பான, அக்கறை கலந்த அறிவுரையில் ஆரம்பித்து, வீட்டு வாசலுக்கு வரும் போது அம்மம்மாவின் "தம்பி கொஞ்சம் நிண்டுட்டுப் போடா பூனை குறுக்கை போனது, என்று தொடர்ந்து, "நாங்கள் படித்தால் மட்டுமே இன்றைய காலத்தில் வாழமுடியும் பிள்ளைகளே நீங்கள் ஒழுக்கமாக இருந்தால் தான் சமூகம் உங்களை மதிக்கும்" என்று ஆசிரியரின் உபதேசம் தொடர்ந்து இரவு படுக்கும் போது, "தம்பி நீ ஒரே கிறவுண்டல நிக்கிறாய் படிக்கிற வயசிலைதான் படிக்கிறது" என்ற அப்பாவின் அறிவுரையில் சென்று முடியும். இடையில் வேறு பலரின் உபதேசங்கள் கிடைக்கலாம். இவையெல்லாம் உன்னுடைய அகராதியில் நச்சரிப்புக்களாக, உபத்திரவங்களாக இருக்கலாம்.

ஆரம்பத்தில் மனிதன் படைக்கப்பட்ட போது நெருப்பில் கைவைத்து அது சுட்டவுடன் "நெருப்பு சுடும்" என்ற தன்னுடைய அனுபவத்தை மற்றவர்களுக்கு அந்த ஒரு மனிதன் கூறினான். அதன் பிறகுதான் அனைவரும் நெருப்பு சுடும் என்று கவனமாகக்கையாண்டனர். அதேபோலத்தான் அனுபவங்கள் சிலவற்றால் சுடுபட்டவர்கள் அறிவுரைகளை மற்றவர்களுக்கு வழங்குகின்றனர். அவற்றை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நாங்கள் தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு.

உபதேசங்கள் உபத்திரவங்களாகுவதற்கு தலைமுறை இடைவெளியும், இடைவெளியின் காலத்தை விட அதிகரித்த வேகத்தில் வளர்ந்து வரும் நவநாகரிக மாற்றமும் ஓர் முக்கிய காரணமாகும். முற்காலத்தில் எல்லாம் எங்களுடைய தந்தைக்கும் அவருடைய தந்தைக்கும் இடையிலான நாகரிக மாற்றம் என்னவோ சற்றுக் குறைவாகத்தான் இருந்தது. அவர்களுக்கு புரிய வைக்கக் கூடியதாக, அவர்களும் புரிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது. ஆனால் மாற்றங்களின் வேகம்

**யாழ்.தர்ஷி**

எங்களுக்கும் எங்களுடைய முதல தலைமுறைக்கும் மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விட்டது. அதனால் அவர்கள் சொல்வதையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கும் நாங்கள் சொல்வதை புரிந்து கொள்ள முடியாதுள்ளது. ஆனால் தார்ப்பரியங்கள் பல இழக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நண்பா! நாம் இந்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். விரிந்து கொண்டு வருகின்ற தலைமுறை இடைவெளிக்கு ஓர் பாலமாக இருக்க வேண்டும்.

"இந்தக் காலத்துப் பெடியளுக்கு நாங்கள் சொல்லுறது எங்கை புரியப் போகுது", "எல்லாத்தையும் அனுபவிச்சுப் பார்த்தால் தான் தெரியும்" என்று அவர்கள் சொல்வதும், "எங்கடை விசயங்கள் அவையளுக்கு விளங்கவே விளங்காது", "இப்பத்தை நிலைமை இப்பிடித்தான் இருக்கு" என்று நாங்கள் சொல்லுவதும் ஓரிடத்தில் இணைய வேண்டும். அவர்களின் அறிவுரைகளை நாமும், எங்களின் மாற்றங்களை அவர்களும் புரிந்து கொள்ளக்கூடிய ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அது ஒன்றும் சின்ன விடயமல்ல. ஆனால் எத்தனையோ விடயங்களைச் செய்து முடிக்கின்ற உன்னால் அதுவும் முடியும். செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால் நாம் பெரியோர் சொல்கின்ற அறிவுரைகளை குறைந்தது காது கொடுத்தாவது கேட்க வேண்டும்.


சிலர் தம் வாழ்வில் பெரியோர் சொல்கின்ற அறிவுரைகளைக் கேட்காமல் இருந்துவிட்டுப் பின்னர் வழிதவறித்தத்தளிக்கும் போது, அவர்கள் கூறியவற்றை நினைத்துப்பார்த்து கண்ணீர் சிந்துகின்ற சந்தப்பங்களும் இருக்கின்றன. முடிந்தது முடிந்தது தான். அறிவுரைகளின் ஆற்றல் எந்தவொரு விடயமும் நடந்து முடிவதற்கு முன்னர் வரைக்கும் சிறப்பாக இருக்கும். தவறிழைத்த பின்னர் சொல்லப்பட்ட அறிவுரைகளை நினைத்துப்பார்த்து அழுவது மூடத்தனம். நண்பா! நீ பிரித்தறியும் ஆளுமை உள்ளவன், உன்னால் எதையும் ஆராய்ந்து புரிந்து கொள்ள முடியும். உன் உள்ளத்தின் ஆற்றல் உனக்குப் புரியும்.

அத்துடன் மற்ற வர்களின் ஆலோசனைகளையும் உன்னுடைய கைகளில் வைத்துக் கொண்டால் உலகில் நீ உயர்ந்த இடத்தில் இருப்பாய். உபதேசங்கள் உனக்கு உபத்திரவமில்லை. உபயோகம்மிக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த 05.04.2015 அன்று வெளிவந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள *"குருந்தம்"* நிலையத்தின் பொறுப்பாளர்,திரு ச.ரவீந்திரன்(உளமருத்துவ சமூகப்பணியாளர்) அவர்களின் நேர்காணலின் தொடர்ச்சி இவ்வாரம் வெளிவருகின்றது. அடுத்த வாரம், குருந்தத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று முற்றுமுழுதாக குடியிலிருந்து விடுபட்டவர்களின் உண்மைச் சம்பவ விபரிப்பு வெளிவரும்.**

# மனவெளி



குடிப்பதால் மனிதன் ஒவ்வொருவனும் மெழுகுதிரியைப்போல உருகிப் போகின்றான் என்ற கருத்துடன் ஓவியம் ஒன்றை குடியால் பாதிக்கப்பட்டவரின் மகள் ஒருவர் வரைந்திருக்கின்றார்.

**மது மற்றும் புகைப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள் ஒரு மாதத்தில் செலவிடும் பணத்தின் அளவு**

**கால் போத்தல் சாராயம்- ஒருநாள் - 200.00**
**மாதம் - 30நாள்** - 200X30 =Rs. 6000.00
**சுருட்டு, பீடி, சிகரெட் மாதம் - 3000.00**
**மொத்தம்** - Rs. 6000 + Rs.3000 = Rs. 9000.00
**(ஒருமாதம்)**

**3.மதுபாவனையிலிருந்து விடுபட்ட ஒருவர் மீண்டும் குடிப்பதற்கு சந்தர்ப்பங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன.?**

குடியை விட்டு மீண்டவர்கள் மீண்டும் குடியை நோக்கிச் செல்வதற்கான காரணங்கள் பல இருக்கின்றன.

➤ **குடியற்ற வாழ்வின் வரண்ட நிலை:** வாழ்க்கையானது பழைய மாதிரி இல்லாமல் *"உப்புச் சப்பில்லாமல்"* இருக்கின்றது என்ற நினைப்புத் தோன்றலாம்.

➤ **மது பற்றிய இனிய நினைவுகள்:** மதுவின் தாக்கத்திலிருந்து உடலும்மனமும்தேறிவரும்நிலையில் மதுவினால் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட சுகங்களையும் சந்தோஷமான அனுபவங்களையும் எண்ணிப்பார்த்து அனுபவித்தல். இது ஒரு மாயத் தோற்றமாகும். பலர் தாம் ஆனந்தமாக இருந்ததாக எண்ணுகின்றார்கள். ஆனால் முன்னைய அனுபவங்கள் மிக மோசமானவை. (சத்தியெடுத்தல், தலைவலி போன்றவை)

➤ **பயம் மற்றும் கவலை:** இனி ஒரு காலமும் குடிக்காமல் எப்படி வாழ்க்கையைச்சமாளிப்பது?வாழ்க்கையின்சந்தோஷங்கள்தொலைந்து விட்டனவோ? வாழ்க்கையில் ஏற்படுகின்ற தாங்கமுடியாத பிரச்சினைகளை அணுகுவது எப்படி? போன்ற மனவுணர்வுகள் ஏற்படலாம். இதுவும் ஓர் மாய உணர்வு தான். மதுவின்மயக்குகின்றதன்மை ஓர் "மப்பு" உணர்வை ஏற்படுத்துகின்றது. (மயக்க மருந்து கொடுத்தது போல) இது துன்பங்களையும் பயங்களையும் தற்காலிகமாக அகற்றி விடுகின்றது. (ஆழ்த்தி விடுகின்றது)

➤ தனிமை உணர்வும் சோர்வும் ஏற்படலாம்.

➤ கோபம், பொறுமையின்மை போன்ற உணர்வு மாற்றங்களும் ஏற்படலாம்.

**வெளித்தூண்டல்கள்:**

✸ **குடி தொடர்பான ஞாபகங்கள்:** குடிக்கும் இடங்களுக்கு செல்லல், குடித்த இடத்தைக் கடந்து செல்லுதல், குடிப்பவருடன்நேரம்செலவிடுதல் போன்றன குடியை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். குடியை நாடும் நடத்தையைத் தூண்டிக் கொண்டிருக்கும்.

✸ **கையில் அதிக பணம் கிடைத்தல்:** திடீரென்று அதிக பணம் கிடைக்கும் நாட்கள் ஆபத்தானவை. சம்பளநாள், வெளிநாட்டிலிருந்து பணம் கிடைக்கும் நாள் போன்றன மனதை இழுக்கும் வல்லமை வாய்ந்தன.

✸ **பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் வேளைகள்:** பணம்பற்றாக்குறை, கடன் பிரச்சினைகளைச்சமாளிக்கமுடியாமல் இருக்கும் போது. இது இயல்பு நிலை மாற்றம் போலத் தோன்றும். ஏழ்மைநிலையை உணர்வதுபோன்றவை குடியை நோக்கிச் செல்ல வைக்கும். இது அவர்களின் ஏழ்மையையும் பிரச்சினையையும் மறக்கச் செய்யும். மேலும் இது குடித்தலுக்கான எளிதான ஒரு காரணமாகவும் அமையும்.

✸ **நட்பின் அடையாளம்:** மது அருந்தும்பழைய நண்பனைச் சந்திக்கும் வேளையில் தூண்டப்படும்.

**உள்தூண்டுதல்கள்**

குடியை விட்ட ஒருவர் மீண்டும் குடிக்கத் தொடங்குவதற்குப் புறத் தூண்டல்கள் மட்டும் காரணமாகாது. அவரிலே தினமும் இருக்கின்ற குழப்பமான மனநிலையும், தளர்வான உறுதிப்பாடும்கூட அவர் மீண்டும் குடியை நாடுவதற்குக் காரணமாகலாம். இவ்வாறான தனிநபர் சார்ந்த சில உட்தூண்டல்களையும் இங்கு குறிப்பிடலாம்.

⅄ **அதிகரித்த மன உளைச்சல்:** அமைதியின்மை, கோபம், தளைப்பு, பயம், பதற்றம், பதகளிப்பு, கவலை உருவாகும் நாட்களில் குடிக்கும் எண்ணம் ஏற்படலாம்.

⅄ **அலுப்புச் சலிப்பு:** குடியை விட்டு இருப்பவர்கள் எந்த வேலையும் இல்லாமல் *"சும்மா"* இருக்கும் போது தனிமை,சலிப்புத் தன்மை உண்டாகும் போது மீண்டும் *"குடித்தால் என்ன"* என்ற உணர்வு ஏற்படலாம்.

⅄ **வலிநிவாரணி:** உடல்நிலை சரியில்லாத வேளைகள், நோக்கள், வலிகள் உருவாகின்ற நேரங்கள் மனதில் காயங்கள் ஏற்படும் வேளைகள் யாவும் ஒருவரை மறுபடியும் குடியை நோக்கிக் கொண்டு செல்லும் தன்மை வாய்ந்தவை.

குடிக்கும் போது அவர்களிடம் காணப்பட்ட செயற்பாடுகள் குடியை விட்டபின்னர் மாறுதலாக இருக்கும். அவர்கள் திருந்தி வரும் போது அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு குடும்பத்தினர் தயாராகவிருக்க வேண்டும். கணவன் குடித்து விட்டு முன்பக்கக் கதவைத் திறக்க, மனைவி பின்பக்கக்கதவை திறந்து ஓடிய அந்த நிலைமை மாறவேண்டும் அத்துடன் குடிக்கிற காலத்தில் குடிப்பதற்கும் பின்னர், போதையேற்பட்ட பின்னர் செலவழிக்கும் நேரமும், குடியை விட்ட பின்னர் மிச்சமாக இருக்கும். அந்த நேரத்தில் அவருடைய சிந்தனை பழைய பாதையில் செல்லாதிருக்க வேறு செயற்பாடுகளை ஊக்குவித்து,அவருடைய தனிப்பட்ட திறமைகளை கண்டுபிடிக்க வேண்டும். அத்துடன் அவருடைய தொழிலமுறைகளையும், தேவைப்பட்டால் சிலவேளை மாற்ற வேண்டியிருக்கும். அது மட்டுமன்றி, குடியால் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக தனியாள் உளவளத்துணை தேவைப்படும். தொடர்ச்சியாக ஒரு பழக்கத்திற்கு அடிமையான ஒருவரை, மாற்றுவது என்பது கடினமான காரியம். ஆனாலும் நாங்கள் அவ்வாறான மாற்றத்தை கொண்டுவந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறான வேளைகளில் சிலரை மாற்ற முடியாமற் போவதுமுண்டு.

**4.மதுப்பாவனையானது குடும்பத்தில் உள்ள சிறுவர்களை எவ்வளவு பாதிக்கின்றது அவர்களோடு செயற்படும் முறைகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

குடும்பத்தில் ஒருவர் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகியிருந்தால் அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் உடல், உளரீதியாக பாதிக்கப்படுவார்கள். அதாவது குழந்தைகளை அடித்து துன்புறுத்துதல், வார்த்தைகளால் தண்டித்தல் போன்ற செயற்பாடுகள் குடிபோதையிலுள்ள தந்தையாலோ சகோதரனாலோ மேற்கொள்ளப்பட்டால் அந்தப்பிள்ளை உளரீதியாகப் பாதிக்கப்பட்டு,

எதுவும் பேசாதே!
எதையும் உணராதே!
எதையும் நம்பாதே!

என்ற நிலைக்கு தானாகவே சென்றுவிடும். காலையில் தந்தையால் கொடுக்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் மாலையில் நிறைவேற்றப்படுவதில்லை என்றுணர்ந்த குழந்தை நம்பிக்கையற்ற குழந்தையாக வளர்ந்து வாழ்க்கையில் பிடிப்பற்று, எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாத, எதுவும் பேசாத, தன்னுடைய ஆளுமைகளை வெளிப்படுத்த விரும்பாத, பிள்ளையாக வளர்ந்துவிடும். எதிர்காலத்தில் சந்தேக உணர்வோடு எல்லா விடயங்களையும் பார்க்கத்தொடங்கும் போது, வாழ்க்கையையும் பிரச்சினைகளூடாக பார்க்கத்தொடங்கும். ஆக பல்வேறு மட்டப்பிரச்சினைகளுக்கு குடி அடிப்படைக்காரணமாக அமைந்து விடுகின்றது. சமூக விரோதமான ஆளுமை விருத்தியடையும். தகப்பனை, சமூகத்தை வெறுத்தல் போன்றவை தோன்றும். அவர்களும் குடிகாரர்களாக வரும் தன்மையும் தோன்றும். (அரிதாக குடிகாரர்களின் பிள்ளைகள் ஓர் எதிர்வினையாக குடிக்காதவர்களாகவும் வரக்கூடும்.

**5.கள்ளுக்குடிப்பது உடலுக்கு "நல்லது ஆரோக்கியமானது" என்றெல்லாம் பலரும் குடிக்கின்றார்களே, அத்துடன் குடிப்பவர்களுக்கு உதவும் வகையில் எங்களுடைய பிரதேசங்களில் பல மதுபானசாலைகள் உருவாக்கப்படுகின்றனவே இவை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

மதுபானச் சாலைகளின் பெருக்கம், அதிக மக்கள் குடிப்பவர்களாக மாறும் ஆபத்தை அதிகரிக்கின்றது. குடிக்க வேண்டும் என்ற சபலத்தை ஏற்படுத்தி அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றது.

எங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்று தெரிந்தும் நாங்கள் தானாகவே சென்று பாதிப்பை விலைக்கு வாங்குவது சரியா? கள்ளு உடலுக்கு ஆரோக்கியம் என்றுதான் ஆரம்பிக்கும் ஆனால் ஆரம்பத்தில் சிறிதளவில் குடிக்கப்பட்ட கள்ளு, பின்னர் போத்தல் கணக்கில் உள்ளெடுக்கப்பட்டு, அதன் பின்னர், சிறிதளவு பானத்தில் அதிக போதை வேண்டும், என்று புதிய வகை பானத்துக்கு மாறுகின்ற நிலைதான் இங்கு வந்த அநேகமானவரின் மது அடிமைக்கு காரணமாகும். ஆகவே கள்ளு குடிப்பது என்ன நிலைக்கு கொண்டுவரும் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

**மதிப்புள்ள மனிதனாக வாழ**
**மதிப்பற்ற மதுவைக்கைவிடு**
**மதிப்பான மனிதர்கள் உன்னை நாடிவருவார்கள்.**


**(குருந்தத்தின் அன்றைய நாள் வாசகம் அங்கு சிகிச்சை பெறும் ஒருவரால் எழுதப்பட்டது)**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**


மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:
Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கோ வைத்து சுட்டுவிட்டு இங்கே கொண்டுவந்து போட்டுள்ளார்கள்

## தமிழன் என்றால் எதுவும் செய்யலாமா?




உடல் அருகே பச்சை நிற பாக்கு கவர்...



தலையில் காயத்துடன்...



அனைவருமே மல்லாந்து விழுந்த நிலையில்...



உடல் அருகே செல்போன்...

தோல் உரிக்கப்பட்ட கைகள், கருக்கப்பட்ட உடல், அடித்துத் துன்புறுத்திய காயங்கள் என்று திருப்பதியில் கொல்லப்பட்ட தமிழர்களின் உடலில் அத்தனை ரணாங்களும் ஆதாரங்களாக இருக்கின்றன. ஆனாலும், 'செம்மரம் வெட்ட வந்தவர்களை சுட்டோம்' என்று தொடர்ந்து சாதித்து வருகிறது ஆந்திர அரசு.

இந்தச் சூழலில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடங்கி பல முக்கிய க்ரைம் சம்பவங்களில் தடய அறிவியல் மூலமாக குற்றவாளிகளைப் பிடிக்கக் காரணமாக இருப்பவர் டாக்டர் பேராசிரியர் சந்திரசேகரன். தடய அறிவியல் துறையின் முன்னாள் இயக்குநர் இவர். திருப்பதி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக ஆய்வு விசாரணை செய்து வருகிறார் சந்திரசேகரன்.

சம்பவ இடத்தில் பல்வேறு கோணாங்களில் எடுத்த புகைப்படங்களை சந்திரசேகரனுக்கு அனுப்பி வைத்தோம். அவர் அப்புகைப்படங்களை நன்கு ஆய்வு செய்துவிட்டு தெரிவித்திருப்பதாவது,

இது அப்பட்டமான படுகொலை என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. எனக்குக் கொடுத்த புகைப் படங்களை அங்குலம் அங்குலமாக அலசி ஆராய்ந்துவிட்டேன். அதில் பல உண்மைகள் தெரியவந்துள்ளன.

மனித உரிமை மீறல்கள் நிறைய நடந்துள்ளன. இது ஒரு போலி என்கவுன்டர் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

பொதுவாகவே, கொலை செய்யப்பட்டாலோ, சித்திரவதை செய்யப்பட்டாலோ அந்த உடல் துடிக்கும். உயிர் பிரியும்போது நடக்கும் மரணப் போராட்டம் கொடூரமானது. அந்தக் கடைசி நேரத் துள்ளல் இங்கே இல்லை. மரணப் போராட்டமும் நடக்கவில்லை. அப்படி நிகழ்ந்திருந்தால் உயிர் பிரியும்போது, உடல் ஒருநிலையில் இருக்காது. வேறுவேறு நிலையில் உடல் தலைகுப்புற சுருண்டு கிடக்கும். ஆனால், திருப்பதி ஸ்பாட்டில் பெரும்பாலான உடல்கள் மல்லாக்க கிடக்கின்றன. இதற்கு வாய்ப்பே இல்லை. வேறு எங்கோ கொன்றுவிட்டு, இந்த ஸ்பாட்டில் கொண்டுவந்து உடல்கள் கிடத்தப்பட்டுள்ளன.

சிவப்பு பனியன் அணிந்த ஓர் உடலில் முதலில் துப்பாக்கி பானட்டால் நெஞ்சில் குத்தி பனியனை கிழித்திருக்கிறாரகள். அதற்கான காயங்கள் தெரிகின்றன. பிறகுதான், மிகவும் நெருக்கத்தில் வந்து சுட்டிருக்கிறார்கள். இன்னோர் உடலின் தலை சிதறி கிடக்கிறது. இதுவும் மிக அருகிலிருந்து சுடப்பட்டதுதான்.

உடல்கள் அருகில் கிடக்கும் மரத்தின் வயது, தன்மையை உன்னிப்பாகக் கவனித்தேன். சுற்றுவட்டாரத்தில் ஐந்து கி.மீ. தொலைவுக்கு செம்மரங்களே இல்லை. உடல் கிடந்த இடத்திலும் பாதியில் வெட்டப்பட்ட வேர் பகுதிகள் எங்கும் இல்லை. இதை வைத்துப் பார்க்கும் போது, தமிழர்களை கொன்ற பிறகு, வேறு எங்கிருந்தோ கட்டைகளை தூக்கி வந்து உடல் அருகே போட்டு செட்டப் செய்திருக்கிறார்கள்.

ஒருவேளை, தமிழர்கள் தலைச்சுமையாக மரங்களைத் தூக்கி வந்ததாகவே வாதத்துக்கு வைத்துக்கொண்டாலும், தலையில் வைக்கும் 'சும்மாடு'கள் சிதறிக்கிடக்கும் அல்லவா? அவை எங்கேயும் இல்லையே? வெறும் தலையிலா மரத்தைத் தூக்கி வந்தார்கள்? சில மரங்களின் புகைப்படங்களைப் பெரிதுபடுத்தி பார்க்கும்போது, அவற்றில் தெலுங்கு எழுத்துகள் காணப்படுகின்றன.

சில மரங்களில் இருந்த எழுத்துகளை அழித்திருப்பதற்கான தடயங்கள் தெரிகின்றன. அப்படியென்றால், முன்பு எப்போதோ கைப்பற்றப்பட்டு வனத் துறையின் குடோன்களில் வைக்கப்பட்டிருந்த செம்மரக் கட்டைகளை அவசர அவசரமாகத் தூக்கிவந்து, எழுத்துகளை அழித்து கொல்லப்பட்ட உடலுக்கு அருகே போட்டிருக்கிறார்கள்.

கற்களைக் கொண்டு தாக்கியதால்தான் சுட்டோம்' என்று பொலிஸ்தரப்பில் சொல்கிறார்கள். அந்த இடத்தில் கற்களே தென்படவில்லை.

ஒருவரின் உடலில் தலைக்காயம் பெரியதாக உள்ளது. ஏதோ பலமான ஆயுதத்தால் தாக்கியிருக்கிறார்கள். அதனாலே, அவர் இறந்திருக்க வேண்டும். உயிர் போனபின்பு, அந்த உடலின் வயிற்றில் வேட்டைத் துப்பாக்கியின் முனையை அழுத்திச் சுட்டிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், துப்பாக்கிக் குண்டுடன் சேர்த்து புகை, துகள்கள் அனைத்தும் குண்டு பாய்ந்த காயத்தில் புகுந்திருக்கின்றன. அதனால்தான், அந்தக் குறிப்பிட்ட இடம் கறுத்து காணப்படுகிறது. தூரத்தில் இருந்து சுட்டிருந்தால், இப்படி நிகழ வாய்ப்பில்லை. இப்படித்தான், பெரும்பாலானவர்களை மிக அருகில் நின்று சுட்டிருக்கிறார்கள் என்பதற்கான தடயங்கள் தெரிகினறன.

எனக்குக் கிடைத்த தகவல்படி, இது ஒரு மாஸ் படுகொலை. 20 பேர்களைத் தவிர, மேலும் பலர் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களின் உடல்களை என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை.

செருப்புகளை போட்டிருந்தவர்கள் யார்? யார்? என்று விசாரிக்கவேண்டும். வெளியில் இருந்து வந்தவர்களின் செருப்புகளாகக்கூட இருக்கலாம். நீல நிற பிளாஸ்டிக் பையில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இறந்துவர்களுடையதுதானா என்று தெரியாது. வெளியில் இருந்து வந்தவர்களின் பொருட்களும் இருக்கலாம் அல்லவா?

உதாரணத்துக்கு, மரக்கட்டை ஒன்றின் கீழே என்று பச்சை நிற பாக்கு கவர்கள் கிடக்கின்றன. இது பாக்குப் பொட்டலமாக இருக்கலாம். இதைப் பயன்படுத்தியது யார் என்பதுதான் கேள்வி? இறப்பதற்கு முன்பு தமிழர்கள் பயன்படுத்தினார்களா அல்லது ஆந்திர பொலிஸ்காரர்கள் பயன்படுத்தினார்களா என்று விசாரிக்க வேண்டும், அதை எங்கே வாங்கினார்கள்? எப்போது வாங்கினார்கள்? அதில் உள்ள திகதி விபரங்களை ஆராய வேண்டும்.

நானும் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறேன். தினம்தினம் புதுப்புது ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன. அவற்றையும் விரைவில் வெளியிடுவேன் என்று சொல்லி முடித்தார்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதிப்படை மீண்டும் இலங்கையில்!



ஈழ விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு என்றும் தவிர்க்கப்பட முடியாததொன்று. இலங்கை அரசு உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று பகிரங்கமாக அறிவித்தாலும் இராஜதந்திர ரீதியாக செயற்பட்டாலும் இந்தியா என்றும் விலகிச் செல்ல முடியாத நிலையில்தான் தற்போதும் உள்ளது. காரணம் இந்தியாவின் நலன் இலங்கையைச் சார்ந்திருப்பதையும் இலங்கையில் ஏற்படும் மாற்றங்கள் இந்தியாவை நிறையவே பாதிக்கும் என்பதை நன்கு அறிந்திருப்பதாலும் இந்தியா இலங்கையைவிட்டு தூரவிலகிச் செல்ல முடியாத நிலையிலுள்ளது.

இலங்கை- இந்தியாவுக்கு இடையில் இருந்துவந்த நீண்டகால உறவில் மகிந்த ஆட்சிக்காலத்தில் சீனாவைச் சார்ந்து இலங்கை செயற்பட்டதாலும் தமிழின அழிப்புக்கு இந்தியா துணைபோனது என்று தமிழர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டதாலும் பிளவு ஏற்பட்டிருந்தது. இந்தப் பிளவு தற்போது விரிவடையவில்லை என்று கூறினாலும் இணையவில்லை என்ற உண்மையையும் ஒத்துகொள்ளத்தான் வேணடும். ஏனெனில் இரு நாட்டு உறவும் தற்போது அப்படித்தான் உள்ளது.

இன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி தமிழீழ விடுதலைப் புலிகளை வளர்த்தது என்றும் இன அழிப்புக்குச் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆதரவை இந்திய மத்திய அரசு வழங்கியது என்ற குற்றச்சாட்டு இலங்கையில் தமிழர் தரப்பிலும் சிங்களவர்கள் தரப்பிலும் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதனை இந்திய அரசு மறுக்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளதை உலகம் அறியும்.

இலங்கையிலும் இந்தியாவிலும் மத்திய அரசில் நீண்டகாலத்திற்குப் பின்னர் மாற்றம் ஏற்பட்டு பல மாறுதல்களும் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில், ஈழத்தில் நடந்த அவலங்களுக்கு காரணம் கூறுபவர்களுக்கும் குற்றச்சாட்டுக்களிலிருந்து தம்மைவிடுவித்துக் கொள்ள படாதபாடுபடுபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வளர்த்துவிடுவதில் இந்திய மத்திய அரசும் தமிழ்நாடு மாநில அரசும் அங்கிருந்த முக்கிய அரசியல்வாதிகளும் அதிக முனைப்புக் காட்டியிருந்தனர். இதனால்தான் இலங்கை அரசாங்கத்திற்கு சவால்விடும் வகையிலும் இனத்தின் விடுதலைக்காக பல கோரிக்கைகளை முன்வைக்கவும் அந்த அமைப்பினரால் முடிந்தது.

இன விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசு வழங்கிவந்த ஆதரவு ஒரு சில தவறுகளாலும் தவறுகளை மாபெரும் பிழையாக அடையாளப்படுத்த முற்பட்டவர்களாலும் சின்னாபின்னமாக்கப்பட்டது. இதனால் தமிழினமும் முள்ளிவாய்க்கால் வரை சென்று சீரழிந்து போனது இதனையும் இந்த உலகம் நனகறிம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் செய்த தவறுகளை இந்திய அரசு மன்னித்துவிட முடியாது என்று கூறுவது எவ்வளவு நியாயமானதோ அதேபோன்று இந்தியாவில் ஆட்சியலிருந்துகொண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரும் ஈழத் தமிழுரை பழிவாங்கும் உணர்வினை கைவிடாதிருந்த காங்கிரஸ்காரர்களையும் மன்னித்துவிடாது தமிழினம்.

காங்கிரஸ் அரசின் நடவடிக்கைகள் இனப் படுகொலையின் பின்னரும்கூட தவறுகளைத் திருத்திக்கொள்வதாக அமையவில்லை. அதனால்தான் தமிழ நாட்டில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த இந்தியாவிலும் அக்கட்சி தோல்வியை சந்தித்தது. தற்போதும் அக்கட்சியின் வீழ்ச்சிப் பயணம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இலங்கையில் நடந்த சம்பவம் இந்தியாவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு வலுவானதாகயிருக்கும் போது அங்குள்ள அரசியல்வாதிகள இலங்கையின் நலனில் அக்கறை செலுத்துவது நியாயமானதொன்றாகவே கருதப்பட வேண்டியுள்ளது. இதை காங்கிரஸ் தற்போது உணர்ந்திருக்கும் என நம்பலாம்.

ஈழத்தில் இனப்படுகொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் ஆட்சிப் பீடத்திலிருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தமிழ்நாட்டில் ஆதரவாக கருத்துக்களைக் கூறியவர்களை அடக்கமுற்பட்டனரே தவிர அழிவுகளை தடுக்க தவறிவிட்டனர். மக்கள் உண்ண உணவின்றி அல்லற்பட்டபோதும் காயப்பட்டவர்கள் கதறியபோதும், உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் பதறியபோதும் இரக்கப்படவில்லை இந்திய அரசு.

இந்திய அரசாங்கம் தமிழினத்தை நிர்க்கதியாகவிட்டது முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல, அதற்கு முன்பும் பல முறை தனது கொடூர முகத்தை வெளிப்படுத்திக்கொண்டுதான் இருந்தது. இருப்பினும் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பட்டிருந்தனர்.

அமைதியை நிலைநாட்டுவோம் என்ற போர்வையில் தமிழீழத்திற்குள் நுழைந்து தமிழரை அடிமைகள் போன்று நடத்தியது மட்டுமல்லாது பல பெண்களையும் ஆண்களையும் வன்முறைகளுக்குள்ளாக்கி அட்டூழியங்களை அரங்கேற்றியதால் அவர்களையும் அழிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குத் தமிழர் தரப்பினர் தள்ளப்பட்டனர்.

அழிவை ஏற்படுத்துபவர்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதாலும் அடக்குமுறைகளுக்கு எதிராக குரல்கொடுக்க முற்பட்டதாலும் அடிமைத்தனம் போக்கும் எண்ணம் மேலோங்கியதாலும் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தது.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் அதனைச் செய்யத்தவறியதோடு மட்டுமல்லாது, பாதுகாப்பு வழங்கவேண்டியவர்களே பாதுகாப்புப் படைகளை ஏவிவிட்டு அழிவுகளை அரங்கேற்றியிருந்தனர். இதனால் மாபெரும் சக்தியாக தமிழினத்தின் விடுதலைப் போராட்ட பேரியக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் உருவெடுத்தனர்.

முப்படைகளின் பலத்துடன் அதிநவீன ஆயுதங்களை தம்வசம் வைத்துக்கொண்டு சீரிய நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தி தமிழர்களின் காவலர்களாக மாறினர். அதனால் இன்றும் அந்த அமைப்பினர் இந்த உலகம் பூராகவும் வியாபித்து இருக்கும் தமிழர் மனங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துள்ளனர். அவர்களின் தியாகங்கள் இந்த உலகத்தின் எந்த மூலையில் தமிழன் இருந்தாலும் நினைவு கூரப்படும் வகையில் உள்ளது.

இலங்கைப் படைகள் தமிழர்களை அடக்கி ஒடுக்குவதை சகித்துக்கொள்ள முடியாத நிலையில் தம்மின விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்களை அடக்கும் நோக்குடன் சிங்களப் படைகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நோக்குடனும் இலங்கைக்குள் நுழைந்த இந்திய அமைதிப்படை என்ற போர்வையில் வந்த அழிவுப்படையினர் குறித்து அந்நாட்டின் வெளியுறவுத் துறை துணை அமைச்சரும் முன்னாள் இந்திய இராணுவத் தளபதியுமான வ.கே.சிங். அண்மைக்காலமாக முன்வைத்துவரும் கருத்துக்கள் இலங்கையில் மீண்டும் இந்திய அமைதிப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட அராஜகங்களை நினைவுகூர வைத்துள்ளது.

இந்திய இராணுவத்தால் பயிற்சியளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்கென இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது உயர் மட்டத்தில் எடுக்கப்பட்ட மிகவும் தவறான முடிவு என்றும் இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்புவது என்று எடுக்கப்பட்ட முடிவு இராணுவ மட்டத்தில் எடுக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

மேலும், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடந்துகொண்டு இருக்கும் போது இலங்கை அரசுடன் மட்டும் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துகொண்டதையும் தவறு என்று சுட்டிக்காட்டியுள்ளார் வீ.கே.சிங்.

ஈழத்தில் நடந்த கொலைகள் ஆறாத ரணங்களாக ஒவ்வொரு தமிழனையும் வருத்திக்கொண்டு இருக்கும் போது தமிழன் எங்கிருந்தாலும் அழிக்கப்படுவான், அடிமைப்படுத்தப்படுவான், நிர்வாணமாக்கி நிலைகுலையச் செய்து நீண்டவரிசையில் பிணாங்களாக அடுக்கப்படுவான் என்பதை நினைவுபடுத்தும் வகையில் ஆந்திர மாநிலத்தில் 20 தமிழர்கள் அந்நாட்டுப் படையினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில் வீ.கே.சிங். இந்தக்கருத்தை முன்வைத்துள்ளமை வழமைபோன்று இல்லாமல் சற்று அதிகளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இருந்தாலும் இந்தியாவில் இருந்தாலும் ஏன் உலகத்தில் எங்கு இருந்தாலும் அழிக்கப்படும் இனாங்களின் பட்டியலில் தமிழினம் முதலிடத்தில் உள்ளது என்ற எண்ணத்தை அல்லது ஐயத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழீழத்திலும் தமிழகத்திலும் தமிழனின் அழிவு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அழிவுகள் தொடர்ந்தாலும் அதனைத்தடுக்கவேண்டியவர்கள் ஆணைக்குழுக்களை அமைப்பதைத் தவிர வேறு எதனையும் செய்ததாகத் தெரியவில்லை. அது காங்கிரஸ் அரசாகட்டும் பா.ஜ.க. அரசாகட்டும் இந்நிலை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

தன்நாட்டு மக்கள் அழிக்கப்படுவது அபகீர்த்தியல்ல. அது தொடர்பான விசாரணைகளை சர்வதேச நாடுகள் முன்னெடுப்பதுதான் அபகீர்த்தி என்று கூறும் அரச தலைவர்கள் உள்ளவரை இந்த அழிவுகள் தொடரும் என்பதற்கு இலங்கை- இந்திய அரசுகள் விதிவிலக்கல்ல என்பது போன்றே அவற்றின் செயற்பாடுகள் உள்ளன.

எதிர்க்கட்சியாகயிருந்த போதும் பா.ஜ.க. ஈழத்தில் நடந்த அநீதிகளுக்கு எதிராக உரத்து குரல் கொடுக்கவில்லை. அதேபோன்று ஆளும் கட்சியாக வந்த பின்னரும் தமிழனின் நலன் சார்ந்து இதுவரை ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை என்ற அவச்சொல்லைத்தாங்கி நிற்கும் நிலையில்தான் அக்கட்சியின் உறுப்பினரும் துணை அமைச்சருமான வீ.கே.சிங். இத்தகைய கருத்தை முன்வைத்துள்ளார்.

வீ.கே.சிங்கின் கருத்து பா.ஜ.க. அரசுக்கு ஆதரவானதாக அமைந்தாலும்கூட இந்தியா மீது தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு செய்த துரோகமாகவே பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி காங்கிரஸ அரசின் இராஜதந்திர தோல்வியை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

காங்கிரஸ் அரசின் மீதும் அக்கட்சியினர் மீதும் வீ.கே. சிங்கோ அல்லது அவர் சார்ந்துள்ள பாரதீய ஜனதா கட்சியோ குற்றம் சாட்டுவதாலும் ஒருவரை ஒருவர் குறைகூறுவதாலும் இராஜதந்திர தோல்விகளை ஒப்புக்கொள்வதாலும் புண்பட்ட இதயங்களை ஆறுதல்படுத்திவிட முடியாது. அதை தமிழர்கள் எதிர்பார்க்கவும் இல்லை.

இலங்கை அரசின் உத்தரவின் பேரில செயற்பட்ட படைகளும் இந்திய அமைதிப் படையினரும் செய்த படுகொலைகளுக்கு நீதி விசாரணையைக் கோரி நிற்கின்றனர்.

இலங்கைப் படைகள் அரங்கேற்றிய அட்டூழியங்களை விசாரிப்பதற்கே இந்திய அரசு உரத்து குரல் கொடுக்கத் தவறியுள்ள அதே வேளை ஈழத்தமிழரின் கோரிக்கைகளை நிறைவேற்றுமா? அல்லது இந்திய அமைதிப்படையின் படுகொலைகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க மோடி அரசு முனைப்பு காட்டுமா? என்றால் அது எக்காலத்திலும் நடக்கப்போவதில்லை.

தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டாலும் பரவாயில்லை தமது பிராந்திய நலனே அவசியம் என்று இந்தியா கருதும் என்பதில் எந்த விதமான ஐயமுமில்லை. இந்தியாவை நம்பிக்கொண்டு இருப்பதில் எவ்விதப் பயனுமில்லை. படுகொலைகளை இலங்கைப் படைகள் செய்தால் என்ன இந்தியப் படைகள் செய்தால் என்ன உயிரிழந்தவர்கள் தமிழர்கள் என்பதால் விசாரணைகள் தேவையில்லை என்று கருதும் வக்கிர மனநிலையில் ஆட்சியாளர்கள் உள்ளனரே. இது ஒன்றே போதுமே தமிழினம் தொடர்ந்து அழிவதற்கு.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:கௌரவம்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராசன்




பாலூட்டி வளர்த்த கிளி பழம் கொடுத்து பார்த்த கிளி
பாலூட்டி வளர்த்த கிளி பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு
நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா
செல்லம்மா எந்தன் செல்லம்மா

சட்டமும் நானுறைத்தேன் தைரியமும் நான் கொடுத்தேன்
சட்டமும் நானுறைத்தேன் தைரியமும் நான் கொடுத்தேன்
பட்டம் மட்டும் வாங்கி வந்து பாய்ந்து செல்ல பாக்குதடி
பட்டம் மட்டும் வாங்கி வந்து பாய்ந்து செல்ல பாக்குதடி செல்லம்மா எந்தன் செல்லம்மா
பாலூட்டி வளர்த்த கிளி பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு செல்லம்மா எந்தன் செல்லம்மா

நீதிக்கே துணிந்து நின்றேன் நினைத்ததெல்லாம் ஜெயித்து வந்தேன்
நீதிக்கே துணிந்து நின்றேன் நினைத்ததெல்லாம் ஜெயித்து வந்தேன்
வேதனைக்கு ஒரு மகனை வீட்டினிலே வளர்த்து வந்தேன்
வேதனைக்கு ஒரு மகனை வீட்டினிலே வளர்த்து வந்தேன்
செல்லம்மா எந்தன் செல்லம்மா செல்லம்மா எந்தன் செல்லம்மா
பாலூட்டி வளர்த்த கிளி பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா
ஆண்டவன்சோதனையோயார்கொடுத்தபோதனையோ
ஆண்டவன்சோதனையோயார்கொடுத்தபோதனையோ
தீயனிலே இறங்கி விட்டான் திரும்ப வந்து தாழ்பணிவான்
தீயினிலே இறங்கி விட்டான் திரும்ப வந்து தாழ்பணிவான்
சத்தியம் இது சத்தியம் செல்லம்மா எந்தன் செல்லம்மா
பாலூட்டி வளர்த்த கிளி பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா
செல்லம்மா எந்தன் செல்லம்மா


**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
**சஜி- நெல்லியடி, கோபி- கீதா , கோமிதா, லக்கி, அப்பாவுக்காகவும் நண்பர்கள் அஜி, உசா, திவ், சிவராஜினி, சகோதரி, சுஜிஜா, ஏ. விதுஷன், சுன்னாகம்**

### அன்பு வாசகர்களே !

**காலத்தால் அழியாத கானங்கள்** பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சாஙகுநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

## ஜெயகாந்தன் என்ற எழுத்து இமயம்



அமரர் நா.பார்த்தசாரதி (மணிவண்ணன்) கல்கியில் **குறிஞ்சிமலர், பொன்விலங்கு** நாவல்களைத் தொடராக எழுதியபோது அவற்றைப் படித்த ஏராளமான வாசகர்களில் நானும் ஒருவன். பொன்விலங்கு முடிந்ததும் அதுபற்றி நா.பாவுக்கு ஒருகடிதம் எழுதினேன். பின்னர் அவர் கொழும்புக்கு வந்தபோது தன்னைச் சந்திக்கும்படி எழுதியிருந்தார். கிறீன்லன்ட் ஹோட்டலில் அவரைச் சந்தித்தேன். பல இலக்கியக்கூட்டங்கள் என கண்டி, நாவலப்பிட்டி போன்ற இடங்களுக்குச் சென்றோம். அப்போது அவர் **தீபம்** என்ற இலக்கிய சஞ்சிகையை நடத்திக் கொண்டிருந்தார். நா.பா. எமது குடும்ப நண்பரானார்.

பின்னர் ஒரு நண்பருடன் நான் தென்னிந்தியாவுக்குச் சென்றபோது திருச்சியிலிருந்து நா.பாவுக்கு சென்னைக்கு வந்து சந்திப்பதாகவும் ஜெயகாந்தனைச் சந்திக்க வேண்டுமென்றும் அறிவித்திருந்தேன். அடுத்த சில நாட்களில் ஒருநாள் காலை திருவல்லிக்கேணியிலிருந்த தீபம் காரியாலயத்திற்குப் போனோம். நா.பா. வரவேற்று உபசரித்ததோடு இலங்கையில் புறப்படும்போதே அறிவித்திருந்தால் ஒரு இலக்கியச் சந்திப்பிற்கே ஏற்பாடு செய்திருக்கலாம் என்று சொன்னார்.

காலையிலேயே திருவல்லிக்கேணி கோயிலுக்குச் சென்றோம். அந்தக் கோயில் வாசலில்தான் பாரதியார் யானைக்குப் பழம்கொடுத்து அதனால் தாக்கப்பட்டார். சிறிது தூரம் நடந்து ஓர் அக்கிரகாரத்துள் நுழைந்து சென்று கடைசியில் ஒரு சிறிய மேல்வீட்டில் வசித்துவந்த எழுத்து ஆசிரியர் சி.சு.செல்லப்பாவைச் சந்தித்தோம்.

அன்று மாலை நா.பா. சொன்னார். ஜெயகாந்தனுக்கு நீங்கள் இலங்கையிலிருந்து வந்திருப்பதாகச் சொல்லியிருந்தேன். அவர் நமது காரியாலயத்திற்கு வந்து கொண்டிருக்கிறார் என்று.

நா.பாவின் காரியாலய அறையில் எம்மோடு எழுத்தாளர் அசோகமித்திரன் மணிசாஸ்திரி என்ற நாடக எழுத்தாளர், ஓவியர் மாருதி, மலையாள எழுத்தாளர் ஒருவர், இன்னும் சில இளம் எழுத்தாளர்கள் சேர்ந்துவிட்டனர். எல்லோரும் ஜெயகாந்தனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். வெளியில் நின்ற முகாமையாளர் திருமலை என்பவர் அறைவாசலில் வந்து ஜெயகாந்தன் வந்துவிட்டதாகச் சொன்னார்.

ஜெயகாந்தன் ஆனந்தவிகடனில் எழுதிய முத்திரைக் கதைகளை நினைத்துக்கொண்டிருந்தேன். சிறந்த கதைகளுக்கு ஆனந்தவிகடன் ஒரு முத்திரை போன்ற இலச்சினையைக் குத்தி வெளியிடுவார்கள்.

நாங்கள் எழுந்து நின்றோம். ஜெயகாந்தன் வாசலில் வந்து உள்ளே வருகையில் நா.பா. எங்களை அவருக்கு அறிமுகப்படுத்தினார். அவர் கைகொடுத்து வணக்கம் சொல்லி விட்டு உள்ளே சென்று அமர்ந்து கொண்டார். தீபம் ஆண்டு மலருக்குத் தான் எழுதிய ஒரு கட்டுரையை நா.பாவிடம் கொடுத்தார்.

நாங்கள் உரையாடத் தொடங்கினோம். அப்போது கட்டுரையை மேலோட்டமாக வாசித்துக்கொண்டிருந்த நா.பா.ஒரு வசனத்தில் ஒரு திருத்தம் செய்யலாமா என்று கேட்டார்.அதை வாசியுங்கள் என்றார் ஜெயகாந்தன். ஆசிரியர் வாசித்துக்காட்டி மாற்றத்தையும் சொன்னார். சரி அப்படியே மாற்றிக்கொள்ளுங்கள் என்றார் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தனின் சிறுகதை பற்றியும் அவரது **உன்னைப் போல ஒருவன், யாருக்காக அழுதான்** நாவல்கள் சினிமாவாக எடுக்கப்பட்டது பற்றியும் உரையாடினோம்.

நான் இந்தியாவுக்குச் செல்வதற்கு முன் சில மாதங்களுக்கு முன்னதாகத்தான் கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகன்நாதன் இல ங்கைக்கு வந்திருந்தார். அவர் அப்பே பாது இலங்கை எழுத்துக்கள், சிறுகதைகள் விளங்கவில்லை. அடிக் குறிப்புக்கள் தேவை எனஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். அதனைக் கேட்ட இலங்கை பிரபல எழுத்தாளர்கள் பொங்கி எழுந்தார்கள். **அக்கிரகாரக்குஞ்சே உமக்கு அடிக் குறிப்பு வேண்டுமோ** என்றெல்லாம் பத்திரிகைகளில் எழுதி னார்கள்.

இதனை நினைத்துக்கொண்ட நான் ஜெயகாந்தனிடம் இலங்கை எழுத்துக்கள் , இலக்கியங்கள் உங்களுக்கு விளங்குகின்றனவா என்று கேட்டேன்.

அவர் உடனே எனக்கு விளங்கினால்தான் அவைகள் இலக்கியங்களா? எனக்கு விளங்காவிட்டாலும் அவைகள் இலக்கியங்கள்தான் என்று சொல்லிவிட்டு சிறிது நேரத்தில் நீங்கள் எங்கள் தாசில்தாரை விளங்கிக் கொள்வது போல நாங்களும் உங்கள் விதானையாரையும் விளங்கிக்கொள்ளவேண்டும் என்றார். ஆங்கிலப்புத்தகங்கள், கதைகள் படிக்கிறோம், எல்லாச் சொல்லுமா விளங்கிவிடுகிறது என்றும் கேட்டார்.

இப்படியே பல இலக்கிய விடயங்கள் பேசியிருந்தபோது இரவு 7 மணிக்கு மேலாகிவிட்டது. நாங்கள் புறப்பட்டோம். அவர்கள் இன்னும் பேசலாம் ஏன் அவசரப்படுகிறீர்கள் என்றுகேட்டார்கள். அடுத்தநாள் அதிகாலை விமானத்தில் இலங்கை திரும்பவேண்டியிருக்கிறது என்று சொல்லிப் புறப்பட்டோம். வாசல் வரை அனைவரும் எழுந்து வந்து எம்மை வழியனுப்பினார்கள்.

ஜெயகாந்தன் தனது புத்தகங்களுக்கு எழுதும் முன்னுரைகளே தனித்துவமானவை. அவற்றையெல்லாம் சேர்த்து ஜெயகாந்தன் முன்னுரைகள் என்றே ஒருபுத்தகம் வெளிவந்திருக்கிறது.

ஜெயகாந்தன் எந்தக் கொம்பனுக்கும் பயந்தவரல்ல. ஆளுமை மிக்கவர். விவாதம், சர்ச்சை என்று வந்துவிட்டால் விட்டுவிடமாட்டார். பேச்சிலும் சரி எழுத்திலும் சரி அவரை வெல்வது கடினம்.

ஒருசிறுகதையில் ஒரு புதிரான முடிவை எழுதிவிட்டு இந்த முடிவு உங்களுக்குப் புரிகிறதா, புரிந்தால் நீங்கள் பாக்கியவான். புரியாவிட்டால் நான் என்னசெய்யட்டும் என்று முடித்திருப்பார்.

ஜெயகாந்தனின் எழுத்துக்கள் அவர் தற்போது காலமாகிவிட்ட பின்னரும் என்றும் நீடுவாழக் கூடியவர்கள் இலக்கிய நாட்டமுள்ள இன்றைய இளைஞர்கள். அவரின் எழுத்துக்களைத் தேடிவாசிக்க வேண்டும்.

உயர் இலக்கிய விருதாகிய பாரதீய ஞானபீடம் பரிசில் மிகத் தாமதமாகவே ஜெயகாந்தனுக்குக் கிடைத்தது. அவர் பரிசில்களை நோக்கிச் செல்பவரல்ல.

கவிப்பேரரசு வைரமுத்து, கவிதைக்கு பாரதி, தமிழ் நவீன வசனத்துக்கு ஜெயகாந்தன் என்று சொன்னார்.

ஒரு துணிவுள்ள , கர்வமுள்ள, தார்மீகக் கோபமுள்ள ஒரு தமிழ் எழுத்தாளர் என்றால் அது ஜெயகாந்தனாகத்தான் இருக்கமுடியும்.

**இரா.சந்திரசேகரன் (சர்மா)**

## ஈழத்து கவிதைகள்

**கவிஞர் சி.சிவசேகரம்**

### தொட்டிற் பழக்கம்

முன்னம் ஊரில்
ஆங்கில வகுப்பு வாத்தியார்
தமிழிற் கதைத்தால் ஏசுவார்
அடிப்பார் அபராதம் இடுவார்.

தமிழ்க் கதைப்புத்தகம் கையிற் கண்டால்
பறிமுதல் செய்வார். கிழித்தும் எறிவார்.
ஆனாலும் தமிழிற்தான்
வாய்க்குள் முணுமுணுப்பேன்.


இன்று கொழும்பில்
சிங்கள வகுப்புவாத வாத்தியார்
தெரு வழியே
தமிழிற் கதைத்தால்

முறைப்பார் முடியுமெனின் ஆட்சேர்த்து
அடிக்கவும் முனைவார்.
கையிற் தமிழ்ச் செய்தித்
தாள் கண்டால் ஏசிப்

பறித்துக் கிழிப்பார்.
ஆனாலும் தமிழிற் தான்
வாய்க்குள் முணுமுணுப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிப் பொருளோ?



சிறுகதை

அன்றிரவு நடந்த சம்பவத்தைப் பார்த்த வானமும கவலையடைந்தது போல் கரும் முகில்களுடன் சூழ்ந்து காணப்பட்டது. இடையிடையே கண்ணீர் சிந்துவது போல மழைத் துளிகளும் வீழ்ந்தன.

அன்று அதிகாலை தொடக்கம் அந்தக் கிராமமும் வழமைக்கு மாறாக்வே காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் பெண்கள் பெண்கள் நாலைந்து பேராகச் சேர்ந்து ஏதோ கிசுகிசுவென்று கதைத்தபடியே நின்றனர். பெண்கள் மட்டுமல்ல ஆண்களிலும் பலர் சோகத்தில் மூழ்கிய கதைகளுடனேயே நடமாடினர்.

அந்தப் பிள்ளைக்கு இப்படியுமொரு தலைவிதியோ? கோமதி பக்கத்தில் கூட்டமாக நின்ற பெண்களைப் பார்த்துச் சொன்னபடியே வந்தாள்.

இப்ப பவித்திராவுக்கு பதினாறு வயதாம். பாவம்... கடந்த காலப் போரின் போது தாயையுமிழந்த பிள்ளை. படிப்பிலும் நல்ல கெட்டிக்காரி. தான் படிச்சு ஒரு ரீச்சராக வர வேண்டுமென்று என்ரை மகளுக்குச் சொல்லுமாம். இது போல இன்னும் எத்தனையோ கற்பனைகளிலை இருந்திருக்கும். தங்கச்சிலை மாதிரி... பவித்திராவின்ரை வடிவிலை இங்கை வேறு ஆர் இருக்கினம்...? எல்லாம் ஒரு இரவோடை முடிஞ்சு போச்சு.

நாலைந்து பேர் சேர்ந்துதான் இராத்திரி இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறான்கள். இவன்கள் மனித உருவத்திலையுள்ள மிருகங்கள். இவன்களிலை ஒருவனாவது பெண் சகோதரத்துடன் கூடப் பிறக்காதவர்கள் போலயிருக்கு. அந்த இடத்திலை பேப்பர்களை விரிச்சுப் போட்டு கனநேரமாய் இருந்த அறிகுறிகள் இருக்குதாம். பவித்திராவை பாலியல் வல்லுறவுக்குப் பிறகுதான் கொலை செய்திருக்கிறான்கள் என்று கோமதி சொன்ன போது அவள் கண்கள் கசிந்தன.

இப்ப எங்கை பார்த்தாலும் உந்தக் கொடுமைதான் நடக்குது. இதுக்கு எவருமே முடிபு கட்டுறதாகத் தெரியவில்லை. தொடர் கதையாகத்தான் இருக்கு. இந்தப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வயதைக் கூட பார்க்கிறான்களில்லை. போன கிழமை இந்தியாவிலை எழுபது வயதான ஒரு மத போதகப் பெண்ணை ஒரு கூட்டம் போய்வல்லுறவுக்குட்படுத்திப் போட்டுப் போனதாகப் பேப்பரிலையிருக்கு என்றாள் அங்கு நின்ற கவிதா.

உது மட்டுமா? உப்பிடி எத்தனையோ சம்பவங்கள் நடத்திட்டுது. கவிதா... உதையெல்லாம் இனிமேலும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்காமல் வன்முறைகளுக்கெதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேணும். எதற்கும் முன்னர் அறிவித்தபடி நாளைக்குப் பின்னேரம் மாதர்சங்கக் கூட்டம் நடைபெறும். அங்கே இது பற்றிக் கதைத்து ஒரு முடிபு எடுப்பம் என்று சொல்லிக் கொண்டே கோமதி நடந்தாள்.

அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்தில் அக் கிராமத்திற்கான மாதர் சங்கக் கூட்டம் ஆரம்பமானது. ஐம்பது பேருக்கு மேற்பட்ட பெண்கள் சமூகமளித்திருந்தனர். எல்லோர் முகத்திலும் ஒருவித பயமும் சோகமுமே படர்ந்திருந்தது. கூட்டம் தொடங்கி சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல் போன்ற வழமையான விடயங்கள் முடிந்த பின் கோமதி சொன்னாள்.

நேற்றிரவு நடந்த சம்பவத்தைப் பார்த்தால் பெண்கள் வாழ முடியாத நிலை உருவாகும் போலையிருக்கு. இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான போராட்டத்தையும் நாமே தீவிரப்படுத்த வேண்டும் என்றாள்.

உண்மைதான் முன்னொரு காலத்திலை ஆண்கள், பெண்களைத் தெய்வமாக மதித்தார்கள். ஆனால் இன்றைய இளைஞர்கள் சினிமாவில் பெண்களைக் காட்சிப்பொருளாகவும் போதைப்பொருளாகவும் மதிக்கிறார்கள் என்று வாசுகி மேலும் தொடர்ந்தாள்.

இப்ப அநேகமான வியாபார நிலையங்களில் பெண்களைத்தான் விளம்பரத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். இதைவிட எல்லாப் புடைவைக் கடைகளையும் நகைக் கடைகளையும் பாருங்கள். கடைகளின் பெயர்களுடன் அழகான பெண்களின் படங்களையும் காட்சிப்படுத்துகிறார்கள். இன்னும் சொன்னால் நன்னெறி காக்கும் சில பத்திரிகைகளைத் தவிர ஏனைய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் முதற் பக்கத்தில் பெண்களின் படங்களையும் காட்சிப்படுத்துகிறார்கள். உட்பக்கங்களில் சினிமா நடிகைகளின் அரைநிர்வாணப் படங்களையும் நீச்சலுடைக் காட்சிகளையும் பார்க்கக் கூடியதாக இருக்கும். சினிமாப் படங்களில் நடிக்கும் நடிகைகள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே அரைகுறை ஆடைகளுடன் நடிக்கிறார்கள். இதைக் கண்டிக்க வேண்டிய பத்திரிகைகள் அக்காட்சிகளை தங்கள் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்கிறார்கள். இப் பத்திரிகைகளில் ஆண்களின் படங்களை முன் பக்கத்திற் போட்டால் என்ன? இல்லையேல் இயற்கைக் காட்சிகள் எத்தனை ஆயிரமிருக்கு? இவைகளையும் ஒவ்வொன்றாகக் காண்பிக்கலாமே?

இப்படியே கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இளம் பெண்களின் படங்களை காட்சிப்படுத்துவதினால் ஏற்படும் தீமைகள் பற்றி யாருக்காவது தெரியுமா?

வாலிபப் பராயத்தினரின் மனத்திரையில் இப்படங்கள் அடிக்கடி பதிவதினால் பாலியல் உணர்வுகள் தூண்டப்படுவதாகவும் இதனாலேயே பெண்கள் மீது பாலியல் கொடுமைகள் நிகழ்வதாகவும் அண்மையில் நடந்த ஆய்வொன்றின் முடிபு தெரிவிக்கின்றது என்றாள் வாசுகி.

இதைக் கேட்டவுடன் மாதர் சங்கத் தலைவியான தர்சினி சொன்னாள். வாசுகி கூறியவற்றிலும் உண்மையிருக்கலாம். ஆனால் உதைவிட மதுபானமும் போதைப் பொருட்களின் பாவனைதான் பாலியல் வல்லுறவுக்கு வழிவகுக்கிறதென்பதைப் பல வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்றாள்.

அப்போது தர்சினியக்கா சொல்வது முற்றிலும் உண்மையானதே என்று அங்கிருந்த பெண்கள் யாவரும் ஆமோதிக்க அவள் மேலும் தொடர்ந்தாள்.

இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடலின் முடிவின்படி பாலியல் வல்லுறவுக்குக் காரணமாக இருக்கும் பெண்களின் படங்களைக் காட்சிப்படுத்தலைத் தவிர்த்தல், மதுபானம் போதைப் பொருள் ஆகிய இரண்டினது விற்பனையை முற்றாகத் தடை செய்தல் வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி எங்கள் பகுதி பிரதேச செயலரிடம் கொடுப்போம்.

அவர் இத் தீர்மானத்தை மகளிர் விவகார அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து எமது தீர்மானத்தை நிறைவேற்றுவார். இல்லையேல் பெண்களை பாலியல் வல்லுறவிலிருந்து பாதுகாப்பது எப்படி? என்று அவர்கள் வேறொரு தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்துவார்கள் என்று தர்சினி சொல்லி முடிக்க அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள்.

சி.காசிப்பிள்ளை
(அல்லாரை, கொடிகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

## கருத்துக்கணிப்பில் நயன்தாரா, ஸ்ருதியை

### பின்னுக்கு தள்ளிய எமி ஜாக்சன்



சமீபத்தில் விரும்பத்தக்க நடிகர் என்று ஒரு கருத்துக் கணிப்பை பிரபல இணையத்தளம் ஒன்று நடத்தியது. இதில் அஜித் முதல் இடத்தில் இருக்கிறார் என்று அறிவித்தனர். இந்நிலையில் அடுத்ததாக விரும்பத் தக்க நடிகை என்ற பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் முன்னணி நடிகைகளான நயன்தாரா, சமந்தா, ஸ்ருதிஹாசன் என அனைவரையும் பின்னுக்கு தள்ளி எமிஜாக்சன் முதலிடம் பிடித்தார். இவரின் நடிப்பில் வெளியான ஐ படம் கலவையான விமர்சனங்களை சந்தித்தாலும், விக்ரமைப் போலவே இவரது நடிப்பும், கவர்ச்சியும் அனைவரையும் கவர்ந்தது.

இந்த பட்டியலில் ஸ்ருதிஹாசன் 2ஆவது இடத்தையும் சமந்தா 3ஆவது இடத்தையும் தமன்னா 4ஆவது இடத்தையும் பிடித்தனர். நயன்தாரா 7ஆவது இடத்திலும், ஹன்சிகா 10ஆவது இடத்திலும், த்ரிஷா 11ஆவது இடத்திலும் உள்ளனர்.

# பீனிக்ஸ் பறவை விக்ரம் பிறந்தநாள் ஸ்பெஷல்

தமிழ் சினிமாவின் உச்சத்தை தொட என்றுமே அதிர்ஷ்டம் என்ற வார்த்தை போதாது. இதற்கு மேல் எங்கு கடின உழைப்பு இருக்கிறதோ அவர்களால் தான் உச்சத்தை தொட முடியும். அப்படிப்பட்ட ஒரு கலைஞன் தான் சீயான் விக்ரம்.

சினிமா பின்னணியில் இருந்து விக்ரம் வந்தாலும் தன்னை ஒரு நடிகனாக நிலை நிறுத்த அவர் மிகவும் சிரமப்பட்டார். ஆரம்ப காலத்தில் சில மலையாள படங்களில் தலையை காட்டி, பின் மீரா, புதிய மன்னர்கள் போன்ற ஒரு சில படங்களில் நடித்தார். ஆனால், இதில் எந்த படமும் அவருக்கு கைகொடுக்கவில்லை, இதனால் சினிமாவிற்கு பின் தன் சோகத்தை அடக்கி வைத்துக் கொண்டு ஒரு டப்பிங் ஆர்டிஸ்டாக வலம் வந்தார். ஏன் இன்று தமிழகமே தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் அஜித்திற்கு முதல் படத்தில் டப்பிங் கொடுத்தது விக்ரம் தான்.






இதுமட்டுமின்றி கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன், குருதிப் புனல், மின்சார கனவு, காதலன் போன்ற பல படங்களில் கதா நாயகர்களுக்கு குரலாக இருந்தவர்.

பின் இவரின் நிழல் பாலாவின் பார்வையில் விழ, சேதுவாக விக்ரம் மறுபிறவி எடுத்தார். இப்படத்தில் இவரின் நடிப் பாற்றலை கண்ட கோலிவுட்டே, இப்படி ஒரு நடிகனையா நாம் துரத்தினோம் என்று தலை குனிந்தது.

இதை தொடர்ந்து இவர் நடித்த அனைத்து படங்களும் சுப்பர் ஹிட் ஆக, புகழின் உச்சிக்கு சென்றார். அதிலும் அந்நியன், தெய்வத் திருமகள், காசி ஆகிய படங்களில் இவரின் நடிப்பு மெய் சிலிர்க்க வைத்தது.

இதற்கெல்லாம் உச்சமாக ஐ படத்தின் இவரின் டெடிக்கேட்டான (Dedicate) நடிப்பு ஒவ்வொருவரையும் கண்கலங்க வைத்தது.

மேலும், பிதாமகன் படத்திற்காக தேசிய விருதையும், 6 முறை பிலிம் பேர் விருதையும் வென்றவர். இவரின் நடிப்பு, புகழ், விருது ஆகியவை உச்சத்தை தொட்டாலும் அவரின் வார்த்தை என்னமோ (அதுக்கு மேல) சினிமாவில்



Hatters என்று இல்லாத நடிகர் இவர் மட்டும் தான், இவரை பிடிக்காதவர் என்று சொல்ல ஒருவரும் இங்கு இல்லை.

ரசிகர்கள் மட்டுமன்றி தமிழ் சினிமா பிரபலங்கள் அனைவருக்கும் இவர் Favourite தான். எத்தனை தோல்வி வந்து கீழே விழுந்தாலும், பீனிக்ஸ் பறவை போல் மீண்டு எழுந்து வானத்தை நோக்கி பறந்து கொண்டிருக்கும் சீயான் விக்ரம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்வதில் சினி உலகம் மகிழ்ச்சியடைகிறது.

# மாஸ் வெளியீட்டு திகதி அதிகாரபூர்வ தகவல்





நடிகர் சூர்யா நடிப்பில் வெற்றி பட இயக்குநர் வெங்கட்பிரபு இயக்கி வரும் படம் மாஸ்.

இப்படத்தின் அனைத்து படப்பிடிப்புகளும் முடிவடைந்து Post Production வேலைகள் மிக வேகமாக நடந்து வருகிறது.

படம் தொடங்கிய போது படத்தை மே முதலாம் திகதி விடுமுறை நாட்களில் வெளியிடுகிறோம் என்று அறிவித்தனர்.

ஆனால் படப்பிடிப்பு முடியாத காரணத்தினால் தள்ளிப் போனது, தற்போது படம் மே 11ஆம் திகதி வெளியாகும் என வெங்கட் பிரபு அதிகார பூர்வமாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல சிறிய படங்கள் விடுமுறை மாதமான மே மாதத்தில் எப்படியாவது வெளியிட வேண்டும் என்று போராடி வருகின்றன. இந்நிலையில் மாஸ் திரைப்படம் வெளியாக இருப்பதால் அவை கொஞ்சம் சற்றே யோசிக்கும்.

மேலும் மாஸ் படத்தின் பாடல் வெளியீட்டு விழாவை இந்த மாத இறுதிக்குள் பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழுத்தடிக்கப்படும் உள்நாட்டு விசாரணை

இலங்கையில் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்நாட்டு விசாரணை ஒன்றை மேற்கொள்வோம் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதி கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்கத் தொடங்கியுள்ளது.

உள்நாட்டு விசாரணைகளின் மூலம், இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்கால மீறல்களுக்கு பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே, மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க கூட்டணியால் வாக்குறுதி அளிகக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு எந்தளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க கூட்டணி அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டத்துக்குள் உள்நாட்டு போர்க்குற்ற விசாரணையை ஆரம்பிக்கும் விவகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், கிட்டத்தட்ட 100 நாட்களை எட்டும் நிலையை அடைந்து விட்ட அரசாங்கம், உள்நாட்டு போர்க்குற்ற விசாரணை என்ற வாக்குறுதியை வைத்து சர்வதேச சமூகத்தை தன்வசப்படுத்திக் கொண்டுள்ளபோதிலும், உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்கும் செயலுக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம், இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து குறுகிய காலமே ஆகியுள்ளது என்றும் தாம் உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதற்கு கால அவகாசம் அளிக்கப்பட வேணடும் என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த மாதம் வெளியிடப்பட்டிருக்க வேண்டிய, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையை பிற்போடும்படி கோருவதற்கே அவர் அந்த கால அவகாசத்தை கோரியிருந்தார். அதற்கமையவே, வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் வரைக்கும்- விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது பிற்போடப்பட்டது.

உள்நாட்டு விசாரணையை நடத்தப்போகிறோம் என்று கூறி கால அவகாசம் கேட்ட இலங்கை அரசாங்கம், இந்த உள்நாட்டு விசாரணையை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகளை இதுவரைக்கும் தேடத் தொடங்கியிருக்க வேண்டும்.

இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகிவிட்டபோதும், உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நகர்வுகள் ஓரடிகூட நகர்ந்ததாக தெரியவில்லை. கடந்த மாதம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரித்தானியாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது, பி.பி.சி.க்கு அளித்திருந்த பேட்டியில், இன்னும் ஒரு மாத காலத்துக்குள் உள்நாட்டு போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

'போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை இன்னும் ஒரு மாதத்துக்குள் நிறுவ முடியும் என்று நம்புகிறேன். சர்வதேச அழுத்தங்கள் இருந்தாலும், ஐ.நா. விசாரணையாளர்கள் இதில் தொடர்புபடமாட்டார்கள்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்கும் இந்த உள்நாட்டு விசாரணைக்குழு, காத்திரமாகவும் சமமாகவும் சட்ட ரீதியாகவும் நடுநிலையாகவும் விசாரணைகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன். ஐ.நா.வின் ஆலோசனைகள் பெறப்படும். ஆனால், இந்த விசாரணையில் அவர்களின் தலையீடுகள் தேவையற்றது.' என்றும் அவர் கூறியிருந்தார். இந்தப் பேட்டி வெளியாகி ஒரு மாதத்துக்கும் மேலாகிவிட்டது. ஆனால், இன்னமும் உள்நாட்டு விசாரணை ஆரம்பிக்கப்படவோ, அதற்கான அறிவிப்பு ஏதும் வெளியிடப்படவோ இல்லை. இதற்கு முன்னர், உள்நாட்டு போர்க்குற்ற விசாரணைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலவரம்பு எதையும் அறிவிக்கவில்லை.

ஆனால், பி.பி.சி. பேட்டியின்போது, அவர் ஒரு மாதத்துக்குள் உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்கப் போவதாக முதல்முறையாக ஒரு காலவரம்பை அறிவித்திருந்தார். ஆனால், அந்த ஒரு மாத காலவரம்பு ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. இந்த நிலையில், அமெரிக்காவிலிருந்து வெளியாகும் உலகப்புகழ் பெற்ற ரைம் சஞ்சிகைக்கு அளித்திருந்த பேட்டியில், மற்றொரு கால அவகாசத்தை அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கான பொறிமுறை பற்றிய விபரங்களை வரும் ஜூன் மாத இறுதியிலேயே வெளியிடவுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். 'இந்த விவகாரத்தை கையாள்வதற்கான மிகவும் வலுவான உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கவுள்ளோம் என்பதை ஐ.நா.வுக்கு நாம் அறிவித்துள்ளோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஊடாக ஆலோசனைகளை நாம் கேட்டுள்ளோம்' என்றும் அவர் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், ரைம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி பற்றிய விபரங்கள் வெளியாகிய ஒரு சில நாட்களிலேயே பிரதி வெளிவிவகார அமைச்சரான அஜித் பெரேரா, மற்றொரு கால அவகாசத்தை அறிவித்திருக்கிறார். அது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய இரண்டாவது காலவரம்பிலிருந்து மேலும் மூன்று மாதங்களுக்கு பின்தள்ளபபடும் வகையில் அமைந்திருந்தது. அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் மாத அமர்வுக்கு முன்னதாக உள்நாட்டு விசாரணைக்குழு உருவாக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்பதை பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா எடுத்துக் கூறியிருக்கிறார்.

'போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க நடுநிலையான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவதாக ஐ.நா. அதிகாரிகளுக்கு நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம். சர்வதேச விசாரணை தேவையற்றது என்றும் எம்மிடம் சுதந்திரமான நீதித்துறை மற்றும் சுதந்திரமான பொதுச் சேவைகள் உள்ளன என்றும் ஐ.நா.விடம் தெரிவித்துள்ளோம்.

நீதி, காவறதுறை மற்றும் ஏனைய அமைப்புகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு ஐ.நா. எம்மிடம் கேட்டது. எனவே, உள்நாட்டு விசாரணையை நாம் மேற்கொள்வோம். இது ஒரு உள்நாட்டு விவகாரம். இதில் எந்தவொரு வெளிநாட்டு தலையீடுகளுக்கும் இடமளிக்கக் கூடாது என்பதால், நடுநிலையான உள்நாட்டு விசாரணைக்குத் தயாராக இருக்கிறோம். எவ்வாறு நாம் உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ளப் போகிறோம் என்பது குறித்த அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

அதற்கு வரும் செப்டெம்பர் மாத அமர்வில் அனுமதி கிடைத்த பின்னரே, உள்நாட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்' என்று அவர் தெரிவித்துள்ளார். இதிலிருந்து, அரசாங்கம் உள்நாட்டு விசாரணை விவகாரத்தை இப்போதைக்குத் தொடங்காமல் இழுத்தடிக்கத் தயாராகிவிட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். எதற்காக அரசாங்கம், உள்நாட்டு விசாரணையிலிருந்து பின்வாங்க முனைகிறது என்ற கேள்வி எழுகிறது.

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் ஜெனீவாவில் வைத்து, போரின்போது மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும், நம்பகமான- நடுநிலையான உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பித்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கேற்ற தற்துணிவைக் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது.

ஏனென்றால், போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை என்றால், அதில் பிரதானமாக, முன்னைய அரசாங்கத்தில் இருந்து போரை நடத்தியவர்களும், போரில் ஈடுபட்ட படையினர் மற்றும் தளபதிகளும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்படும். அத்தகையதொரு நிலை ஏற்படுவதை சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சிங்கள மக்களும்கூட உள்நாட்டு விசாரணைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருந்தாலும், சிங்கள மக்களின் ஆதரவை இழக்க நேரிடலாம் என்ற கவலை அவருக்கு உள்ளதை மறுக்க முடியாது. உதாரணத்துக்கு, வடக்கில் உள்ள இராணுவ முகாம்களைக் குறைத்து, அந்த முகாம்கள் அமைந்துள்ள காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் விடயத்தில், சிங்கள மக்களின் ஆதரவு பறிபோய் விடும் என்ற அச்சத்தில்தான் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடும்போக்கை கடைப்பிடிப்பதாக கூறப்படுகிறது.

போர்க்குற்ற விசாரணை விவகாரத்திலும், வெளிப்படையான எந்த முன்னகர்வையும் மேற்கொள்வதன் மூலம், நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சிக்குப் பாதகமான நிலை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் தயாராக இல்லை. இதனால், உள்நாட்டுப் போர்க்குற்ற விசாரணை விவகாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழுத்தடிக்க அரசாங்கம் முயற்சித்திருக்கலாம்.

எவ்வாறாயினும், செப்ரெம்பருக்கு பின்னர்தான், உள்நாட்டு விசாரணை உருவாக்கப்படும் என்ற பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேராவின் கருத்தில் பல முரண்பாடுகள் உள்ளதை அவதானிக்கலாம். உள்நாட்டு விசாரணையை எவ்வாறு நடத்தப் போகிறோம் என்ற திட்டத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் முன்வைத்து, அதன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே, அந்த விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார்.

ஆனால், இலங்கை அரசாங்கத்தை நம்பகமான நடுநிலையான உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறுதான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்திடம் கூறியுள்ளதே தவிர, அந்த விசாரணைக்குத் தமது ஒப்புதலைப் பெற வேண்டும் என்று ஒருபோதும் கூறவில்லை. அதைவிட இது உள்நாட்டு விவகாரம், வெளியாரின் தலையீட்டுக்கு இடமில்லை என்று கூறும் அரசாங்கம், உள்நாட்டு விசாரணைக்கு எதற்காக சர்வதேச அரங்க ஒன்றில் அனுமதியைப் பெற வேண்டும்? அது நாட்டின் இறைமையை அடகு வைக்கும் செயலாக அமையாதா?

இந்த இரண்டு கேள்விகளையும் வைத்து நோக்கும்போது, செப்ரெம்பருக்குப் பின்னர்தான் உள்நாட்டு விசாரணை என்று தீர்மானித்துவிட்ட அரசாங்கம், அதற்குத் தேவையான ஒரு காரணத்தைத் தேடிப்பிடித்துள்ளதாகவே தெரிகிறது. அதாவது இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடியும் வரையில் சர்ச்சைக்குரிய இந்த விவகாரத்துக்குள் நுழையாமல் தவிர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவே தோன்றுகிறது.

அதேவேளை, வரும் செப்ரெம்பருக்குப் பின்னர்தான், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்கப் போவதான அரசாங்கத்தின் கருத்துக்கு இன்னமும் சர்வதேச அரங்கிலிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் இந்த விவகாரத்தில், எத்தகைய கருத்தை வெளியிடும் என்று தெரியவில்லை.

ஆனால், சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில், இலங்கை அரசாங்கம் இப்படியொரு முடிவை எடுத்தால், அதற்காக கவலை கொள்ளும், தாம் ஏமாற்றப்பட்டதாகவும் இலங்கை அரசு ஏமாற்ற முனைவதாகவும் ஒரு உணர்வு தோன்றும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஏனென்றால், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் இலங்கைக்கு ஆறு மாத கால அவகாசத்தைக் கொடுத்து, விசாரணை அறிக்கையை வெளியிடுவதை பிற்போட்டபோதே, இந்தக் கால அவகாசத்துக்கள் உள்நாட்டு விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கூறியிருந்தார். அதுபோலவே, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் முக்கிய பிரமுகர்கள், பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் எல்லோருமே வரும் செப்ரெம்பருக்குள் இலங்கை அரசாங்கம் உள்நாட்டு விசாரணையை ஆரம்பித்துவிடும் என்றே நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறிக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் தற்போதைய அரசாங்கம், உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்கத் தவறினால், அது, சர்வதேச சமூகத்துக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளிக்கும். இது தொடர்பான அவர்களின் பிரதிபலிப்பு எவ்வாறாக இருக்கும் எனறு கூற முடியாது போனாலும், தற்போதைய அரசாங்கம் குறித்த எதிர்பார்ப்புகளையும் மதிப்புகளையும் அது நிச்சயம் சீரழித்துவிடும்.

தற்போதைய அரசாங்கத்தைப் பற்றி மேற்குலக நாடுகளும் அவற்றின் தலைவர்களும் புகழ்ந்துரைத்து வருகின்ற நிலையில், உள்நாட்டு விசாரணை விவகாரத்தில், கொடுத்த வாக்கை காப்பாற்றத் தவறினால், மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் சர்வதேச அரங்கில் மதிப்பை இழந்துவிடும். அது, எதிர்காலத்தில், இலங்கைக்கு பல சவால்களைக் கொண்டுவந்தாலும் ஆச்சரியமில்லை. அதற்காக மஹிந்த ராஜபக்ஷ காலத்து நிலைமை வரும் என்றுகூற முடியாது போனாலும், தற்போதுள்ளதை விட கடினமானதொரு சூழலுக்குள் அரசாங்கம் பிரவேசிக்க நேரிடும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணே!



ஒரு பையன் ஒரு கண்ணு தெரியாத பெண்ணை லவ் பண்ணினான். அந்த பெண் "என்னை கை விடமாட்டியே என்று கேட்டாள்.

அவன்" நிச்சயமாக உன்னை கல்யாணம் செய்து கொள்வேன்" என்று சொன்னான். ஒரு நாள் அந்த பெண்ணிற்கு ஆபரேசன் நடந்து பார்வை வந்துவிட்டது. அப்போ பையன் கேட்டான்" இப்போ கல்யாணம் செய்து கொள்ளலாமா" ?

அந்த பெண்ணிற்கு அதிர்ச்சி அந்த பையனுக்கு பார்வை இல்லை. அதனால அந்த பெண் கல்யாணம் பண்ணிக்க முடியாது என்று சொல்லிவிட்டாள். சிறிது தூரம் சென்ற பிறகு அவன் அவளிடம் சொன்னான்.

"என்னை கல்யாணம் செய்ய வில்லை என்றால் பரவாயில்லை என்னுடைய இரு கண்களை பத்திரமா பார்த்துக்கோ"

# பெஞ்சனியர்...

ஒருவர் வாரந்தோறும் கோயிலுக்குச் செல்லும்போது அங்கிருந்த ஒரு பிச்சைக் காரனுக்கு ஒரு ரூபாய் போடு வதை வழக்கமாகக் கொண்டி ருந்தார்.

6 மாதம் கழிந்த பிறகு, அவர் அந்தப் பிச்சைக்கார னுக்கு 75 பைசாக்கள் மட்டும் போட்டார்.

ஒரு வருடம் கழிந்தது. இப்போது அவர் அந்தப் பிச்சைக் காரனுக்கு 50 காசுகள் மட்டும் போட்டார். அடுத்த 2 வருடங் களில் இதுவும் குறைந்து அவர் பிச்சைக்காரனுக்கு 25 காசுகள் மட்டுமே போட்டார்.

இத்தனை நாள் பொறுத்த பிச்சைகாரன்(ர்), (அவருக்கும் வயசாகிடுச்சில்ல!) ஏன் இப்படி படிப்படியாக குறைந்த காசுகளைப் பிச்சை போடுகிறார் எனக் கேட்க,

அந்த மனிதரும் சின்ஸியராக, "மிஸ்டர் பெக்கர், முதலில் நான் பேச்சிலர், 1 ரூபாய் போட்டேன், பிறகு கல்யாணமாச்சு, பெண்டாட்டியையும் கவனிக்கணும், 75 காசு போட்டேன், பிறகு குழந்தை பிறந்தது, 50 காசு போட்டேன். இப்போ அந்தக் குழந்தையை ஸ்கூலில் சேர்க்கக் காசு சேமிக்க வேண்டியிருக்கு, அதனால் 25 காசு போடறேன்" என்றார்.

பிச்சைக்காரர் யோசித்தார். "அப்போ என் வருமானத்தில் தான் நீ குடும்பம் நடத்தறேன்னு சொல்லு" என்றார்!!

facebook

# பிரண்டப்போல யாரு மச்சி




பையன் : டார்லிங்...உனக்காக நான் அத்தனையும் இழக்கத் தயார்..

பொண்ணு : நிஜமா...?

பையன் : நிஜம்மா தான்..

பொண்ணு : உங்க அப்பா அம்மாவை விடச் சொன்னா...?

பையன் : இப்பவே விட்டுருவேன் டார்லிங்..

பொண்ணு : இந்த சிகரெட்....பீர்...?

பையன் : ஊன்னு ஒரு வார்த்தை சொல்லு செல்லம் விட்டுருவேன்

பொண்ணு : உன் பிரண்ட்ஸ்களை....?

(பையன் மௌனம்....)

பொண்ணு : என்னடா பதிலையே காணோம்?

பையன் : தங்கச்சி.... உங்கப்பா தேடிகிட்டி இருப்பாரு....பத்திரமா வீட்டுக்கு போம்மா...போ.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 345

Search for people, places and things · Nagendram · Home

சத்தியா துவாரகன்




ரஞ்சித் குமார்





லக்சி மோகன்




சக்தி வேல்




சுதன் லோகன்




பாலா துரைசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சென்னையின் வெற்றியும் மும்பையின் தோல்வியும்




களத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுத்து வீரர்கள் ஒன்றுபட்டு செயற்படுவதே சுப்பர் கிங்ஸின் வெற்றிப்பயணம்...

இந்திய அணியின் இராசிக்கார அணித்தலைவர் டோனி ஆவார்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் எட்டாவது ஐ.பி.எல். தொடரில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸின் வெற்றி வேட்டை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இதுவரைக்கும்நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் ஒரு அணிக்காக தொடர்ந்து தலைமை தாங்கிய ஒரே ஒரு அணித்தலைவர் தோனி மட்டும்தான். 8ஆவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் போட்டித் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதில்நடப்புச்சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், ராஜஸ்தான்றோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், ஐதராபாத் சன்ரைசர்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ் ஆகிய அணிகள் பங்கேற்றுள்ளன. டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ்அணி முதல் ஆட்டத்தில் டெல்லி டேர் டெவில்ஸ்சை அசிஸ் நெஹ்ராவின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் வெற்றிக் கொண்டது. அப்போட்டியில் இறுதிப் பந்தில் வெற்றியை டெல்லி டேர் டெவில்ஸ் விட்டுக்கொடுத்தது.

தட்டுத்தடுமாறி வெற்றிக் கணக்கை ஆரம்பித்த டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அடுத்ததாக மக்கலத்தின் அதிரடியான சதம் மூலம் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியை இலகுவாக வென்றது.

வெற்றிப் புத்துணர்ச்சியுடனும் ஐந்து நாள் ஓய்வுடனும் மும்பை இந்தியன்ஸ்சை அதன் சொந்த மைதானமாகிய வான்கடாவில் சந்தித்தது. அதிரடி சூரர்களாகிய டெலோன் ஸ்மித், பிரண்டன் மக்கலம், புதுமாப்பிள்ளை சுரேஸ் ரெய்னா ஆகியோரின் அதிரடி மூலமும் அசிஸ் நெஹ்ராவின் துல்லியமான பந்துவீச்சும் ஒன்று சேர மும்பை இந்தியன்ஸ்சை வென்று ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

இப்படியாக டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ்சின் வெற்றி வேட்டை தொடர்கிறது.

ஆனால் மறுபுறமோ முகேஸ் அம்பானியின் மனைவியின் மும்பை இந்தியன்சோ தனது வெற்றிக் கண க்கை இன்னும் தொடங்காமலே உள்ளது. இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், இருமுறை உலகக்கிண்ண த்தை அவுஸ்ரேலியாவுக்கு வென்று கொடுத்த ரிக்கிப் பொன்டிங், இந்தியாவின் நட்சத்திர சுழல் பந்து வீச்சா ளராக விளங்கிய அனில் கும்ளே, தென்னாபிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் உலகின் தலை சிறந்த களத்தடுப்பாளராக விளங்கிய ஜோன்டி றோட்ஸ் என ஒருபெரிய கிரிக்கெட் குழாமை கொண்டது மும்பை இந்தியன்ஸ்.

இலங்கை அணியின் வேகப்புயலும் யோக்கர் மன்னனுமாகிய லசித் மலிங்க, அதிரடி ஆட்டக்காரர் கிரான் பொலாட், சகலதுறை ஆட்டக்காரர் கொரி அன்டர்சன் என சிறந்த வெளிநாட்டு வீரர்களை கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி. இதுவரைக்கும் கொல் கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், ராஜஸ்தான் றோயல்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளிடம் தோல்விகண்டுள்ளது.

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|
| ராஜஸ்தான் | 4 | 4 | 0 | 0 | +0.497 |
| சென்னை | 3 | 3 | 0 | 0 | +1.404 |
| கொல்கத்தா | 2 | 1 | 1 | 0 | +0.116 |
| டெல்லி | 3 | 1 | 2 | 0 | +0.040 |
| பஞ்சாப் | 3 | 1 | 2 | 0 | -0.223 |
| ஐதராபாத் | 3 | 1 | 2 | 0 | -0.358 |
| பெங்களூர் | 2 | 1 | 1 | 0 | -0.502 |
| மும்பை | 4 | 0 | 4 | 0 | -1.005 |

(17 ஆம் திகதி வரையிலான போட்டி அட்டவணை)

தொடர்ச்சியான தோல்விகளால் மும்பை இந்தியன்ஸ் வீரர்களின் தன்னம்பிக்கை குறைந்துள்ளதாக கப்டன் ரோகித் சர்மாவும் தலைமை பயிற்சியாளர் ரிக்கிப் பொன்டிங்கும் ஒப்புக்கொண்டுள்ளனர். ரோகித் சர்மா கூறிய போது, போட்டிக்கு நாங்கள் தயாராகும் விதம் எல்லாம் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் எங்களது திட்டத்தை களத்தில் செம்மையாக செயற்படுத்த முடியவில்லை. கடந்த வருடம் கூட இதேபோன்று தான் ஆரம்பத்தில் தோற்றோம். ஆனால் சரிவில் இருந்து மீண்டுவிட்டோம் என்றார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அணித்தலைவர் டோனி எப்போதும் களத்தில் அமைதியாக இருப்பார். அதனால் தான் அவரை கப்டன் கூல் என அழைக்கிறார்கள்.

எந்தவொரு சூழ்நிலையிலும் அமைதியாக இருந்து, நிலைமைக்கு ஏற்ப முடிவெடுத்து, அணியை ஒருங்கிணைத்து வழி நடத்துவதே சென்னை சுப்பர் கிங்ஸ்சின் வெற்றிக்கு வித்திடுகின்றது.

அதேநேரம் திறமையான வீரர்கள் இருந்த போதிலும் ஒருங்கிணைந்து விளையாடததே மும்பை இந்தியன்ஸ் அணியின் தோல்விக்கு வழி வகுக்கின்றது. செம்மையான திட்டமிடலுடன் வீரர்களின் ஒருங்கிணைந்த விளையாட்டின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தனது வெற்றிக் கணக்கை ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் இம்முறையும் வேறு ஒரு அணி சம்பியன்பட்டம்வெல்லவாயை பிளந்து வேடிக்கை பார்க்க வேண்டியது தான் மிச்சம்.

க.மதீசன்




திறமையான வீரர்கள் இருந்தபோதிலும் ஒருங்கிணைந்து விளையாடாததே மும்பை அணியின் தோல்விக்கு காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org